www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com

# சுராவின்
# தமிழ் உரைநூல்

## 10ஆம் வகுப்பு

7 இயல்கள் கொண்ட புதிய பதிப்பு

## சிறப்பம்சங்கள்

- புதிய பாடநூலின்படி, பாடப்பகுதிகளில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தெளிவாகவும் எளிமையாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.
- திறன் அறிவோம் பகுதி வினாக்கள் பிரிக்கப்பட்டு செய்யுள், உரைநடை, விரிவானம், இலக்கணம் என அந்தந்த பகுதிகளில் புத்தக வினா என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினாக்கள் **கூடுதலாக விடைகளுடன் உள்ளே தரப்பட்டுள்ளன.**
- கற்பவை கற்றபின், மொழியோடு விளையாடு, மொழியை ஆள்வோம், மொழித்திறன் பயிற்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள **அனைத்து பயிற்சிகளுக்கும் முழு விடைகள் தரப்பட்டுள்ளன.**
- அரசு மாதிரி வினா 2019 (அ.மா.வி.), காலாண்டுத் தேர்வு 2019, 2023 & 2024, அரையாண்டுத் தேர்வு 2019, 2023, அரசு துணைத்தேர்வு வினாத்தாட்கள் செப்டம்பர் 2020, 2021, முதல் திருப்புதல் தேர்வு 2022 & 2024, இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2022, அரசு பொதுத் தேர்வு – மே 2022, உடனடித் தேர்வு – ஆகஸ்ட் 2022, ஜூன் 2023 & ஜுலை 2024, அரசு பொதுத் தேர்வு ஏப்ரல் – 2023, மார்ச் 2024 மற்றும் PTA வினாத்தாட்கள் 1 முதல் 6 வரையிலான வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரையாண்டுத் தேர்வு – டிசம்பர் 2024 வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை



For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

# பதிப்பாசிரியர் உரை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. – திருவள்ளுவர்

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பத்தாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

திறன் அறிவோம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

**மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.**

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

குறிப்பு:

- பாடப்பகுதியை முழுமையாகப் படிக்கவும். கதை போல உள்வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.
- தலைப்பு, ஆசிரியர் குறிப்பு, நுழையும்முன், சொல்லும் பொருளும், பாடலின் பொருள், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், பெட்டிச் செய்தி, நூல்வெளி என அனைத்தையும் ஒரு மதிப்பெண் நோக்கில் படிக்கவும்.
- ஒரு மதிப்பெண் வினாக்களை நன்றாகப் படித்தால் குறுவினா, சிறுவினா, நெடுவினா தேர்வு எழுதும்போது உங்களுக்கு கைக்கொடுக்கும்.
- மனப்பாடப் பாடல்கள் மற்றும் இலக்கணப் பகுதிகளை எழுதிப் பார்த்தல் நலம்.
- சுய மதிப்பீடு பயிற்சி நூலில் உள்ள வினாக்களுக்கு விடையெழுதி பயிற்சி பெறுக.
- தேர்வில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு கேள்விகள் கேட்கப்பட்டால் கூடுதல் செய்திகள் தவிர்த்து எழுதினால் போதுமானது.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ஆகிய பகுதிகளில் நெடுவினாக்களுக்கு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதுதல் முழு மதிப்பெண் பெற வழி வகுக்கும்.

**படித்ததை மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்திக் கொள்.**

**ஆழ்ந்து படியுங்கள்! வெற்றி உங்களுக்கே!!**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

# பொருளடக்கம்

**மனப்பாடச் செய்யுள் பகுதி** ...................... 1-4

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி, மனிதம் அமுதஊற்று | * அன்னை மொழியே! (செய்யுள்) | 5-64 | ஜூன் |
| | | பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம் (உரைநடை) | | |
| | | * காலக்கணிதம் (செய்யுள்) | | |
| | | புயலிலே ஒரு தோணி (துணைப்பாடம்) | | |
| | | சொல் (இலக்கணம்) | | |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல், அறிவியல் உயிரின் ஓசை | கேட்கிறதா என் குரல்! (உரைநடை) | 65-106 | ஜூன் |
| | | பரிபாடல் (செய்யுள்) | | |
| | | மேகம் (செய்யுள்) | | |
| | | பிரும்மம் (செய்யுள்) | | |
| | | தொகாநிலைத் தொடர்கள் (இலக்கணம்) | | |
| 3. | பண்பாடு கூட்டாஞ்சோறு | விருந்து போற்றுதும்! (உரைநடை) | 107-164 | ஜூலை |
| | | * காசிக்காண்டம் (செய்யுள்) | | |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (செய்யுள்) | | |
| | | கோபல்லபுரத்து மக்கள் (துணைப்பாடம்) | | |
| | | தொகைநிலைத் தொடர்கள் (இலக்கணம்) | | |
| | | *திருக்குறள் (வாழ்வியல்) | | |
| 4. | கல்வி மணற்கேணி | மொழிபெயர்ப்புக் கல்வி (உரைநடை) | 165-206 | ஆகஸ்ட் |
| | | * திருவிளையாடற் புராணம் (செய்யுள்) | | |
| | | புதிய நம்பிக்கை (துணைப்பாடம்) | | |
| | | இலக்கணம்-பொது (இலக்கணம்) | | |




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 5. | கலை, அழகியல், புதுமைகள் **நிலா முற்றம்** | பன்முகக் கலைஞர் **(உரைநடை)** | 207-258 | ஆகஸ்ட் |
| | | * கம்பராமாயணம் **(செய்யுள்)** | | |
| | | பாய்ச்சல் **(துணைப்பாடம்)** | | |
| | | அகப்பொருள் இலக்கணம் **(இலக்கணம்)** | | |
| | | * திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| 6. | நாகரிகம், நாடு, சமூகம் **விதைநெல்** | சிற்றகல் ஒளி **(உரைநடை)** | 259-304 | அக்டோபர் |
| | | * சிலப்பதிகாரம் **(செய்யுள்)** | | |
| | | * முத்தொள்ளாயிரம் **(செய்யுள்)** | | |
| | | மங்கையராய்ப் பிறப்பதற்கே...**(துணைப்பாடம்)** | | |
| | | புறப்பொருள் இலக்கணம் **(இலக்கணம்)** | | |
| 7. | அறம், தத்துவம், சிந்தனை **பெருவழி** | சங்க இலக்கியத்தில் அறம் **(உரைநடை)** | 305-352 | அக்டோபர் |
| | | * தேம்பாவணி **(செய்யுள்)** | | |
| | | அக்கறை **(செய்யுள்)** | | |
| | | இராமானுசர் (நாடகம்) **(துணைப்பாடம்)** | | |
| | | பா-வகை, அலகிடுதல் **(இலக்கணம்)** | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** வாக்கியப் பிழைகளைத் திருத்துதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், தொடரை மாற்றி அமைத்தல், உவமை தொடரை சொற்றொடராக அமைத்தல் உவமை, உருவகமாக மாற்றுதல், இலக்கிய நயம் பாராட்டல், கடிதம் எழுதுதல், பொதுக் கட்டுரைகள். | | | 353-370 | |
| அரையாண்டுத் தேர்வு – டிசம்பர் 2024–25 வினாத்தாள் விடைகளுடன் | | | 371-378 | |
| **ஜனவரி - முதல் திருப்புதல் தேர்வு இயல் 1 - 6 / பிப்ரவரி - இரண்டாம் திருப்புதல் தேர்வு இயல் 7 -9 மார்ச் - இறுதி திருப்புதல் தேர்வு இயல் 1-9** | | | | |


*குறியிடப்பட்டவை மனப்பாடப் பகுதி

www.Padasalai.Net



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **36550290536** |
| Bank Name | : | **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : | Padi |
| IFSC | : | SBIN0005083 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **21000210001240** |
| Bank Name | : | **UCO BANK** |
| Bank Branch | : | Anna Nagar West |
| IFSC | : | UCBA0002100 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **6502699356** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| Bank Branch | : | Asiad Colony |
| IFSC | : | IDIB000A098 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **1154135000017684** |
| Bank Name | : | **KVB BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | KVBL0001154 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **13240200032412** |
| Bank Name | : | **FEDERAL BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | FDRL0001324 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **50200031530945** |
| Bank Name | : | **HDFC BANK** |
| Bank Branch | : | Cenotaph Road, Teynampet |
| IFSC | : | HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
Email : orders@surabooks.com Website : www.surabooks.com



www.Padasalai.Net
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

# மனப்பாடச் செய்யுள்

## அன்னை மொழியே

### அழகார்ந்த செந்தமிழே!

கனிச்சாறு (தொகுதி-1)

| இயல் - 1 | | |
|---|---|---|
| | அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!<br>முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!<br>கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்<br>மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே! | பிடிஏ-4, 6; அரை.தேர்வு 2019<br>பிடிஏ-2; செப். 2021,<br>முதல் தி.தேர்வு; மே 2022; ஜூன் 2023;<br>ஜூலை 2024 |
| | தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!<br>இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!<br>மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!<br>முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!<br>- பாவலரேறு பெருஞ்சித்திரனார் | பிடிஏ-1<br>முதல் தி.தேர்வு 2022; மார்ச் 2024 |

## காலக்கணிதம்

| இயல் - 1 | | |
|---|---|---|
| | மாற்றம் எனது மானிடத் தத்துவம்;<br>மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!<br>எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை<br>என்ப தறிந்து ஏகுமென் சாலை!<br>தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;<br>தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!<br>கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!<br>உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;<br>நானே தொடக்கம்; நானே முடிவு;<br>நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்! | பிடிஏ-3; ஏப்ரல்-2023<br><br>- கண்ணதாசன் |


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## காசிக்காண்டம்

இயல் – 3

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

இல்லொழுக்கம், (பா எண் : 17)
– அதிவீரராம பாண்டியர்

பிடிஏ–2, 5
அரையாண்டுத் தேர்வு 2023
காலாண்டுத் தேர்வு 2024

## திருக்குறள்

| | |
|---|---|
| **மெய் உணர்தல்(36)** | 4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு.<br>முதல் தி.தேர்வு 2022; ஜுன் 2023; ஜுலை 2024 |
| **பெரியாரைத் துணைக்கோடல்(45)** | 8. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே<br>நல்லார் தொடர்கை விடல். கா.தேர்வு – 2024<br>பிடிஏ–4,5; செப்.–2021; ஆகஸ்ட்–2022 |
| **கண்ணோட்டம்(58)** | 11. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்<br>கண்ணோட்டம் இல்லாத கண். அ.மா.வி 2019; பிடிஏ–2 |
| **ஆள்வினை உடைமை(62)** | 14. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்<br>பெருமை முயற்சி தரும்.<br>16. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை<br>இன்மை புகுத்தி விடும். – திருவள்ளுவர்<br>காலாண்டுத் தேர்வு 2019; மே–2022; முதல் தி.தேர்வு 2024 |

## திருவிளையாடற் புராணம்

### மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

இயல் – 4

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

– பரஞ்சோதி முனிவர்

பிடிஏ–5; செப்.–2020;
கா,தேர்வு 2023;
முதல் தி.தேர்வு 2024

பா எண் : 2644


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

மனப்பாடப் பகுதி

# கம்பராமாயணம்

## பாலகாண்டம் – நாட்டுப்படலம்

இயல் – 5

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்,
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.

செப்.–2021

பா.எண். 35

## அயோத்தியா காண்டம் - கங்கைப்படலம்

வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதொர் அழியாஅழ குடையான்.

– கம்பர்

இரண்டாம் தி.தேர்வு 2022

பா.எண். 1926

# திருக்குறள்

| | |
|---|---|
| **அமைச்சு (64)** | 4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்<br>தியற்கை அறிந்து செயல். அ.மா.வி 2019; பிடிஏ–1; அரை.தேர்வு, ஏப்ரல் 2023 |
| **பொருள்செயல் வகை (76)** | 5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்<br>பொருளல்ல தில்லை பொருள்.<br>8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்<br>றுண்டாகச் செய்வான் வினை. காலாண்டுத் தேர்வு 2023 |
| **குடிசெயல் வகை (103)** | 14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்<br>சுற்றமாச் சுற்றும் உலகு. பிடிஏ–6; இரண்டாம் தி.தேர்வு 2022 |
| **நல்குரவு (105)** | 15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்<br>இன்மையே இன்னா தது. |

www.Padasalai.Net

## சிலப்பதிகாரம்

### மருவூர்ப் பாக்கம்

இயல் – 6

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

– இளங்கோவடிகள்

அரையாண்டுத் தேர்வு 2019; பிடிஏ–1,6
ஆகஸ்ட்2022; ஜுன் 2023

இந்திரவிழா ஊரெடுத்த காதை
(அடி 18-23)

## முத்தொள்ளாயிரம்

### சேரநாடு

இயல் – 6

அள்ளல் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

## தேம்பாவணி

### இயற்கை கொண்ட பரிவு

இயல் – 7

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே. பா எண் : 2410

– வீரமாமுனிவர்

அ.மா.வி 2019; பிடிஏ–2; செப்.–2020; மே–2022
அரையாண்டுத் தேர்வு 2023;
ஜுலை 2024

★ ★ ★


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

**இயல் 1**

# அன்னை மொழியே

**கவிதைப் பேழை**

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**கரு**



* தமிழ்த்தாய் மழலையின் அழகு மிகுந்த சிரிப்பையும், சான்றோர்களின் சிறந்த பட்டறிவையும் கொண்டவள்.
* இவ்வுலகில் உள்ள எல்லாப் பொருள்களையும், தன்னுள் கவிதைகளாக உள்ளடக்கியவள்.
* இறுகிய இதயத்தையும் இனிக்கும் படி செய்பவள். அறிவைப் பெருக்கி அன்பை வயப்படுத்துபவள். இத்தகைய தமிழ் அன்னையின் பெருமையைப் பாவலரேறு பெருமை பொங்கப் பாடுகிறார்.

**ஆசிரியர் குறிப்பு**



**ஆசிரியர்** : பாவலரேறு பெருஞ்சித்திரனார்
பா + வல் + ஏறு = பாவலரேறு
பா – பாடல், வல் – வலிமை மிக்க ஏறு – ஆண் சிங்கம்
(பாடல் எழுதுவதில் ஆண் சிங்கத்தைப் போன்றவர்.)

**இயற்பெயர்** : துரை. மாணிக்கம் (இதில் – தந்தையின் பெயராகிய துரைசாமி என்பதன் சுருக்கமே துரை)

**பெற்றோர்** : துரைசாமி – குஞ்சம்மாள்

**காலம்** : 10.03.1933 – 11.06.1995 (62)

**பிறந்த ஊர்** : சேலம் மாவட்டம் – சமுத்திரம் என்னும் சிற்றூர்.

**இயற்றிய நூல்கள்** : கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம், உலகியல் நூறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி. (இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரைத் தமிழுக்குக் கருவூலமாக அமைந்தது)

**நடத்திய இதழ்கள்** : தென்மொழி, (1956) (தமிழ்ச்சிட்டு).

**சிறப்புகள்** : எழுத்தாளர், புலவர், தனித்தமிழ் ஆர்வலர். தனித்தமிழ் கொள்கையும் தனித்தமிழ்நாடு கொள்கையும் கொண்டவர். தமிழ் தேசியத் தந்தை என அழைக்கப்படுபவர் பாரதிதாசனின் தலைமாணாக்கர். இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

**நூற் குறிப்பு**

* பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி–1) தொகுப்பிலுள்ள **தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்** போன்ற இருவேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் பாடப்பகுதியாக உள்ளது.
* கனிச்சாறு 8 பாடல் தொகுதிகளை உடைய ஒரு கவிதை நூலாகும்.

**பாடல்**

**அழகார்ந்த செந்தமிழே!**

**அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

**சொல்லும் பொருளும்**

* அன்னை மொழியே – தாய்மொழியே
* அழகார்ந்த செந்தமிழே – அழகாய் அமைந்த செழுமையான தமிழே
* முன்னைக்கும் முன்னை – பழமைக்கும் பழமையாய்
* முகிழ்த்த நறுங்கனியே – தோன்றிய இனிமையான கனியே
* கடல் கொண்ட – கடலால் கொள்ளப்பட்ட
* கன்னிக் குமரி நாட்டிடையில் – குமரிக்கண்டத்தில்
* மன்னி அரசிருந்த – நிலைத்து அரசாண்ட
* மண்ணுலகப் பேரரசே – இந்தப் பூவுலகின் பேரரசே

**பொருளுரை**

தாய்மொழியே! அழகே உருவாக அமைந்த செந்தமிழே! பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய இனிமையான கனியே! கடலால் கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தில் நிலையான ஆட்சியைத் தந்த இந்த மண்ணுலகின் பேரரசே!

**விரிவான விளக்கம்**

உலகின் மிகப் பழமையான நிலப்பகுதி குமரிக்கண்டம். இது இலெமூரியாக் கண்டம் என்றும் அழைக்கப்பட்டது. அந்நிலப் பகுதி கடல்கோளால் (ஆழிப்பேரலை – சுனாமி (TSUNAMI)) மறைந்தது. அந்தத் திராவிடத்தின் தொன்மையான நிலத்தில் தோன்றிய தமிழ்மொழி செழுமையான மொழி, இனிமையான மொழி என்றும் நிலைத்து நிற்கும் மொழி என்றும், செம்மொழி என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பாடல்**

**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

**சொல்லும் பொருளும்**

* தென்னன் மகளே! – பாண்டிய மன்னனின் மகளே!
* திருக்குறளின் மாண்புகழே! – திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!
* இன்னறும் பாப்பத்தே! – இனிமையான பத்துப்பாட்டே!
* எண்தொகையே! – எட்டுத்தொகையே!
* நற்கணக்கே! – பதினெண் கீழ்க்கணக்கே!
* மன்னுஞ் சிலம்பே! – நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே!
* மணிமே கலைவடிவே! – அழகான மணிமேகலையே!
* முன்னும் நினைவால் – உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளால்
* முடிதாழ வாழ்த்துவமே – தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

**பொருளுரை**

பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே! இனிமையான பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! நல்ல பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளால் தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

**விரிவான விளக்கம்**

முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தவர்கள் தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டு வந்த பாண்டிய மன்னர்களாவர். எனினும், பாண்டிய மன்னன் மகளே! என ஆசிரியர் குறிப்பிடுகிறார். பின்னர் தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு அந்த இலக்கியங்களாகவே தமிழை உருவகப்படுத்தியுள்ளார்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

பதினெண் மேற்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களின் வடிவில் அன்னைத் தமிழ் இருக்கிறாள் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பாடல்**

**செப்பரிய நின்பெருமை!**

**செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை**
**எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?**
**முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்**
**விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்**

**சொல்லும் பொருளும்**

* செந்தமிழே! – செழுமையான தமிழே!
* உள்ளுயிரே – எமக்குள் வாழும் உயிர் போன்றவளே
* செப்பரிய – சொல்வதற்கு அரிதாக உள்ள
* நின்பெருமை – உனது பெருமைகளை
* எந்தமிழ் நா – என்னுடைய தமிழ் நாக்கு
* எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்? – எவ்விதம் எடுத்து விரிவாகக் கூறும்?
* முந்தைத் தனிப்புகழும் – பழம்பெருமையும் தனிச் சிறப்பும் கொண்ட
* முகிழ்த்த இலக்கியமும் – இலக்கியவளத்துடன் தோன்றிய
* விந்தை நெடுநிலைப்பும் – வியக்கத்தக்க அளவிலான நெடிய நிலைப்புத் தன்மையும்
* வேறார் புகழுரையும் – வேற்று மொழியார் உன்னைப் பற்றி கூறிய புகழ் உரைகளும்

**பொருளுரை**

செழுமையான தமிழே! எமக்குள் வாழும் உயிர் போன்றவளே! பழம் பெருமையும், தனிச்சிறப்பும், இலக்கிய வளமும், வியக்கத்தக்க அளவில் நீண்ட நிலைப்புத் தன்மையும் கொண்ட உன்னை வேற்று மொழியார் புகழ்ந்துரைக்கின்றனர். இவ்விதம் சொல்வதற்கு அரிதாக உள்ள உனது பெருமைகளை என்னுடைய தமிழ் நாக்கு எவ்விதம் விரிவாக எடுத்துக் கூறும்?

**விரிவான விளக்கம்**

வேற்று மொழியாரும் தமிழின் பெருமைகளை அறிந்து போற்றுகின்றனர். ஆனால் எமக்கோ நீ உயிர் போன்றவள். அளவிட முடியாத அளவு பெருமைகளைக் கொண்டுள்ள உன்னை எப்படிப் புகழ்வது, உன் பெருமைகளை விரிவாக எவ்விதம் என்னால் கூற முடியும்? என்று கேட்பது போல தமிழின் பெருமையை உயர்த்திக் கூறியுள்ளார் ஆசிரியர்.

**பாடல்**

**உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**
**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி**
**முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!**

**சொல்லும் பொருளும்**

* உந்தி உணர்வெழுப்ப – பற்றுணர்வு பொங்கி எழ
* உள்ளக் கனல்மூளச் – உள்ளத்திலே நெருப்புத் தோன்ற
* செந்தா மரைத்தேனை – செந்தாமரையில் உள்ள தேனை
* குடித்துச் சிறகார்ந்த – அருந்திவிட்டுச் சிறகு அசைத்து
* அந்தும்பி பாடும் – அந்த வண்டானது பாடும்


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

* அதுபோல யாம்பாடி – அதைப்போன்று நாங்களும் பாடி
* தனித்தமிழே! – தனிப் பெருமை வாய்ந்த தமிழே!
* முழங்க முந்துற்றோம் யாண்டும் – எங்கும் உன் சிறப்பை முழங்குவதால் பெருமையடைகிறோம்

**பொருளுரை**

செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப் பாடும் வண்டினைப் போல் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, பற்றுணர்வு பொங்கி எழ, உன் சிறப்பை எல்லா இடங்களிலும் முழங்குவதில் பெருமையடைகிறோம்.

**விரிவான விளக்கம்**

தாமரை மலரில் உள்ள தேனைக் குடித்துவிட்டு வண்டானது மகிழ்ச்சியில் சிறகசைத்துப் பாடுவது போல, தமிழ் இலக்கியங்களைக் கற்று, அதன் பொருளை உணர்ந்த மகிழ்வில் நாங்களும் மகிழ்ச்சியில் பெருமை பொங்க உன் சிறப்புகளை உலகெங்கும் முழங்குகின்றோம் என ஆசிரியர் கூறுகின்றார்.

**அருஞ்சொற் பொருள்**

| | |
|---|---|
| 1. அழகார்ந்த – அழகு நிறைந்த | 2. முன்னை – பழமையான |
| 3. முகிழ்த்த – தோன்றிய | 4. செந்தமிழ் – செழுமையான தமிழ் |
| 5. நறுங்கனியே – நல்ல மணம் வீசும் கனியே | 6. கடல் கொண்ட – கடலால் கொள்ளப்பட்ட |
| 7. மன்னி – நிலையான | 8. பேரரசே – பெருமைக்குரிய அரசே |
| 9. மாண்புகழே! – பெருமைக்குரிய புகழே! | 10. பாப்பத்தே – பத்துப்பாட்டு |
| 11. மன்னுஞ்! – நீண்டகாலம் நிலைத்த | 12. முன்னும் – பொங்கியெழும் |
| 13. முடிதாழ – தலைபணிந்து | 14. செப்பரிய – சொல்லுவதற்கரிய |
| 15. நா – நாக்கு | 16. உரை விரிக்கும் – விரிவாக உரைக்கும் |
| 17. முந்தை – பழமை | 18. விந்தை – வியப்பு |
| 19. கனல் – தீ | 20. வேறார் – மற்றவர் |
| 21. நெடு நிலைப்பும் – நீண்ட காலம் நிலைக்கும் | 22. தும்பி – வண்டு |
| 23. முந்துற்றோம் – முற்பட்டோம் | 24. யாண்டும் – எங்கும் |
| 25. உந்தி – உள்ளிருந்து மேல்நோக்கி நகர்ந்த | 26. எண் தொகையே – எட்டுத்தொகை |
| 27. தென்னன் – தென்னாடு எனப்பட்ட பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டியன் | |
| 28. இன்னறும் – இனிமையும் அறவழியும் கொண்ட (அறு என்ற வினைச் சொல்லின் அடி) | |
| 29. நற்கணக்கு! – நல்ல கணக்கு இங்கு நற்கணக்கு என்பது பதினெண் கீழ்க்கணக்காகும். | |
| 30. ஆர்ந்த – 'நிறைந்த' என்ற பொருளில் ஒரு பெயர்ச்சொல் (பெயரடை) | |
| 31. தனித்தமிழ் – பிற மொழி சொற்களின் கலப்படமின்றி மரபு சார்ந்த இலக்கண முறைகளுக்கு உட்பட்டு எழுதப்படும், பேசப்படும் தமிழே தனித்தமிழ் ஆகும். | |

**பிரித்தெழுதுக**

| | |
|---|---|
| 1. செந்தமிழ் – செம்மை + தமிழ் | 6. செப்பரிய – செப்பு + அரிய |
| 2. நறுங்கனி – நறுமை + கனி | 7. உணர்வெழுப்ப – உணர்வு + எழுப்ப |
| 3. நாட்டிடையில் – நாடு + இடையில் | 8. பேரரசு – பெருமை + அரசு |
| 4. மண்ணுலகம் – மண் + உலகம் | 9. எந்தமிழ் நா – எம் + தமிழ் + நா |
| 5. நற்கணக்கு – நன்மை + கணக்கு | 10. செந்தாமரை – செம்மை + தாமரை |


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| 1. செந்தமிழ், நறுங்கனி, செந்தாமரை, பேரரசு | பண்புத்தொகைகள் |
| 2. முகிழ்த்த, சிறகார்ந்த | பெயரெச்சங்கள் |
| 3. கன்னிக்குமரி, மண்ணுலகம் | உருவகங்கள் |
| 4. தென்னன் மகள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 5. நின்பெருமை | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| 6. குடித்து | வினையெச்சம் |
| 7. வாழ்த்துவமே, முந்துற்றோம் | தன்மைப் பன்மை வினைமுற்றுகள் |
| 8. யாண்டும் | முற்றும்மை |

## கற்பவை கற்றபின்

1. **‘‘நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று**
**இத்திறத்த எட்டுத்தொகை’’**

**இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத் தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

1. **நற்றிணை :** நல் + திணை / நன்மை + திணை. ‘நல்’ என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் ‘திணை’ என்னும் பெயரும் சேர்ந்து ‘நற்றிணை’ என்னும் பெயர் பெற்றது.
2. **குறுந்தொகை :** குறுமை + தொகை. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் குறுந்தொகை எனப் பெயர்பெற்றது.
3. **ஐங்குறுநூறு :** ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைத் திணை குறித்த குறுகிய நூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்டதால் ‘ஐங்குறுநூறு’ எனப் பெயர் பெற்றது.
4. **பதிற்றுப்பத்து :** சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்னும் முறையில் நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் ‘பதிற்றுப்பத்து’ எனப் பெயர் பெற்றது.
5. **பரிபாடல் :** வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பல வகை அடிகளுக்கும் பரிந்து இடங்கொடுத்து பரிந்து செல்லும் ஓசையையுடைய பரி பாட்டுகளின் தொகுப்பாக விளங்குவதால் இது ‘பரிபாடல்’ என்று அழைக்கப்படுகிறது.
6. **கலித்தொகை :** ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளையும், கொண்ட கலிப்பாக்களால் அமைந்த நூலாதலால் கலித்தொகை எனப் பெயர் பெற்றுள்ளது.
7. **அகநானூறு :** அகம் + நான்கு + நூறு – அகநானூறு. அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் ‘அகநானூறு’ எனப் பெயர் பெற்றது.
8. **புறநானூறு :** புறம் + நான்கு + நூறு – புறநானூறு. இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் ‘புறநானூறு’ எனப் பெயர் பெற்றது.

2. **‘‘ சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்’’– என்றுரைக்கும் க.சச்சிதானந்தன் அவர்களின் பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிட உரை நிகழ்த்துக.**

**தமிழாசிரியர்** : தமிழ் தாயை வணங்குவோம். தமிழ் உணர்வால் நாம் இன்புற்று எல்லோரும் இன்பமாக வாழ்வோம்.

**பொன்னழகன்** : வணங்குகிறேன் தமிழ் அன்னையை! தமிழின் சிறப்பை என் நாவால் சுவைக்க விரும்புகிறேன்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**தமிழாசிரியர்** : மனத்தால் நினைத்து நாவால் சுவைத்து மற்றவர் மனம் குளிரபேசு!

**அறிவழகன்** : பொன்னழகன் பேசும் முன் வினாக்களை நான் கேட்கலாமா?

**தமிழாசிரியர்** : கேள் கேள்... கேள்வி பிறந்தால் தானே நல்ல பதில் கிடைக்கும்.

**அறிவழகன்** : நன்றி ஐயா, ஈழத்துக் கவிஞன் க.சச்சிதானந்தன் என்பவரின் கவிதைத் தொகுப்பு 'ஆனந்தத் தேன்' இத்தொகுப்பினை நீர் படித்தது உண்டா?

**பொன்னழகன்** : உண்டு. உண்டு. மெத்த படித்தது உண்டு. இதில் இடம் பெறும் 'தமிழ்க்கவி பித்து' எனும் கவிதை என் மனம் கவர்ந்த கவிதை.

**அறிவழகன்** : எப்படி? சற்று புரியும்படி சொல்லு. அதனை நானும் கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

**பொன்னழகன்** : தமிழில் மகிழ்ச்சிக்கு அளவில்லை; தமிழின் பெருமையைக் கூற வார்த்தைகளுக்கு பஞ்சமில்லை. "சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" – இதனை நான் கூறவில்லை. ஈழத்துக் கவிஞன் க. சச்சிதானந்தன் சொன்ன அற்புதமான வரிகள்.

**அறிவழகன்** : தமிழ்க்கவி பித்து கவிதையின் இறுதி வரிகள் தானே நீர் சொன்னது!

**பொன்னழகன்** : ஆம் ஆம்... 'சாகும் போதும் கூட தமிழ் படித்துச் சாக வேண்டும். தமிழ் மீது இவர் கொண்ட காதல் மனிதர்களை சிந்திக்க வைக்கிறது. இறந்த பின்பும் இவரின் சாம்பலில் தமிழ் மணந்து வேக வேண்டுமாம்... என்னே! இவரின் தமிழ்ப் பற்று; மொழிப்பற்று.

**அறிவழகன்** : உண்மைதான். எண்ணற்ற புலவர்கள்; எண்ணற்ற சான்றோர்கள் தமிழின் பெருமையை; அதன் புலமையை இவர்கள் கூறியவற்றை நாமும் படித்து இன்புறலாம் வா...

**பொன்னழகன்** : அவ்வாறே ஆகட்டும்.

**தமிழாசிரியர்** : மொழிப் பற்று; நாட்டுப் பற்று அனைவருக்கும் இருக்க வேண்டும். ஒற்றுமை ஒன்றே இதற்கு ஒரே வழி... தமிழ் கற்போம்... இந்தியராய் வாழ்வோம்.

## திறன் அறிவோம் – புத்தக வினா

**பலவுள் தெரிக.**

3. **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் –** கா.தேர்வு 2019; ஜூன், முதல் தி.தேர்வு 2022

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா **விடை இ) எம் + தமிழ் + நா**

**குறுவினா**

2. **'மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' -இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.** அ.மா.வி 2019; மே–2022; முதல் தி.தேர்வு & ஜூலை–2024

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## சிறுவினா

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?** பிடிஏ–2; மே–2022

**தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :**

1. தமிழ்மொழி பழமைக்கும் பழமையாய் உள்ளது.
2. கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து ஆட்சி செய்தது.
3. பாண்டிய மன்னனின் மகளாக வளர்ந்தது.
4. திருக்குறளின் பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது.
5. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக அமைந்துள்ளது.
6. நிலைத்து நிற்கும் சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் விளங்குகிறது.

## அரசு தேர்வு வினாக்கள்

**பலவுள் தெரிக.**

**1. "அன்னை மொழியே" கவிதை இடம் பெறும் நூல்** காலாண்டுத் தேர்வு 2019

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை ஈ) பாவியக்கொத்து

விடை **ஆ) கனிச்சாறு**

**2. 'தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!'.** முதல் தி.தேர்வு 2022
**பாடல் அடியில் தென்னன்' என்று குறிப்பிடப்படும் மன்னன் :**

அ) சேர மன்னன் ஆ) பாண்டிய மன்னன்
இ) சோழ மன்னன் ஈ) பல்லவ மன்னன்

விடை **ஆ) பாண்டிய மன்னன்**

**3. "சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்" - என்று முழங்கியவர்?** ஆகஸ்ட்–2022

அ) பெருஞ்சித்திரனார் ஆ) க. சச்சிதானந்தன்
இ) பாவாணர் ஈ) க. அப்பாத்துரையார்

விடை **ஆ) க. சச்சிதானந்தன்**

**குறுவினா**

**1. "மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!** அ.மா.வி 2019
**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!"**
**மண்ணுலகப் பேரரசு ....... தென்னன் மகள் ....... திருக்குறளின் மாண்புகழ் ......... மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?**

1. செந்தமிழ்
2. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**2. அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள் இரண்டினை எழுதுக.** கா.தேர்வு 2019

1. பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே, பாண்டிய மன்னனின் மகளே!
2. திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!

**3. பாவலரேறு பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களுள் எவையேனும் இரண்டின் பெயர்களை எழுதுக.** முதல் தி.தேர்வு 2022

**பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள்:** உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, ஐயை எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலியன.

www.Padasalai.Net

**4. எட்டுத்தொகை நூல்களின் பெயர்களை எழுதுக.** முதல் தி.தேர்வு 2022

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** செப்.–2021; மே–2022

**"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை**
**எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?**
**முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்**
**விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."**

**1. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் :** ஜூன் 2023; முதல் தி.தேர்வு 2024

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

விடை **இ) எம் + தமிழ் + நா**

**2. 'செந்தமிழ்' என்பது :**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

விடை **அ) பண்புத்தொகை**

**3. 'உள்ளுயிரே' என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?**

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை
இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை

விடை **ஆ) தமிழ் மொழியை**

**4. 'வேறார் புகழுரையும்' – இத்தொடரில் 'வேறார்' என்பது :**

அ) தமிழர் ஆ) சான்றோர்
இ) வேற்று மொழியினர் ஈ) புலவர்

விடை **இ) வேற்று மொழியினர்**

**நெடுவினா**

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

பிடிஏ–5; அ.மா.வி; கா.தேர்வு 2019 & 2024; ஆகஸ்ட் 2022; ஜூன் 2023

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து |
| பாவலரேறு தமிழ் வாழ்த்து |
| முடிவுரை |

**முன்னுரை:**

**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் – இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்கு சுடர்தந்த தேன்!**

என்ற பாவேந்தரின் தமிழ்ப்பற்றைப் போற்றி வணங்குகிறேன். அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்த்தாய் இன்று, நேற்றுப் பிறந்தவள் இல்லை, என்று தோன்றியவள் என்று கூறமுடியாத அளவிற்கு பழமையும் சிறப்பும் வாய்ந்தவள். அத்தகைய தமிழ் அன்னையைப் பாடாத புலவரில்லை. இங்கு மனோன்மணீயம் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பாவலரேறு அவர்களின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு பார்ப்போம்.

**பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து:**

1. அலைவீசக்கூடிய கடலையே ஆடையாக அணிந்திருக்கிறது இந்த நாடு.
2. இந்த நாட்டை பெண்ணாக உருவகம் செய்கிறார். அப்பெண்ணின் நெற்றியிலிட்ட திலகம் மணம் வீசுவதாக கூறுகிறார். உலகிற்கு பாரத நாடு முகமாகத் திகழ்வதாகக் கூறுகிறார்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



3. இந்திய நாட்டிற்கு, தென்னாடும் அதிலும் சிறந்த தமிழர்களின் நல்ல திருநாடாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என்கிறார்.
4. அந்தத் திலகத்தில் இருந்துவரும் வாசனைபோல அனைத்து உலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத்திசையிலும் புகழ் மணக்கும்படி இருக்கின்ற பெருமை மிக்கது தமிழ்ப்பெண்னே என்று தெய்வத்திற்கு இணையாகப் போற்றுகிறார்.
5. இன்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பானத் திறமையை வியந்து எங்கள் செயலை மறந்து வாழ்த்துகின்றோம் என்கிறார் மனோன்மணீயம் சுந்தரனார்.

**பாவலரேறு தமிழ் வாழ்த்து :**

1. பெருஞ்சித்திரனார் தமிழைப் பழமைக்குப் பழமையாய் தோன்றியவள் என்று பாடுகிறார்.
2. கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து நின்று அரசாளும் பேரரசு என்கிறார்.
3. பாண்டியனின் மகளாகவும் திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும் போற்றுகிறார்.
4. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்று இலக்கியங் களையும் காப்பியங்களையும் தன்னுள் கொண்டவள் என்று பாடுகிறார்.
5. இறுதியாக, வியக்கத்தக்க அளவிலான நீண்ட காலம் நிலைத்து நின்று எல்லோரும் புகழும்படியாக இருக்கிறது தமிழ். அதைக் கேட்கும் போது மலரில் தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப்பாடும் வண்டினைப் போல் உன்னையும் சுவைக்கிறேன் என்கிறார்.
6. அதனால் எங்கள் உள்ளத்தில் இன்பத்தீ பொங்கிஎழ உன் சிறப்புகளை எல்லாத்திசைகளிலும் முழங்குகின்றோம் என்று பாடியுள்ளார்.

**வீறுடைய செம்மொழி தமிழ்மொழி**
**உலகம் வேரூன்றிய நாள் முதல் உயர்மொழி! – பெருஞ்சித்திரனார்.**

**முடிவுரை:**

**தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்.**

இவ்வாறு தமிழின் பெருமை, பழமை, சிறப்பு, வியப்பு என எல்லாவற்றையும் மனோன்மணீயம் பெ.சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழின் பெருமையைப் போற்றி வாழ்த்துகின்றனர்.

நன்றி. வணக்கம்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் ................**
   அ) துரை.மாணிக்கம் ஆ) தி. இராசகோபாலன்
   இ) துரைராசு ஈ) எத்திராசலு
2. **'தென்னன் மகளே!' இத்தொடரில் தென்னன் என்பவர்...............**
   அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்
3. **நிலைத்த நூலென பாவலரேறு எதை குறிப்பிடுகிறார்?**
   அ) எட்டுத்தொகை ஆ) சிலப்பதிகாரம் இ) பத்துப்பாட்டு ஈ) மணிமேகலை
4. **பெருஞ்சித்திரனாரின் எந்தப் படைப்பு தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது?**
   அ) உலகியல் நூறு ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
   இ) கனிச்சாறு ஈ) எண்சுவை எண்பது
5. **'கனிச்சாறு' என்ற கவிதை நூலைப் படைத்தவர்..................**
   அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) தாராபாரதி
   இ) வாணிதாசன் ஈ) முடியரசன்



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

6. **செந்தமிழ் – என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) செம்மை + தமிழ் ஈ) செ + தமிழ்

7. **'தும்பி' என்பதன் பொருள்...............**
அ) வண்ணத்துப்பூச்சி ஆ) தேனீ இ) தட்டான்பூச்சி ஈ) வண்டு

8. **செந்தாமரை என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
அ) செந் + தாமரை ஆ) செம் + தாமரை இ) சிவப்பு + தாமரை ஈ) செம்மை + தாமரை

9. **தமிழன்னையின் மாண்புகழாகக் கவிஞர் வருணித்த நூல் எது?**
அ) திருக்குறள் ஆ) பத்துப்பாட்டு இ) எட்டுத்தொகை ஈ) சிலப்பதிகாரம்

10. **பாவலரேறு பெருஞ்சித்திரனார் கீழ்க்கண்ட எந்த இதழ்கள் வாயிலாக தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்?**
அ) தென்மொழி, தென்றல் ஆ) தமிழ்ச்சிட்டு, குயில்
இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஈ) நவபாரதி, குயில்

11. **சின்ன குழந்தையின் சிரிப்பும் ஆனவள்; பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள் யார்?**
அ) தமிழ் மொழி ஆ) அன்னை மொழி இ) தாய்மொழி ஈ) வடமொழி

12. **வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்ட யாவற்றையும் கவிதையாகக் கொண்டவள் ................**
அ) செவிலித் தாய் ஆ) தமிழ் அன்னை இ) நற்றாய் ஈ) அன்னை

13. **'செந்தமிழ்' – இலக்கணக் குறிப்புத் தருக.**
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொற்றொடர் இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

14. **'அன்னை மொழி' – எனத் தொடங்கும் கவிதை இடம் பெற்றுள்ள நூல் .............**
அ) எண்சுவை எண்பது ஆ) பாவியக் கொத்து
இ) உலகியல் நூறு ஈ) கனிச்சாறு

15. **கனிச்சாறு என்பது ............ வகை நூல்.**
அ) கவிதை ஆ) சிறுகதை இ) புதினம் ஈ) உரைநடை

16. **தமிழ்ச்சிட்டு, தென்மொழி போன்றவை ..............**
அ) கவிதைகள் ஆ) உரைநடை நூல்கள்
இ) இதழ்கள் ஈ) சிறுகதை நூல்கள்

17. **பின்வருவனவற்றுள் பொருந்தாதது எது?**
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) முல்லைப்பாட்டு ஈ) ஐங்குறுநூறு

18. **கீழ்க்கண்டவற்றுள் பத்துப்பாட்டு அல்லாத நூல் எது?**
அ) மதுரைக்காஞ்சி ஆ) பட்டினப் பாலை இ) நெடுநல் வாடை ஈ) பரிபாடல்

19. **பொருத்துக.**
(அ) தென்னன் – 1) பத்துப்பாட்டு
(ஆ) பாப்பத்து – 2) பதினெண் கீழ்க்கணக்கு
(இ) நற்கணக்கு – 3) எட்டுத்தொகை
(ஈ) எண்தொகை – 4) பாண்டியன்
அ) 4, 1, 3, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

20. **தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும் போன்ற தலைப்புகளில் பாடல்கள் இடம் பெற்றுள்ள நூல் ...............**
அ) பாவியக் கொத்து ஆ) கனிச்சாறு இ) எண்சுவை எண்பது ஈ) மகபுகுவஞ்சி


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

21. **கனிச்சாறு ............. தொகுதிகளை உடையது.**
அ) 3 ஆ) 6 இ) 1 ஈ) 8

22. **பொருத்துக:**

| சொல் | பொருள் |
|---|---|
| (அ) முகிழ்த்த | - 1) பெருமை |
| (ஆ) மாண் | - 2) பழமை |
| (இ) முந்தை | - 3) தோன்றிய |
| (ஈ) யாண்டும் | - 4) எங்கும் |

அ) 4, 3, 1, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 4, 1, 2

23. **அன்னை மொழியே அழகார்ந்த செந்தமிழே! முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே! இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள தொடைநயங்களைக் குறிப்பிடுக.**
அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, அடி எதுகை
இ) அடி எதுகை, அடி இயைபு ஈ) சீர்மோனை, சீர் இயைபு

24. **'பாப்பத்தே' என்பது ............... நூல்களைக் கொண்டது.**
அ) 8 ஆ) 5 இ) 18 ஈ) 10

25. **பொருந்துவதைத் தேர்க.**
அ) கனிச்சாறு ஆ) தமிழ்ச்சிட்டு இ) பாவியக் கொத்து ஈ) எண்சுவை எண்பது
1) அ, ஆ, இ 2) அ, இ, ஈ 3) அ, ஈ 4) ஆ மட்டும்

26. **தமிழ் முத்தமிழாய் வளர்ந்தது இதில் முத்தமிழ் என்பவை .................**
அ) விண்ணோடும், முகிலோடும் ஆ) கதிரவனோடும், கடலோடும்
இ) இயல், இசை, நாடகம் ஈ) இவை அனைத்தும்

27. **அறிவைப் பெருக்குபவள்; அன்பை வயப்படுத்துபவள் எனக் கவிஞர் எதை உருவகப்படுத்துகிறார்?**
அ) உலகம் ஆ) நாடு இ) கடல் ஈ) மொழி

28. **பேரரசு என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
அ) பேர் + அரசு ஆ) பெருமை + அரசு இ) பெரு + அரசு ஈ) பேர + அரசு

29. **பாண்டிய மன்னனின் மகளாகப் பாவலரேறு எதைக் குறிப்பிடுகிறார்?**
அ) தமிழை ஆ) நாட்டை இ) மொழியை ஈ) இலக்கியத்தை

**விடைகள்:**

| | | |
|---|---|---|
| 1. அ) துரை.மாணிக்கம் | 2. இ) பாண்டியன் | 3. ஆ) சிலப்பதிகாரம் |
| 4. ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை | 5. அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் | 6. இ) செம்மை + தமிழ் |
| 7. ஈ) வண்டு | 8. ஈ) செம்மை + தாமரை | 9. அ) திருக்குறள் |
| 10. இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு | 11. அ) தமிழ் மொழி | 12. ஆ) தமிழ் அன்னை |
| 13. இ) பண்புத் தொகை | 14. ஈ) கனிச்சாறு | 15. அ) கவிதை |
| 16. இ) இதழ்கள் | 17. இ) முல்லைப் பாட்டு | 18. ஈ) பரிபாடல் |
| 19. ஆ) 4, 1, 2, 3 | 20. ஆ) கனிச்சாறு | 21. ஈ) 8 |
| 22. ஆ) 3, 1, 2, 4 | 23. ஆ) சீர்மோனை,அடிஎதுகை | 24. ஈ) 10 |
| 25. 2) அ, இ, ஈ | 26. இ) இயல், இசை, நாடகம் | 27. ஈ) மொழி |
| 28. ஆ) பெருமை + அரசு | 29. அ) தமிழை | |

## குறுவினா

1. **பெருஞ்சித்திரனார் எமக்குயிர் என எதனைக் கூறுகிறார்?**
பெருஞ்சித்திரனார் எமக்குயிர் என்று தமிழைக் கூறுகிறார்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



2. **வண்டைப் போல் நாம் என்ன செய்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?**

செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடும் வண்டைப் போல நாம் தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை முழங்குவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

3. **அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள் யாவை?**

**அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள்:**
திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை.

4. **'முந்துற்றோம் யாண்டும்' - எனப் பெருஞ்சித்திரனார் கூறுவது யாது?**
**உள்ளிருந்து பற்றுணர்வு பொங்கி எழ:**
உள்ளத்திலே இன்பத் தீ தோன்றுகிறது. செந்தாமரை மலரில் உள்ள தேனை அருந்திவிட்டுச் சிறகு அசைத்து பாடும் வண்டைப் போல, நாங்களும் உன்னைச் சுவைத்து உனது சிறப்புகளை எல்லா இடங்களிலும் பாடுகிறோம் என்கிறார்.

## சிறுவினா

1. **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவை?**

| பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - 18 | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நாலடியார் | 7 | ஐந்திணை ஐம்பது | 13 | ஆசாரக் கோவை |
| 2 | நான்மணிக் கடிகை | 8 | ஐந்திணை எழுபது | 14 | பழமொழி நானூறு |
| 3 | இன்னா நாற்பது | 9 | திணைமொழி ஐம்பது | 15 | சிறுபஞ்ச மூலம் |
| 4 | இனியவை நாற்பது | 10 | திணைமாலை நூற்றைம்பது | 16 | முதுமொழிக் காஞ்சி |
| 5 | கார் நாற்பது | 11 | திருக்குறள் | 17 | ஏலாதி |
| 6 | களவழி நாற்பது | 12 | திரிகடுகம் | 18 | கைந்நிலை |

## நெடுவினா

1. **பெருஞ்சித்திரனார் தமிழை எவ்வாறெல்லாம் போற்றுகிறார்?**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| அழகார்ந்த செந்தமிழே! |
| தமிழின் பெருமை |
| முடிவுரை |

**தமிழுக்கும் அமுதென்று பேர்**

**முன்னுரை:**

அமுதமான மொழி தமிழ். உலகின் மூத்த மொழி,
செம்மொழி என்றெல்லாம் சான்றோர்களால் புகழப்பட்டமொழி
இங்குத்தமிழ்மொழியின்பெருமையைபாவலரேறுஅன்னைமொழியேஎன்றுவிளித்துப்போற்றுவதைக் காணலாம்.

**அழகார்ந்த செந்தமிழே!**

1. என் தாய்க்கு நிகரான மொழி
2. அழகாக அமைந்த செம்மைமொழி
3. பழமைக்கும் பழமையாய் தோன்றிய நல்ல மணம் வீசும் கனி போன்ற மொழி
4. கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட உலகப் பேரரசான மொழி
5. பாண்டிய மன்னனின் மகளாக வீற்றிருந்தவள்!



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



6. திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியதாக உள்ள மொழி!
7. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்றெல்லாம் தமிழை அழைக்கிறார்.

**தமிழின் பெருமை:**

1. செழுமையானது தமிழ்
2. எமக்குள் வாழும் உயிர் போன்றது தமிழ்மொழி
3. விரிவாகக் கூறமுடியாத அளவிற்கு பெரும் பெருமைகளை உடைய மொழி
4. இலக்கிய வளத்துடனும், நீண்ட கால நிலைப்பு தன்மையும், எல்லோரும் புகழும் சிறப்பும் உடையது.

**முடிவுரை:**

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்

என்று பாவேந்தர் கூறுவது போல, செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப் பாடும் வண்டினைப் போல் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் பற்றுணர்வுப் பொங்கி எழ, உன் சிறப்பை எல்லா இடங்களிலும் முழங்குவதில் பெருமையடைகிறேன் என்று பாடுகிறார் பெருஞ்சித்திரனார்.

☆☆☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**பாரதியின் வசனநடை - சிட்டுக்குருவி**

சிறியதானியம் போன்ற மூக்கு; சின்னக்கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்: இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு.....

**வானில் பறக்கும் சிட்டுக்குருவி. சிட்டுக்குருவி பார்ப்பதற்கு கண்ணைக் கவரும் அழகு. சிறுதானியம் கொத்தித் தின்னம் அழகைக் கண்டு வியந்தேன். வியப்பில் தன்னையே மறந்தேன்.**

## மொழியோடு விளையாடு

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.** (காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)

1. **முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும். -**
நறுமணம்
2. **பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்.** ஆகஸ்ட்–2022; அரையாண்டுத் தேர்வு 2023
புதுமை.
3. **இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை.** முதல் தி.தேர்வு 2022
காற்று.
4. **நான்கெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்.** ஜுலை & கா.தேர்வு–2024
விண்மீன்.
5. **ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்.** மே & ஆகஸ்ட்–2022
காடு.

**நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு)

1. **கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.** முதல் தி.தேர்வு; மே–2022
**காற்றின் பாடல்.**
2. **புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.**
**மொட்டின் வருகை.**
3. **சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.**
**மிதக்கும் வாசம்.**
4. **இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்: மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள்.**
**உயிர்ப்பின் ஏக்கம்.**
5. **நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.** அ.மா.வி 2019
**நீரின் சிலிர்ப்பு.**
6. **குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும்; பாய்ச்சலும் இலைகளின் அசைவுகள்; சூறைக்காற்றின் ஆலோலம்.**
**வனத்தின் நடனம்.** அ.மா.வி 2019; செப். 2020; முதல் தி.தேர்வு 2022


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக**



பிடிஏ–5; முதல் தி.தேர்வு 2022; கா.தேர்வு 2024

**விடை :**

**உயிர்வளி**

மரமே!
நீ தரும் உயிர்வளி
இல்லையேல்
உயிர்வாழ வழி
இல்லை!
மரத்தை வெட்டிவிட்டு
மனிதம் காப்பது
என்பது மடமை!

மானிடனே!
மரத்தை வெட்டி
மழையைக் கொன்றாய்
உயிர்வளி சுமந்து
திரியும் மனிதா?
மாடோ? ஆடோ? மற்றெதுவோ?
என்ன செய்யும்?

1. இயற்கையை அழித்தான்; செயற்கையை நாடினான்.
2. குறிஞ்சி, முல்லை, மருதம் என்று உருவாக்கிய நிலத்தைப் பாலையாய் மாற்றினான்.
3. உயிர்காக்கும் உயிர்வளியைத் தேடி அலைகிறான்.
4. இறுதியில் முதுகில் செடியைச் சுமந்து மூக்கில் குழாயை இணைத்தபடி செல்கிறான்.
5. இவனுடைய எதிர்காலம் கேள்விக்குறிதானோ?

குறிப்பு: தலைப்பு இட வேண்டும், 10 முதல் 12 வரிகள் இடம் பெறுதல் சிறப்பு

**செயல் திட்டம்**

1. **தூய்மையான காற்றைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**












**அகராதியில் காண்க.**

| | | |
|---|---|---|
| 1. | அகன்சுடர் | – ஞாயிறு (கதிரவன், சூரியன்) |
| 2. | ஆர்கலி | – பேரொலி, வெள்ளம், ஆர்ப்பரிக்கும் கடல், நீர், ஆரவாரத்துடன் கொட்டும் மழை |
| 3. | கட்புள் | – கண்விழித்திருக்கும் பறவை |
| 4. | கொடுவாய் | – பழிச்சொல், மீன்வகை, புலி வகை, குறளை |
| 5. | திருவில் | – வானவில், இந்திரவில் |

**நிற்க அதற்குத் தக...**

**வானொலி அறிவிப்பு :**

புதிய புயல் சென்னைக்குத் தென் கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**புயலின் போது :**

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்ல வேண்டாம். | வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும். | காற்று அடிப்பது நின்றாலும் எதிர்த் திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

**மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

1. **என் குடும்பத்தாரை காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்கள் :**
2. பாதுகாப்பான இடங்களுக்கு கூட்டிச் செல்வேன்.
3. மின்சார விளக்குகளை அணைத்து விடுவேன்.
4. மேடான பகுதிகளில் தங்க வைப்பேன்.
5. வீட்டிலுள்ள கதவு, ஜன்னல்களை மூடி வைப்பேன்.
6. முதலுதவிச் சாதனங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பேன்.
7. அறிவிப்பைக் கேட்டவுடன் குறைந்தது ஏழு நாளுக்குத் தேவையான உணவுப் பொருள், எரிபொருள், குடிநீர், உயிர்காக்கும் மருந்து முதலியவற்றை வாங்கி வைத்துக் கொள்வேன்.

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | | |
|---|---|---|
| 1. Storm - புயல் | ஏப்ரல்–2023 | 4. Land Breeze - நிலக்காற்று |
| 2. Tornado - சூறாவளி | பிடிஏ–6 | 5. Sea Breeze - கடற்காற்று |
| 3. Tempest - பெருங்காற்று | பிடிஏ–6 | 6. Whirlwind - சுழல்காற்று |

## அறிவை விரிவு செய்

1. குயில்பாட்டு – பாரதியார்
2. அதோ அந்தப் பறவை போல – ச. முகமது அலி
3. உலகின் மிகச்சிறிய தவளை – எஸ். ராமகிருஷ்ணன்



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப் படிவத்தை நிரப்புதல்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | கோ.ந.பொழிலினி |
| 2. | பாலினம் | : | பெண் |
| 3. | பிறந்த நாள் மற்றும் வயது | : | 26-09-2007(17 வயது) |
| 4. | தேசிய இனம் | : | இந்தியர் |
| 5. | பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | ச.கோபிநாத் |
| 6. | வீட்டு முகவரி | : | ெந.30 / 18 ெந.ஏ.எல். முதலி 2ஆவது தெரு, நேருநகர், வேளச்சேரி, சென்னை - 42 |
| 7. | தொலைபேசி / அலைபேசி எண் | : | 8610493603 |
| 8. | பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : | 498 / 500 |
| 9. | தாய்மொழி | : | தமிழ் |
| 10. | பயின்ற மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 11. | தட்டச்சு | : | முதல் நிலை |
| 12. | கணினி | : | அனுபவம் உண்டு |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் **தட்டச்சர்** பணியினைத் தந்தால் எனது பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
**கோ.ந.பொழிலினி**

## உங்கள் கிராாமத்திற்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் வரைக.

பூம்பாறை,
10.07.2025
01-02-2025

அனுப்புநர்
மு.தமிழரசன்,
நெ.5, பள்ளத்தெரு,
மாத்தூர் கிராமம்,
வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு பொது நூலக இயக்குநரகம்,
சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் :** நூலக வசதி வேண்டுதல் சார்பு.

www.Padasalai.Net


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

வணக்கம்,

தங்கள் நூலகத்துறைக்கு எனது வாழ்த்துகள். கற்றோர்களை உருவாக்கும் தங்கள் துறை என்றென்றும் சமுதாயத்திற்கும்; இந்நாட்டிற்கும் பாதுகாக்கும் அரணாகத் திகழும் இதில் எள்ளலவும் சந்தேகமில்லை. எங்கள் கிராமத்தில் 1500 குடும்பங்களும் 3500 மக்களும் வசித்து வருகின்றனர். மேலும் எங்கள் கிராமத்தில் உயர்க்கல்வி முடித்து அரசு போட்டித் தேர்வுகளுக்கு தங்களைத் தயார் செய்து கொள்ள நூற்றுக்கணக்கானோர் உள்ளனர். எங்கள் கிராமத்தில் நூலக வசதி இல்லை. சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நூலகத்திற்கு சென்று வரவேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். படித்த இளைஞர்கள்.

எனவே எங்கள் கிராமத்தில் நூலக வசதி ஏற்படுத்தினால் படித்த இளைஞர்களுக்கம், படிக்கும் மாணவர்களுக்கம்; வேலைத்தேடும் இளைஞர்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும்.

எங்கள் கிராமத்தில் கிளை நூலகம் அமைத்திட ஆவன செய்யுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
**( மு.தமிழரசன் )**

உறைமேல் முகவரி

பெறுநர்

பொது நூலக இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு பொது நூலக இயக்குநரகம்,
சென்னை - 600 002.

☆ ☆ ☆

www.Padasalai.Net

# அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 = 4)

1. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்
அ) திருமூலர் ஆ) அகத்தியர்
இ) வள்ளுவர் ஈ) தொல்காப்பியர்

2. பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வான்வெளியில், பேரொலியில்
இ) வானத்தில், பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

3. 'மகிழுந்து வருமா?' என்பது –
அ) விளித்தொடர் ஆ) எழுவாய்த்தொடர் இ) வினையெச்சத்தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

4. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) கொண்டல் – 1. மேற்கு
ஆ) கோடை – 2. தெற்கு
இ) வாடை – 3. கிழக்கு
ஈ) தென்றல் – 4. வடக்கு
அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4,3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. தமிழர்கள், வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்?
6. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.
7. மின்னாற்றல் குறிப்பு வரைக.
8. வினைமுற்றுத்தொடர் என்றால் என்ன?

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளிக்க.** (2 × 3 = 6)

9. காற்று இலக்கியங்களில் எவ்வாறு கையாளப்படுகிறது?
10. பெருவெளியில், கரு எவ்வாறு தோன்றியது?
11. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக, 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

**IV. கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.** (1 × 3 = 3)

12. அ) இயற்கை – செயற்கை
ஆ) கொடு – கோடு

**V. விடையளி. (ஏதேனும் ஒன்று)** (1 × 8 = 8)

13. காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.
14. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

☆ ☆ ☆


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

# இயல் 3 விருந்து போற்றுதும்!

## உரைநடை உலகம்

கரு

* பகிர்ந்துண்ணல் என்பது அன்னையின் அன்பில் தொடங்குகிறது. தமிழரின் விருந்து போற்றும் தன்மையைப் பல நூல்களின் வாயிலாக விளக்குகிறது இவ்வுரைநடை.
* அறவுணர்வு, தமிழர் மரபு, துன்பத்திலும் விருந்தோம்பும் பண்பும் தமிழர்கள் வாழும் நிலத்திற்கேற்ற விருந்தும் இப்பகுதியில் இடம் பெறுகிறது.
* விருந்தினை எதிர்கொள்ளும் தன்மை குறித்தும் விருந்தோம்பல் அன்றும் இன்றும் குறித்தும் அழகாக விளக்கப்பட்டுள்ளது.



### கற்பவை கற்றபின்

1. **வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் – இவைபோன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து வந்து கலந்துரையாடுக.**

**மாணவர்கள்:** வணக்கம் ஐயா!

**ஆசிரியர்** : வணக்கம். அனைவரும் அமருங்கள் மாணவர்களே! இன்று விருந்து போற்றுதும் பற்றி நம் வகுப்பில் கலந்துரையாடல் செய்வோமா?

**மாணவர்கள்:** சரிங்க ஐயா!

**ஆசிரியர்** : யார் யார் கலந்துரையாடலில் கலந்து கொள்ளப் போகிறீர்கள். கையை உயர்த்துங்கள்.

**தேவி** : வீட்டில் எதற்குத் திண்ணை அமைத்தார்கள் தெரியுமா?

**விஸ்வா** : ஓ... தெரியுமே!

**தேவி** : எங்கே சொல்லுங்கள் பார்ப்போம்! நம் வீட்டிற்கு யாராவது வந்தால் அமர்வதற்கும் வெளியாட்கள் திண்ணையில் படுத்து ஓய்வு எடுக்கவும் திண்ணை அமைக்கப்பட்டது.

**பத்மா** : விருந்தினர் பேணுதல் பற்றி கூறுங்கள்.

**ஆஷிகா** : விருந்தினரை அறுசுவை உணவு படைத்து அன்புடன் உபசரிப்பதுதான் தமிழ் பண்பாடு ஆகும்.

**தேவி** : அதுபோலவே ஈகை, பசித்தவருக்கு உணவிடல் நம் தமிழ் பண்பாட்டின் முக்கியக் கூறுகளாகும்.

**ஆஷிகா** : நம் வீடு தேடி பசியோடு வந்தவருக்கு இல்லை என்று சொல்லாமல் தன் வீட்டிலுள்ள விதை நெல்லை குத்தி சோறு போட்ட பரம்பரை நம் தமிழ் பரம்பரை என்பது குறிப்பிடத்தக்கது.

**தேவி** : பிறருக்கு உதவுதல், பசித்தவருக்கு உணவுக் கொடுத்தல், விருந்தினரை உபசரிப்பது போன்றவை தமிழ் பண்பாட்டின் குணமாகும்.

**ஆசிரியர்** : நன்றி மாணவர்களே!

2. **“பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈகலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே”**
– கம்பராமயாயணம், 1 : 2 : 36

**“விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல”**
– கலிங்கத்துப்பரணி, 464



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**மேற்கண்ட பாடல்களில் விருந்தோம்பல் பற்றிய செய்தி இடம்பெறும் தன்மையை ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெறுக.**

1. விருந்தோம்பல் பற்றி தமிழ் இலக்கியங்கள் நிறையவே வலியுறுத்துகின்றன.
2. இவற்றின் மூலம் விருந்தோம்பல் தமிழரின் தனித்த பண்பாக இருப்பது உணர்த்தப்படுகிறது.
3. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

**விருந்தோம்பல் பற்றிய செய்தி :** கலிங்கத்துப்பரணியில் செயங்கொண்டார் விருந்தினருக்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.

## திறன் அறிவோம் – புத்தக வினா

**பலவுள் தெரிக.**

1. **பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?** பிடிஏ–4; ஜூன் 2023; ஜூலை–2024

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**விடை இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

4. **'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை –** காலாண்டுத் தேர்வு 2023

அ) நிலத்திற்கேற்ற விருந்து
ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து
ஈ) உற்றாரின் விருந்து

**விடை ஆ) இன்மையிலும் விருந்து.**

**குறுவினா**

2. **'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.** அ.மா.வி 2019

1. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாதது இல்லை. செல்வத்தை மட்டும் வைத்துக் கொண்டிருப்பவனிடம் ஈகைக்குணம் இல்லையெனில் அவன் விருந்தளிக்கமாட்டான்.
2. விருந்தோம்பலுக்கு மிகவும் இன்றியமையாதது நல்ல உள்ளம், இன்சொல் பேசுதல், அன்பு பாராட்டும் பண்பு, பிறர் பசியைப் போக்க வேண்டும் என்ற எண்ணம், கருணைக்குணம் போன்றவைகளாகும்.
3. தனக்கு இல்லையெனினும் பிறர்க்கு உணவளித்து அவர்களின் மகிழ்வில் திளைத்தல் வேண்டும்.

**சிறுவினா**

2. **'இன்மையிலும் விருந்தோம்பல்' குறித்துப் புறநானூற்றுப் பாடல் தரும் செய்தியை எழுதுக.**

**இன்மையிலும் விருந்தோம்பல் :**

1. வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர். நம் முன்னோர்.
2. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தி எடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்று புறநானூறு காட்சிப்படுத்துகிறது.
3. முந்தின நாள் வந்த விருந்தினைரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த தன் பழைய வாளைப் பணையம் வைத்தான். மறுநாளும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறி யாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



3. **தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையாக அமைந்தது. இப்பண்பு இக்காலத்தில் அடைந்துள்ள மாற்றங்களைப் பட்டியலிடுக.**

**தனித்து உண்ணார் :**

1. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.
2. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கு கொடுப்போர் நல்லோர். அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது.

"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே...." - **புறநானூறு, 182**

என்று கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

**இப்பண்பு இக்காலத்தில் அடைந்துள்ள மாற்றங்கள் :**

1. கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்த உணவிடுவது குறைந்தது.
2. விருந்து அளிப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின.
3. ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்றனர்.
4. படிப்படியாக உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.
5. காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டன.
6. திருமண ஏற்பாட்டாளர்களே விருந்தினர்களை வரவேற்று, உபசரித்தல் செய்யும் பண்பாட்டு மாற்றத்தைக் காண முடிகிறது.

## நெடுவினா

1. **சங்ககால தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் விளக்குக.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| சங்ககாலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்புகள் |
| விருந்தோம்பல் சான்றுகள் |
| முடிவுரை |

**முன்னுரை:**

தமிழரின் விருந்து போற்றுதல். தமிழர் மரபில் உணர்வோட உணர்வையும் குழைத்துச் செய்த சமையல் பண்பாட்டை வெளிப்படுத்தும் விருந்தாகிறது. விருந்தோம்பல் தமிழரின் தனித்த பண்பாக இருப்பது உணர்த்தப்படுகிறது.

**சங்காலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்புகள்:**

1. விருந்தோம்பல் என்பது தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவது.
2. முன்பின் அறியாத புதியர்வகளுக்கே விருந்தினர் என்று பெயர்.

**விருந்தோம்பல் சான்றுகள்:**

1. 'விருந்தே புதுமை' என்கிறார் தொல்காப்பியர்.
2. **அறவுணர்வும் தமிழர் மரபும் :** திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே அமைத்திருக்கிறார். இல்லறம் புரிவது விருந்தோம்பம் செய்யும் பொருட்டே என்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.
3. **கம்பன் கூற்று :** கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**குறுவினா**

1. **காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.** பிடிஏ–2, முதல் தி.தேர்வு 2024

1. **முதற்பொருள் :** நிலம் – காடு,
சிறுபொழுது – மாலை
பெரும்பொழுது – கார்காலம் (மழைக்காலம்)
2. **கருப்பொருள் :** உணவு – வரகு
3. இவையனைத்தும் முல்லை நிலத்திற்குரியவை.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **பொருத்துக.**
அ) குறிஞ்சி – 1. கடலும் கடல் சார்ந்த இடமும்
ஆ) முல்லை – 2. வயலும் வயல்சார்ந்த இடமும்
இ) மருதம் – 3. காடும் காடு சார்ந்த இடமும்
ஈ) நெய்தல் – 4. மலையும் மலைசார்ந்த இடமும்
அ) 1, 2, 4, 3 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 1, 2 ஈ) 4, 3, 2, 1

2. **நிலம் சார்ந்த பொழுதுகள்.................. வகைப்படும்.**
அ) ஆறு ஆ) ஐந்து இ) இரண்டு ஈ) ஏழு

3. **ஒரு நாளின் ஆறு கூறுகளை ................ பொழுது என்பர்.**
அ) மாலை ஆ) பெரும் இ) வைகறை ஈ) சிறு

4. **ஓர் ஆண்டின் ஆறு கூறுகளை ............... பொழுது என்பர்.**
அ) சிறு ஆ) யாமம் இ) பெரும் ஈ) நண்பகல்

5. **பொருத்துக.**
அ) கார்காலம் – 1. ஐப்பசி, கார்த்திகை
ஆ) குளிர்காலம் – 2. மாசி, பங்குனி
இ) முன்பனிக்காலம் – 3. ஆவணி, புரட்டாசி
ஈ) பின்பனிக்காலம் – 4. மார்கழி, தை
அ) 3, 1, 2, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 2, 3, 4, 1

6. **இளவேனிற் காலத்திற்குரிய மாதங்கள் .................**
அ) சித்திரை, வைகாசி ஆ) ஆவணி, புரட்டாசி
இ) ஆனி, ஆடி ஈ) மார்கழி, தை

7. **பொருத்துக.**
அ) மாலை – 1. இரண்டு மணி முதல் 6 மணிவரை
ஆ) எற்பாடு – 2. மாலை 6 மணி முதல் 10 மணிவரை
இ) நண்பகல் – 3. காலை 6 மணி முதல் 10 மணிவரை
ஈ) காலை – 4. காலை 10 மணிமுதல் 2 மணிவரை
அ) 2, 1, 3, 4 ஆ) 2, 1, 4, 3 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 2, 4, 1

8. **எற்பாடு - இதில் ‘எல்’ என்றால் ..................**
அ) ஞாயிறு ஆ) திங்கள் இ) விண்மீன் ஈ) தானியம்

9. **நிலங்கள் ................ வகைப்படும்.**
அ) ஆறு ஆ) ஐந்து இ) நான்கு ஈ) இரண்டு


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**10. பொருத்துக.**

அ) பாலை - 1. கார்காலம்
ஆ) நெய்தல் - 2. இளவேனில், முதுவேனில், பின்பனி
இ) மருதம் - 3. ஆறு பெரும் பொழுதுகள்
ஈ) முல்லை - 4. ஆறு பெரும் பொழுதுகள்

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 4, 3, 1 ஈ) 2, 1, 4, 3

**11. பொருத்துக.**

அ) குறிஞ்சி - 1. மாலை
ஆ) முல்லை - 2. வைகறை
இ) மருதம் - 3. யாமம்
ஈ) நெய்தல் - 4. எற்பாடு

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 1, 3, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4

**12. பாலை நிலத்திற்குரிய சிறுபொழுது ................**

அ) யாமம் ஆ) வைகறை இ) எற்பாடு ஈ) நண்பகல்

**13. நிலமும் பொழுதும் ................**

அ) கருப்பொருள் ஆ) முதற்பொருள் இ) உரிப்பொருள் ஈ) சிறுபொழுது

**14. 'அன்பின் ஐந்திணைகள்' - இக்கூற்றுக்குப் பொருத்தமானது ................**

அ) யாமம், மாலை, வைகறை, எற்பாடு, நண்பகல் ஆ) கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில்
இ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஈ) குறிஞ்சி, முல்லை, யாமம், வைகறை, குளிர்

**15. பொருந்தாத இணையைச் சுட்டுக.**

அ) குறிஞ்சி - வருணன் ஆ) முல்லை - திருமால்
இ) பாலை - கொற்றவை ஈ) மருதம் - இந்திரன்

**16. கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வகை நிலமாகும்?**

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

**17. சித்திரை, வைகாசி ஆகிய மாதங்கள் எவ்வகைக் காலமாகும்?**

அ) இளவேனில் ஆ) முதுவேனில் இ) முன்பனி ஈ) பின்பனி

**18. ஆறு பெரும்பொழுதுகளும் எவ்வகைத் திணைக்கு உரியவை?**

அ) குறிஞ்சி, முல்லை ஆ) முல்லை, மருதம் இ) மருதம், நெய்தல் ஈ) நெய்தல், பாலை

**19. கொற்றவை எத்திணைக்குரிய தெய்வம் ஆகும்?**

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) நெய்தல் ஈ) பாலை

**20. குறிஞ்சி நிலத்திற்குரிய பறை வகை யாது?**

அ) ஏறுகோட்பறை ஆ) தொண்டகம் இ) மணமுழா ஈ) துடி

**21. பட்டினம், பாக்கம் ஆகிய ஊர்கள் எவ்வகைத் திணைக்கு உரியவை?**

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

**22. பின்பனிக்காலம் என்ற பெரும்பொழுது எத்திணைக்குரியது?**

அ) முல்லை ஆ) மருதம் இ) நெய்தல் ஈ) பாலை

**23. அகத்திணைப் பொருள் கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?**

அ) அன்பின் ஐந்திணை ஆ) போர் செய்தல்
இ) புறப்பொருள் ஈ) நானிலம்


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

24. ஆனி, ஆடி ஆகிய இரண்டும் ..............காலத்திற்கு உரிய மாதங்கள்.
அ) முதுவேனில் ஆ) பின்பனி இ) இளவேனில் ஈ) குளிர்

25. தவறானதை சுட்டுக.
அ) குறிஞ்சி - கிளி, மயில் ஆ) மருதம் - நாரை, அன்னம்
இ) பாலை - காட்டுக்கோழி, மயில் ஈ) நெய்தல் - கடற்காகம்

26. பேரூர், மூதூர் என்பவை எந்நிலத்திற்குரிய ஊர்களாகும்?
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

**விடைகள் :**
1. ஈ) 4, 3, 2, 1
2. இ) இரண்டு
3. ஈ) சிறு
4. இ) பெரும்
5. ஆ) 3, 1, 4, 2
6. அ) சித்திரை, வைகாசி
7. ஆ) 2, 1, 4, 3
8. அ) ஞாயிறு
9. ஆ) ஐந்து
10. இ) 2, 4, 3, 1
11. ஈ) 3, 1, 2, 4
12. ஈ) நண்பகல்
13. ஆ) முதற்பொருள்
14. இ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
15. அ) குறிஞ்சி - வருணன்
16. இ) நெய்தல்
17. அ) இளவேனில்
18. இ) மருதம், நெய்தல்
19. ஈ) பாலை
20. ஆ) தொண்டகம்
21. ஈ) நெய்தல்
22. ஈ) பாலை
23. அ) அன்பின் ஐந்திணை
24. அ) முதுவேனில்
25. இ) பாலை - காட்டுக்கோழி, மயில்
26. இ) மருதம்

## குறுவினா

1. **பொருள் இலக்கணம் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?**
பொருள் என்பது ஒழுக்கமுறையைக் குறிக்கிறது. வாழ்வியலை விளக்குவது பொருள் இலக்கணம் ஆகும். பொருள் இலக்கணம் அகம், புறம் என இரண்டு வகைப்படும்.

2. **அன்பின் ஐந்திணைகள் யாவை?**
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை அன்பின் ஐந்திணைகள் ஆகும்.

3. **ஐந்திணைகளுக்கு உரியன யாவை?**
முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன ஐந்திணைகளுக்கு உரியன.

4. **பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது என்றால் என்ன?**
பெரும்பொழுது : ஓராண்டின் ஆறு கூறுகளாகும். சிறுபொழுது : ஒரு நாளின் ஆறு கூறுகளாகும்.

5. **எற்பாடு - விளக்கம் தருக.**
எல் - ஞாயிறு, பாடு - மறையும் நேரம். எல் + பாடு - எற்பாடு ; எற்பாடு - சூரியன் மறையும் நேரம் ஆகும்.

6. **ஐவகைத் திணைகளுக்கும் உரிய தெய்வங்கள் யாவை?**

| திணை | தெய்வம் |
|---|---|
| குறிஞ்சி | முருகன் |
| முல்லை | திருமால் |
| மருதம் | இந்திரன் |
| நெய்தல் | வருணன் |
| பாலை | கொற்றவை |

7. **ஆறு பெரும்பொழுதுகளையும் கொண்ட திணைகள் யாவை?**
மருதம், நெய்தல் ஆகிய இருதிணைகளும் ஆறுபெரும் பொழுதுகளையும் கொண்டுள்ளன.

8. **எற்பாடுக்கு உரிய காலம் மற்றும் திணை யாவை?**
எற்பாடுக்கு உரிய காலம் - பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை ஆகும்.
எற்பாடுக்கு உரிய திணை - நெய்தல் திணை ஆகும்.

9. **கார்காலத்திற்கு உரிய மாதங்கள் யாவை?**
கார்காலத்திற்கு உரிய மாதங்கள் ஆவணி மற்றும் புரட்டாசி ஆகியனவாகும்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

10. **யாமம் என்ற சிறுபொழுது எந்தத் திணைக்கு உரியது?**
யாமம் என்ற சிறுபொழுது குறிஞ்சித் திணைக்கு உரியது.

11. **சிறு பொழுது எத்தனை வகைப்படும் அவை யாவை?**
**சிறு பொழுது ஆறு வகைப்படும். அவை** யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை.

12. **பெரும்பொழுது எத்தனை வகைப்படும் அவை யாவை?**
**பெரும் பொழுது ஆறு வகைப்படும். அவை** கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற் காலம், முது வேனிற்காலம்.

13. **ஐவகை நிலத்திற்குரிய தொழில்கள் யாவை?**

| நிலம் | தொழில் |
|---|---|
| குறிஞ்சி | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் |
| முல்லை | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் |
| மருதம் | நெல்லரிதல், களை பறித்தல் |
| நெய்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் |
| பாலை | வழிப்பறி, நிரை கவர்தல் |

**சிறுவினா**

1. **குறிஞ்சி நிலத்திற்கு உரிய நிலம், பெரும்பொழுது, சிறுபொழுது, கருப்பொருளை விளக்குக.**
**குறிஞ்சி நிலத்திற்கு உரியவை :**

| | |
|---|---|
| நிலம் | மலையும் மலை சார்ந்த இடமும் |
| பெரும்பொழுது | குளிர்காலம், முன்பனிக் காலம் |
| சிறுபொழுது | யாமம் |

**குறிஞ்சி நிலத்தின் கருப்பொருள்கள் :**

| | | | |
|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | மக்கள் | வெற்பன், குறவன், குறத்தியர் |
| உணவு | மலை நெல், தினை | விலங்கு | புலி, கரடி, சிங்கம் |
| பூ | குறிஞ்சி, காந்தள் | மரம் | அகில், வேங்கை |
| பறவை | கிளி, மயில் | ஊர் | சிறுகுடி |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | பறை | தொண்டகம் |
| யாழ் | குறிஞ்சியாழ் | பண் | குறிஞ்சிப் பண் |
| தொழில் | தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் | | |

2. **ஐவகைத் திணைகளுக்கும் உரிய உணவுகளை விளக்குக.**

| திணை | உணவு |
|---|---|
| குறிஞ்சி | மலைநெல், தினை |
| முல்லை | வரகு, சாமை |
| மருதம் | செந்நெல், வெண்ணெல் |
| நெய்தல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் |
| பாலை | சூறையாடலால் வரும் பொருள் |

3. **ஐந்திணைக்கும் உரிய பெரும்பொழுது மற்றும் சிறு பொழுதுகளை எழுதுக.**
ஒவ்வொரு நிலத்திற்கும் பெரும் பொழுதும் சிறுபொழுதும் ஒன்றுபோல் வாரா.

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும் பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும் பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



4. ஐவகை நிலத்திற்குரிய நீர், பறை அட்டவணைப்படுத்துக.

| | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| நீர் | அருவிநீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற் கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன்கோட்பறை, | துடி |

## மொழியை ஆள்வோம்

### மொழிபெயர்க்க

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.

**விடை :**

கலைஞர் கருணாநிதி தமிழ் இலக்கியத்திற்காகப் பெரும் பங்களிப்பு செய்தவர். தமிழ் இலக்கியத்திற்கு கவிதைகள், கடிதங்கள், திரைக்கதைகள், நாவல்கள், சுயசரிதைகள், வரலாற்று நாவல்கள், மேடை நாடகங்கள், உரையாடல்கள் மற்றும் திரைப்படப் பாடல்கள் என அவரது பங்களிப்பு பரந்து விரிந்துள்ளன. இவர் திருக்குறளுக்குக் குறளோவியம், தொல்காப்பிய பூங்கா, பூம்புகார், கவிதைகள், கட்டுரைகள், நூல்கள் எனப் பல நூல்களை எழுதியுள்ளார். இலக்கியம் மட்டுமன்றி கலை மட்டும் கட்டிடக்கலை மூலமாகவும் கலைஞர் கருணாநிதி தமிழ் மொழிக்குப் பங்காற்றியுள்ளார். திருக்குறளைப் பற்றிக் கலைஞர் எழுதிய குறளோவியம் போல் சென்னையில் வள்ளுவர் கோட்டம் கட்டியதன் மூலம் திருவள்ளுவருக்குக் கட்டிடக்கலை மூலம் முன்னிலை அளித்தார். கலைஞர் கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலையை நிறுவி திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தினார்.

### தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்

- **ஒரு தனிச்சொற்றொடரில் ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமையும்.**

  எ.கா. அ) மேரி பேருந்திற்காகக் காத்திருந்தாள்.
  ஆ) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.

- **தொடர்சொற்றொடர், ஒன்றுக்கும் மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டிருக்கும்.**

  எ.கா. அ) இனியநிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.
  ஆ) அன்வர் அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்

- **கலவைச் சொற்றொடரில் கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும் கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வரும்.**

  எ.கா.
  அ) மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்.
  பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான் – முதன்மைத்தொடர்
  மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் – துணைத் தொடர்

### தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.

எ.கா.

பிடிஏ–5; அரையாண்டுத் தேர்வு 2019

அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.
(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)
அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



1. **இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்ககங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். (தொடர் சொற்றொடராக மாற்றுக)**

இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்ககங்களில் அடுக்கி வைத்து கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

2. **கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்தார். கலைஞர், எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக் கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார். (கலவைச் சொற்றொடராக மாற்றுக.)**

கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்து, எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக் கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.

3. **முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி வாரஇதழாக்கி, நாளேடாக்கினார் கலைஞர் (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)**

கலைஞர், முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி வார இதழாக்கினார். கலைஞர் முரசொலி ஏட்டை நாளேடாக்கினார்.

4. **ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)** பிடிஏ–5, அரையாண்டுத் தேர்வு 2019

ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

## பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக

**புதிர் :** உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இருமுறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும். பிடிஏ–6 , காலாண்டுத் தேர்வு 2023

**விடை:** தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட், ஒரு பக்க தராசுத் தட்டு உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்களில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

| பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| கோல்டு பிஸ்கட் | தங்கக் கட்டி | ஆல் தி பெஸ்ட் | வாழ்த்துகள் |
| யூஸ் (பண்ணி) | பயன்படுத்தி | ஈக்வலாக | சரிசமமாக |
| வெயிட் | எடை | பட் | ஆனால் |
| எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் | சோதனையை மீண்டும் | ஆன்சரை | விடையை |

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

1. **பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.** செப்.–2020

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்.

அ) தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக ஆ) தங்கக் கட்டிகளை ஈக்வலாக
இ) தங்கக் கட்டிகளை ஈடாக ஈ) தங்கக் கட்டிகளை முறையாக

**விடை இ) தங்கக் கட்டிகளை ஈடாக**

2. **கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக் கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?** ஜூலை–2024

அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம்எக்காலங்களில்நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

**விடை ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## பத்தியைப் படித்து வினாவிற்கு விடையளிக்க

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் கலைத்திறனோடு தந்து இன்றளவும் தொடர்வன நிகழ்த்துகலைகள். கிராமப்புற/சிற்றூர் மக்களின் கலை, அழகியல், பண்பாடு ஆகியவற்றின் எச்சங்களாக இருப்பவை இவை . வடிவங்களைக் கொண்டு நிகழ்த்துகலைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) கரகாட்டம், காவடியாட்டம் – தலையில் / தோளில் கருவியைச் சுமந்தபடி ஆடுபவை.
ஆ) மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம் – வேடம் கட்டி ஆடுபவை.
இ) ஒயிலாட்டம், தப்பாட்டம், தேவராட்டம், சேர்வை யாட்டம் – குழுவாக ஆடுபவை.
ஈ) தெருக்கூத்து, தோற்பாவை பாவைக் கூத்து – கதையைத் தழுவி ஆடும் ஆட்டங்கள்.

தலையில் கரகம் என்னும் குடத்தை வைத்துக் கொண்டு ஆடும் கரகாட்டமும் தோளில் காவடியைச் சுமந்தவாறு ஒய்யாரமாக ஆடும் காவடியாட்டமும் மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைவடிவங்கள். மயில்வடிவக் கூட்டுக்குள் இருந்துகொண்டு, நையாண்டி மேளத்திற்கு ஏற்ப ஆடும் மயிலாட்டமும் குதிரைவடிவக் கூட்டுக்குள் இருந்து பாதத்துக்குக்கீழ் கட்டையைக் கட்டிக் கொண்டு 'டக்டக்' என்று ஆடும் குதிரையாட்டமும் புலி வேடமிட்டு ஆடும் புலியாட்டமும் காண்பதற்கு உற்சாகம் தரக்கூடிய நிகழ்த்துகலைகள்.

இசைக்கேற்ப துணியை வீசிக் குழுவாக ஆடும் ஒயிலாட்டம், தப்பு என்னும் தோற்கருவியின் தாளத்திற்கு ஆடும் தப்பாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம் ஆகியவை கிராமியக் கலைஞர்களால் நிகழ்த்தப்படும் கலைவடிவங்கள். இவற்றுக்கெல்லாம் சிகரமாகத் திறந்தவெளிகளையும் தெருமுனைகளையும் மேடையாக்கி எளிய ஒப்பனைகளுடன் நிகழ்த்தப்படும் கலையாகத் தெருக்கூத்து விளங்குகிறது. கதையொன்றில் இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவை இணைந்த வடிவமே தெருக்கூத்து ஆகும். இதே கதை, பாடல், ஆடல்களுடன் தோலால் செய்த வெட்டு வரைபடங்களைத் திரைச்சீலையில் ஒளி ஊடுருவும் வகையில் பொருத்தி, அவற்றை நாடகம்போல நிகழ்த்துவது தோற்பாவைக் கூத்தாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அனைவரையும் கவரும் கலையிது.

ஊரக மக்களின் வாழ்வியலில் கலந்தவை நிகழ்த்துகலைகள். இவை உழைப்பாளிகளின் உணர்வு வெளிப்பாடு; வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி; மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்க முடியாத பண்பாட்டுக்கூறு. இத்தகைய சிறப்புகளைக் கொண்டுள்ள நிகழ்த்துகலைகளை நாம் பாதுகாக்க வேண்டும்.

**வினாக்கள்**

**அ) நிகழ்த்துகலைகள் எத்தகைய சிறப்புகளைக் கொண்டவை?**

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் கலைத்திறனோடு தந்து இன்றளவும் தொடர்வன. கிராமப்புற/சிற்றூர் மக்களின் கலை, அழகியல், பண்பாடு ஆகியவற்றின் எச்சங்களாக இருக்கின்றன. மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்க முடியாத பண்பாட்டுக்கூறுகளாகவும் இருக்கின்றன.

**ஆ) மரபார்ந்த கலைவடிவங்கள் யாவை?**

தலையில் கரகம் என்னும் குடத்தை வைத்துக் கொண்டு ஆடும் கரகாட்டமும் தோளில் காவடியைச் சுமந்தவாறு ஒய்யாரமாக ஆடும் காவடியாட்டமும் மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைவடிவங்கள்.

**இ) நிகழ்த்துக் கலைகளில் முத்தமிழும் உள்ளடங்கி உள்ளன – கருத்தை விளக்குக.**

கரகாட்டம், காவடியாட்டம் – தலையில் / தோளில் கருவியைச் சுமந்தபடி ஆடும் ஆட்டங்களாகும். மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம் போன்றவை வேடம் கட்டி ஆடப்படும் ஆட்டங்களாகும் நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் மயிலாட்டம் மற்றும் இசைக்கேற்ப ஆடும் ஒயிலாட்டமும், தோற்கருவியின் தாளத்திற்கு ஏற்ப தப்பாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம் போன்றவைகள் கிராமியக் கலைஞர்களால் நிகழ்த்தப்படும் கலைவடிவங்கள். கதை, பாடல், ஆடல்களுடன் தோலால் செய்த வெட்டு வரைபடங்களைத் திரைச்சீலையில் ஒளி ஊடுருவும் வகையில் பொருத்தி, அவற்றை நாடகம்போல நிகழ்த்துவது தோற்பாவைக் கூத்தாகும். இவ்வாறு நிகழ்த்துக்கலைகளில் முத்தமிழும் உள்ளடங்கி உள்ளன.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## திறன் அறிவோம் – புத்தக வினா

### நெடுவினா

3. **எம்.எஸ்.சுப்புலட்சுமி, பால சரஸ்வதி, ராஜம் கிருஷ்ணன், கிருஷ்ணம்மாள் ஜெகநாதன், சின்னப்பிள்ளை ஆகியோர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக.**

**அ) எம்.எஸ். சுப்புலட்சுமி**

எம்.எஸ்.சுப்புலட்சுமி பத்து வயதில் இசைத்தட்டுக்காகப் பாடலைப் பாடிப் பதிவு செய்தவர். மீரா திரைப்படத்தில் நடித்துப் பெரும்புகழ் பெற்றவர். காற்றினிலே வரும் கீதம், பிருந்தாவனத்தில் கண்ணன் முதலிய பாடல்களைப் பாடியவர். ஒரு முறை காந்தியடிகளின் முன் இரகுபதி இராகவ இராஜாராம் பாடலைப் பாடி பாராட்டுப்பெற்றவர். மேலும், அண்ணல் மீரா எழுதிய பாடல் ஒன்றைக் குறிப்பிட்டு பாடச் சொன்னாராம். 1947 இல் காந்தியின் பிறந்த நாளன்று 'ஹரி தும் ஹரோ' என்னும் மீரா பஜன் பாடி காந்தியின் அன்பையும் பெற்றவர்.

1954 இல் தாமரையணி விருதைப் பெற்றவர். 1963இல் இங்கிலாந்திலும் 1966இல் ஐ.நா அவையிலும் பாடியவர். 1974 இல் மகசேசே விருது பெற்றவர். இவ்விருதினைப் பெற்ற முதல் இசைக்கலைஞர் என்று புகழையும் பெற்றவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பாடியவர். இந்திய அரசின் மிக உயரிய விருதான 'இந்திய மாமணி' விருது பெற்றவர்.

**ஆ) பால சரஸ்வதி**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டியம் ஆடுவது கீழ்மையானது என்ற நிலையை மாற்றியவர். இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருது பெற்றவர். இவருடைய அரங்கேற்றம் ஏழு வயதில் காஞ்சிபுரத்தில் தொடங்கியது. பதினைந்து வயதில் சென்னயிலுள்ள சங்கீத சமாஜம் அரங்கில் நடந்தது. இரவிசங்கரின் பாராட்டைப் பெற்றவர். வட இந்தியாவில் பல இடங்களிலும் நடனமாடியுள்ளார்.

ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் டோக்கியோவில் உள்ள கிழக்கு மேற்கு சந்திப்பு ஆகிய இடங்களில் நடனமாடி உலகளாவிய புகழ் பெற்றுள்ளார். பரதநாட்டிய கலையை முறையாக அணுகினால் ஆன்மிகப் பட்டறிவைப் பெற முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

**இ) ராஜம் கிருஷ்ணன்**

பெண்கள் என்றால் குடும்பக்கதை எழுதவேண்டும் என்ற படிமத்தை உடைத்துச் சமூகச் சிக்கலைகளைக் கதைகளாக எழுதியவர். சமூகத்தில் இடர்ப்பட்ட மக்களைப் பற்றி எழுதும் முன்பு அந்த மக்கள்வாழும் பகுதிக்குள் சென்று களப்பணியாற்றிக் கதைகளாக உருவாக்கியளித்தவர்.

தூத்துக்குடியில் பல மாதம் தங்கியிருந்து உப்பளத்தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையைக் கரிப்பு மணிகள் புதினமாகத் தந்துள்ளார். நீலகிரி, படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களைக் குறிஞ்சித் தேன் என்னும் புதினம் மூலம் குறிப்பிட்டுள்ளார். அலைவாய்க் கரையில் என்னும் புதினத்தின் மூலம் கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்களைப் பேசியுள்ளார். சேற்றில் மனிதர்கள் வேருக்கு நீர் ஆகிய புதினங்கள் மூலம் அமைப்புசாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீப்பெட்டித் தொழிலில் குழந்தைகளின் உடலையும் மனத்தையும் நொறுக்கும் அவல உலகைக் கூட்டுக் குஞ்சுகள் என்னும் புதினத்தின் வாயிலாக அளித்தார். பெண்குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து மண்ணகத்துப் பூந்துளிகள் என்னும் புதினமாக எழுதியுள்ளார்.

இவர் உள்ள வலுவுடன் இன்றுவரை நிற்கும் போராளி. இந்திய அரசின் தாமரைத்திரு வருது, சுவிடன் அரசின் வாழ்வுரிமை விருது, சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். எழுத்துகளில் நேர்மையான சினம், அறச் சீற்றம் இருக்க வேண்டும் என்பதே இவரின் வேண்டுகோளாக இருந்தது.

**உ) கிருஷ்ணம்மாள் ஜகந்நாதன்**

கிருஷ்ணம்மாள் ஜகந்நாதன் நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடிக் கற்றவர். கல்லூரிப்பருவத்தில் காந்தியச்சிந்தனையில் கவரப்பட்டார். அவரது சர்வோதயா இயக்கத்தில் களப்பணி ஆற்றியுள்ளார். ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றார். நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து பூதான இயக்கத்தில் பணிபுரிந்தார். உழுபவருக்கே நில உரிமை இயக்கம் தொடங்கிவேளாண்மை இல்லாத காலத்திலும் உழவர்களுக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தார். உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும் என்பதை மாணவர்களுக்குச் சொல்ல விரும்பினார்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**ஊ) சின்னம்மாள்**

சின்னம்மாள் பெண்களைக் குழுவாகச் சேர்த்துக்கொண்டு விவசாய வேலைகளைச் செய்தனர். வரும் வருமானத்தைச் சரிசமமாகப் பிரித்துக்கொண்டனர். வயசானவர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் வேலை கொடுத்து அவர்களுக்கு உதவி செய்தனர். இரண்டாயிரத்து நாலாம் ஆண்டு சுனாமி வந்தபோது மீட்பு பணியில் எங்கள் குழு ஈடுபட்டது. களஞ்சியம் என்ற பெயரில் ஒரு மகளிர் குழு ஆரம்பித்து பல குடும்பங்களைக் காப்பாற்றியுள்ளார். நடுவண் அரசின் முதன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு.வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருது பெற்றார். தமிழ்நாடு அரசின் ஔவை விருதும் நடுவண் அரசின் தாமரைத்திரு விருதும் பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

**4. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.** பிடிஏ–5; அ.மா.வி 2019

**மகளிர் நாள்விழா**

இடம் – பள்ளிக் கலையரங்கம் நாள் – 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை

**முன்னுரை:** மார்ச் மாதம் 8 ஆம் நாள் மகளிர் நாளையொட்டி 08.03.2019 அன்று பள்ளியில் மகளிர் நாள்விழா கொண்டாடப்பட்டது.

**ஆசிரியர் மாணவர்கள் கூடுதல்:** மகளிர் நாளான 08.03.2019 அன்று காலை 10 மணிக்கு பள்ளிக் கலையரங்கத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் குழுமினர். நிகழ்வு இனிதே தொடங்கியது.

**தலைமையாசிரியரின் வரவேற்பு:** சிறப்பு விருந்தினர் திருமதி. கலையரசி அவர்களை தலைமையாசிரியர் வரவேற்றார். அவரின் இதழியல் நேர்மை, துணிச்சல் போன்றவற்றைப் பாராட்டி வரவேற்று மகிழ்ந்தார். மேலும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் விழா ஏற்பாட்டாளர்கள் என அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார்.

**இதழாளரின் சிறப்புரை:** தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக என்று நம் உறவின் அனைத்துப் பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவள் பெண். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள். ஒருவரின் சொந்த நாடு கூட, தாய் நாடு என்றுதான் அழைக்கப்படுகிறது. அறிவியல், ஆராய்ச்சி, கணிதம், மருத்துவம், கல்வி, அரசியல் என எல்லாத் துறைகளிலும் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

என்று பாரதி கண்ட கனவு நனவாகியுள்ளது.

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்

கொண்ட புதுமைப் பெண்களாக, சாதனைப் பெண்மணிகளாக வலம் வருகின்றனர். பெண்ணியம் சிறக்கவும், பெண்மையைக் காக்கவும் சிறப்புரையாற்றி அமர்ந்தார்.

**நன்றியுரை:** அழைப்பேற்று, பெண்மையைப் பற்றிய சிறப்புரை ஆற்றிய சிறப்பு விருந்தினர்களுக்கும், விழா ஏற்பாடு செய்த தலைமையாசிரியருக்கும், விழாவைச் சிறப்பித்த ஆசிரிய பெருமக்களுக்கும், பெற்றோர்களுக்கும், ஒலி, ஒளி அமைத்துத் தந்த பணியாளருக்கும், விழாவின் முக்கிய பங்கேற்பாளராக வீற்றிருந்த மாணவ நண்பர்களுக்கும் மாணவர் தலைவர் நன்றி கூறினார், விழாவில் உறுதிமொழிகள் எடுக்கப்பட்டு, நாட்டு வாழ்த்துடன் மகளிர் விழா இனிதே நிறைவு பெற்றது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## அரசு தேர்வு வினா

**படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.**



காலாண்டுத் தேர்வு 2019

1. 1955-ஆம் ஆண்டு செப்டம்பர் 23-இல் சிசுபவன் என்ற இல்லத்தைத் தொடங்கி, ஊனமுற்ற, மனவளர்ச்சி குன்றிய, ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுக்கத் தொடங்கினார்.
2. தொழுநோயாளிகளுக்கு நடமாடும் மருத்துவமனையைத் தொடங்கி, அதே ஆண்டு 'காந்தி பிரேம் நிவாஸ்' பெயரில் நிரந்தர தொழுநோய் மருத்துவமனையைத் தொடங்கினார்.
3. பல நகரங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து, தொழுநோய், காசநோய், பாதித்தவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், மற்றவர்கள் புறக்கணிக்கக்கூடாது என்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தினார்.
4. சிறை கைதிகளுக்கும், போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும் போதிய உதவிகளுடன், ஆலோசனை மையங்கள் மூலமாக உதவிகள் செய்து வந்தார்.
5. இந்தியாவைத் தாண்டி பல வெளிநாடுகளுக்கும் 'பிறர் அன்பின் பணியாளர்' சபையினை சேவைகளை விரிவுபடுத்தினார்.

### நெடுவினா

1. **"மங்கையராய்ப் பிறப்பதற்கே" என்னும் பாடத்தில் இடம் பெற்றுள்ள மூவர் பற்றி சுருக்கி எழுதுக.** ஆகஸ்ட்–2022

**முன்னுரை :** உலகம் பரந்து விரிந்த திடல்; அதில் ஆடுவோரும் உளர்; பாடுவோரும் உளர்; பிறதிறன் காட்டுவாரும் உளர்; இவர்களுள் வென்றாரே மிகுதி; இதனையே ஆளுமை என்கிறோம். அத்தகைய ஆளுமை மிக்க பெண்களுள் மூவரைப் பற்றி பார்ப்போம்.

**இசைப்பேரரசி எம்.எஸ். சுப்புலட்சுமி :**

1. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பாடிய '**காற்றினிலே வரும் கீதம்**'; '**பிருந்தாவனத்தில் கண்ணன்**' முதலிய பாடல்களை ஜவஹர்லால் நேரு, சரோஜினி நாயுடு போன்றோர் மிகவும் பாராட்டினர். ஜவஹர்லால் நேரு, இவருக்கு '**இசைப்பேரரசி**' என்ற பட்டத்தைச் சூட்டினார்.
2. காந்தியடிகள் முன்னிலையில் இவர், '**இரகுபதி இராகவ இராஜாராம்**' என்ற பாடலைப் பாடினார். அப்பாடலைக் கேட்டு காந்தியடிகள் மிகவும் பாராட்டினார்.
3. 1954-இல் இவர் தாமரையணி விருது பெற்றபோது, இவரைத் தொட்டுத் தடவிப் பாராட்டிய பார்வையிழந்த **ஹெலன் கெல்லரின்** பாராட்டினை இவர் தன் வாழ்நாள் பெருமையாகக் கருதினார்.
4. **விருதுகள் :** இந்திய மாமணி, தாமரையணி விருது, மகசேசே விருது

**நடனக் கலைஞர் பால சரஸ்வதி :**

1. கல்கத்தாவிலும் காசியிலும் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டில் நடனமாடினார்.
2. சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கண்காட்சியில் 'ஜனகணமன' பாடலுக்கு மெய்ப்பாடுகளோடு நடனமாடினார்.
3. டோக்கியோவில் உள்ள 'கிழக்கு மேற்குச் சந்திப்பு' நிகழ்வில் இந்தியாவின் சார்பாகக் கலந்து கொண்டு சிறப்பாக நடனம் ஆடினார். **விருது :** இந்திய அரசின் '**தாமரைச் செவ்வணி**' விருதினைப் பெற்றுள்ளார்.

**மதுரைச் சின்னப்பிள்ளை :**

1. இவர் பெண்கள் குழு ஒன்றை ஆரம்பித்து, விவசாய நிலத்தை குத்தகைக்கு எடுத்து, வேளாண் பணிகள் செய்து, கிடைத்த வருமானத்தை அனைவருக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுத்தார். இவரால் பல குடும்பங்கள் பட்டினிக் கொடுமையிலிருந்து காப்பாற்றப்பட்டன.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

2. அன்றைய மதுரை மாவட்ட ஆட்சியர் இவரது பணிகளைப் பாராட்டி கண்மாயில் மீன்பிடிக்கும் குத்தகையை இவரது குழுவிற்கு வழங்கினார்.
3. 'களஞ்சியம்' என்ற பெயரில் இவர் ஆரம்பித்த மகளிர் குழு இன்றும் பல மாநிலங்களுக்குச் சென்று வேலை செய்கின்றது. 2004-ஆம் ஆண்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இவர் தன்னுடைய குழுவுடன் சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டார்.

**விருதுகள் :** இந்திய அரசின் 'பெண் ஆற்றல்' விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்), தமிழக அரசின் 'ஔவை விருது', தூர்தர்ஷனின் 'பொதிகை விருது', இந்திய அரசின் 'தாமரைத்திரு விருது'.

**முடிவுரை :** ஒரு பெண் நினைத்தால் முயன்றால் முன்னேறலாம், வெல்லலாம் என்று இவர்கள் காட்டியப் பாதையில் நாங்களும் முயல்வோம்; முன்னேறுவோம்; வெல்வோம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. **இசைப்பேரரசி என்று நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்டவர் ............. .**
அ) எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆ) ராஜம் கிருஷ்ணன்
இ) எஸ். ஜானகி ஈ) சித்ரா

2. **இரகுபதி இராகவ இராஜாராம் என்ற பாடலைப் பாடியவர் ............. .**
அ) பாலசரஸ்வதி ஆ) சரோஜினி இ) எம்.எஸ்.சுப்புலட்சுமி ஈ) ஜானகி

3. **எம்.எஸ்.சுப்புலெட்சுமி தாமரையணி விருது பெற்ற ஆண்டு ............. .**
அ) 1951 ஆ) 1954 இ) 1963 ஈ) 1966

4. **நோபல் பரிசுக்கு இணையான விருது ............. .**
அ) தாமரைத்திரு ஆ) தாமரையணி இ) சாகித்ய அகாதெமி ஈ) மகசேசே விருது

5. **இந்தியாவின் மிக உயரிய விருது எது?**
அ) இந்திய மாமணி ஆ) தாமரையணி இ) தாமரைத்திரு ஈ) கலைமாமணி

6. **"ஒரு பெண் நினைத்தால் முயன்றால், முன்னேறலாம், வெல்லலாம். நீங்களும் முயலுங்கள்; முன்னேறுங்கள்; வெல்லுங்கள்" என்று கூறிய பெண்மணி ............. .**
அ) எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆ) பாலசரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) சின்னப்பிள்ளை

7. **ஐ.நா. அவையில் எம்.எஸ். சுப்புலட்சுமி பாடிய ஆண்டு ............. .**
அ) 1954 ஆ) 1966 இ) 1947 ஈ) 1974

8. **டோக்கியோவில் உள்ள 'கிழக்கு மேற்குச் சந்திப்பு' நிகழ்வில் இந்தியாவின் சார்பாக கலந்துகொண்டு நடனம் ஆடியவர் யார்?**
அ) எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆ) பத்மினி
இ) பாலசரஸ்வதி ஈ) சுவர்ணமுகி

9. **பாலசரஸ்வதியோடு தொடர்புடைய நடனம் ............. .**
அ) கதகளி ஆ) கரகம் இ) குச்சிப்புடி ஈ) பரதநாட்டியம்

10. **சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர் யார்?**
அ) உமாமகேஸ்வரி ஆ) சல்மா இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) தமிழ்ச்செல்வி

11. **ராஜம் கிருஷ்ணன் ............. என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.**
அ) அவள் ஆ) உத்தரகாண்டம்
இ) அலை வாய்க்கரையில் ஈ) வேருக்கு நீர்

12. **அனைவராலும் பாராட்டப்பெற்ற ராஜம் கிருஷ்ணனின் வரலாற்றுப் புதினம் எது?**
அ) கரிப்பு மணிகள் ஆ) பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி
இ) அன்னையர் பூமி ஈ) குறிஞ்சித்தேன்

13. **பொருத்துக:**
(அ) கரிப்பு மணிகள் - 1) படுகர் இன மக்களைப் பற்றியது
(ஆ) குறிஞ்சித் தேன் - 2) உழைப்புச் சுரண்டல் பற்றியது
(இ) அலைவாய்க் கரையில் - 3) உப்பளத் தொழிலாளர் பற்றியது
(ஈ) சேற்றில் மனிதர்கள் - 4) மீனவரின் வாழ்வியல் சிக்கல் பற்றியது
அ) 3, 1, 4, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 1, 2, 4 ஈ) 3, 4, 1, 2

www.Padasalai.Net

**14.** **குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிலில் முடக்கி தீக்குச்சிகளை அந்தப் பெட்டியில் அடைப்பதைப் போன்று குழந்தைகளின் உடலையும் மனதையும் நொறுக்கும் அவல உலகைச் சுட்டிக்காட்டும் புதினம் .............. .**

அ) கூட்டுக் குஞ்சுகள் ஆ) சுழலில் மிதக்கும் தீபங்கள்
இ) மண்ணகத்துப் பூந்துளிகள் ஈ) புதிய சிறகுகள்

**15.** **பெண்குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து, இராஜம் கிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்ட புதினம் .............. .**

அ) புதியதோர் உலகம் செய்வோம் ஆ) மண்ணகத்துப் பூந்துளிகள்
இ) கோடுகளும் கோலங்களும் ஈ) கூடுகள்

**16.** **“உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்” என்று கூறியவர் .............. .**

அ) சின்னப்பிள்ளை ஆ) ராஜம் கிருஷ்ணன்
இ) உமா மகேஸ்வரி ஈ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

**17.** **சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது பெற்ற பெண்மணி யார்?**

அ) சின்னப்பிள்ளை ஆ) டெசி தாமஸ் இ) கிருஷ்ணம்மாள் ஈ) மங்களா மணி

**18.** **பொருத்துக:**

(அ) பால சரசுவதி - 1) இந்திய மாமணி
(ஆ) ராஜம் கிருஷ்ணன் - 2) தாமரை செவ்வணி விருது
(இ) கிருஷ்ணம்மாள் - 3) சாகித்திய அகாதெமி விருது
(ஈ) எம்.எஸ். சுப்புலட்சுமி - 4) காந்தி அமைதி விருது

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 3, 1, 4 இ) 2, 3, 4, 1 ஈ) 3, 4, 1, 2

**19.** **சின்னப்பிள்ளை, ஸ்திரீ சக்தி புரஸ்கார் விருதை யாரிடம் பெற்றார்?**

அ) மன்மோகன் சிங் ஆ) பி.வி. நரசிம்மராவ் இ) வாஜ்பாய் ஈ) ஐ.கே. குஜ்ரால்

**20.** **ஹெலன் கெல்லரால் பாராட்டப் பெற்றவர்.....................**

அ) எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆ) பாலசரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

**21.** **மதுரை சின்னப்பிள்ளைக்கு விருது வழங்கிய பிரதமர்.....................**

அ) திரு.மொரார்ஜி தேசாய் ஆ) திருமதி. இந்திராகாந்தி
இ) திரு.வாஜ்பாய் ஈ) திரு.இராஜீவ் காந்தி

**22.** **மகாத்மா காந்தியின் பிறந்த நாளன்று எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடிய மீராவின் பாடலை ஒலிபரப்பிய வானொலி நிலையம்.........**

அ) சென்னை வானொலி ஆ) தில்லி வானொலி
இ) மும்பை வானொலி ஈ) திருச்சி வானொலி

**23.** **கூட்டுக் குஞ்சுகள் என்ற புதினம் யாரைப் பற்றி எழுதப்பட்டது?**

அ) உப்பளத் தொழிலாளர்கள் ஆ) மீனவர்கள்
இ) படுகர் இனமக்கள்
ஈ) தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்ட குழந்தைத் தொழிலாளர்கள்

**24.** **பாலசரஸ்வதியின் பரதநாட்டியம் முதலில் அரங்கேற்றப்பட்ட இடம்.....................**

அ) சிதம்பரம் ஆ) மதுரை இ) காஞ்சிபுரம் ஈ) தஞ்சாவூர்

**25.** **எம்.எஸ்.சுப்புலட்சுமியிடம் மீராவின் பாடலை பாடச் சொன்னவர்..................**

அ) காந்தியடிகள் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) சரோஜினி நாயுடு ஈ) இராஜாஜி


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. அ) எம்.எஸ்.சுப்புலட்சுமி | 2. இ) எம்.எஸ்.சுப்புலட்சுமி | 3. ஆ) 1954 |
| 4. ஈ) மகசேசே விருது | 5. அ) இந்திய மாமணி | 6. அ) எம்.எஸ்.சுப்புலட்சுமி |
| 7. ஆ) 1966 | 8. இ) பாலசரஸ்வதி | 9. ஈ) பரதநாட்டியம் |
| 10. இ) ராஜம் கிருஷ்ணன் | 11. ஈ) வேருக்கு நீர் | |
| 12. ஆ) பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி | 13. அ) 3, 1, 4, 2 | 14. அ) கூட்டுக் குஞ்சுகள் |
| 15. ஆ) மண்ணகத்துப் பூந்துளிகள் | 16. ஈ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் | 17. இ) கிருஷ்ணம்மாள் |
| 18. இ) 2, 3, 4, 1 | 19. இ) வாஜ்பாய் | 20. அ) எம்.எஸ்.சுப்புலட்சுமி |
| 21. இ) திரு.வாஜ்பாய் | 22. அ) சென்னை வானொலி | |
| 23. ஈ) தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்ட குழந்தைத் தொழிலாளர்கள் | | 24. இ) காஞ்சிபுரம் |
| 25. அ) காந்தியடிகள் | | |

## சிறுவினா

**1. எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் அவர்களின் புகழ்பெற்ற புதினங்களைக் குறித்து எழுதுக.**

1. பாரதியாரின் வாழ்க்கை வரலாறு குறித்த **'பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி'** என்ற வரலாற்றுப் புதினம்.
2. உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கையை எடுத்துக்கூறும் **'கரிப்பு மணிகள்'** என்ற புதினம்.
3. நீலகிரியில் வாழும் படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்கள் குறித்த **'குறிஞ்சித்தேன்'** என்ற புதினம்.
4. மீனவர் வாழ்வின் சிக்கல்களைப் பற்றி பேசும் **'அலைவாய்க் கரையில்'** என்ற புதினம்.
5. அமைப்பு சாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதைச் சுட்டிக்காட்டிய **'சேற்றில் மனிதர்கள்'** மற்றும் **'வேருக்கு நீர்'** ஆகிய புதினங்கள்.
6. தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் முடங்கிப் போகின்ற குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய **'கூட்டுக் குஞ்சுகள்'** என்ற புதினம்.
7. பெண் குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதிய **'மண்ணகத்துப் பூந்துளிகள்'** என்ற புதினம்.

**விருது:** **'வேருக்குநீர்'** என்ற புதினத்திற்காக **சாகித்திய அகாதெமி** விருதினைப் பெற்ற முதல் பெண் எழுத்தாளர் ஆவார்.

**2. திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் நாட்டிற்கு ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக.**

1. காந்தியச் சிந்தனையில் கவரப்பட்ட திருமதி. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவரது சர்வோதய இயக்கத்தில் சேர்ந்து களப்பணி ஆற்றினார்.
2. ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றார்.
3. நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து **'பூதான இயக்கத்தில்'** பணிபுரிந்தார்.
4. **'உழுபவருக்கே நில உரிமை இயக்கம்'** என்ற அமைப்பைத் தொடங்கி, வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறு பணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தார்.

**விருதுகள் :** இந்திய அரசின் **'தாமரைத்திரு விருது'**
சுவீடன் அரசின் **'வாழ்வுரிமை விருது'**
சுவிட்சர்லாந்து அரசின் **'காந்தி அமைதி விருது'**.

☆☆☆

www.Padasalai.Net


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

# இயல் 6 புறப்பொருள் இலக்கணம்

கற்கண்டு

## கற்பவை கற்றபின்

1. **புறத்திணைகள் காட்டும் போர்க்களக் காட்சிகளில் மனிதநேயம் குறித்து ஐந்து நிமிடங்கள் பேசுவதற்கு ஏற்ற உரைக்குறிப்பு ஒன்றைத் தயார் செய்க.**

அனைவருக்கும் வணக்கம்.

நான் இப்போது புறத்திணைகள் காட்டும் போர்க்களக் காட்சிகளில் மனிதநேயம் குறித்துப் பேச வந்துள்ளேன். முதலில் மனிதநேயம் என்பது பற்றிக் கூறுகிறேன். மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் மற்றவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். அன்புதான் இன்பத்தின் ஊற்றுக்கண். அவ்வின்ப ஊற்று மனித இனத்தில் படிந்துள்ள குற்றங்களைப் போக்கி மனிதனது பெருமையையும் உரிமையையும் மதிக்கும் வகையில் போற்றப்படுவது மனிதநேயம் ஆகும்.

போரில் புறமுதுகினைக் காட்டி ஓடுபவனையும் நடுங்கி அஞ்சுபவனையும் எந்த ஒரு தாக்குதலுக்கும் உட்படுத்தாமல் விட்டுவிடுவது நன்று என்ற மனிதாபிமானத்துடன் செயல்பட்டனர். அவனைத் தாக்கியோ வீழ்த்தியோ வரும் வெற்றி சிறப்பானவை அல்ல எனக் கருதினர். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த போரில் துரியோதனரைச் சார்ந்தவர்கள் வீழ்த்தப்பட்டு மாய்ந்து போயினர். அப்போர்க்களத்தில் மாய்ந்து விட்ட தலைவனுடைய எஞ்சிய படைவீர்களுக்கும் தருமர் முதலாகிய படைவீரர்களுக்கும் சேரலகன் அன்னமிட்டு கைப்பற்றியதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அவ்விடத்தில் தம் வெற்றியைக் கொண்டாடாமல் தோல்வியைத் தழுவியவர்களை உதாசீனப்படுத்தாமல் அவர்களுக்கு உணவளித்து உயிர் பிழைக்கச் செய்த சேரலகனின் செயலில் தோன்றியது மனிதநேயம்.

மன்னர்கள் வீரர்கள் பகைவர் நாட்டில் போருக்குச் செல்லும் முன் அவ்விடம் இருக்கும் மக்கள் பாதுகாப்பை முன்னிறுத்தி அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு செய்வர். ஏனெனில் ம்ன்னனின் கோபம் பகைவரைத் தாக்குவதே ஆகும். அப்பாவி மக்களை அன்று. ஆகவே போர்தொடங்குவதற்கு முன் போர்ச்செய்தியினை முரசறைந்து தெரிவிப்பது மரபாகும். அதே சமயங்களில் போரில் பங்கு கொள்ளாதவர்கள் பாதுகாப்பிற்காக எச்சரிக்கைசெய்யப்படுவதும் உண்டு. போரில் அப்பாவி மக்களின் உயிர் பிரிந்து விடக்கூடாது என்பதற்காக அம்மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகரச் செய்த பண்பு பண்டைய தமிழர்களின் மனிதநேயத்தை உணர்த்துகிறது.

நாட்டு மக்களைப் பாதுகாத்தல் அரசனுடைய கடமையாகக் கருதப்பட்டது. அதிலும் குறிப்பாக போர்க்களத்தில் உயிர்களைப் போற்றிப் பாதுகாப்பதும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் ஒரு வேந்தனின் முக்கியப் பங்காகக் கருதப்பட்டது. அரசன் நாங்கள் அம்புகளைச் செலுத்திப் போர் செய்ய உள்ளோம். மக்களாகிய நீங்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்தைச் சென்று அடையுங்கள் என மனிதயநேயத்தோடு முன்னெச்சரிக்கை செய்வான். இவ்வாறு மன்னன் நல்லெண்ணங் கொண்டு மக்களைச் சீரும் சிறப்புமாக வழி நடத்திச் செல்லும் பாங்கினைப் பாராட்டியே ஆக வேண்டும்.

நல்லோரான மனிதநேய பண்பாளர்கள் இருந்ததாலேயே எல்லோர்க்கும் வையத்தில் மழைபொழிந்ததாகக் காட்டப்பெற்றுள்ளது. எல்லா ஊர்களும் யாவர்க்கும் உரிய ஊர்களாக இருந்தன. தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பண்பாளர்கள் பலர் இருந்தனர். செய்ந்நன்றி பாராட்டிய சீலர்கள் பலர் இருந்தனர், அவர்களில் சிலர் நனி நாகரிகராகவும் இருந்தனர். இவ்வனைத்து மனிதநேயப் பண்பாளர்களும் மிகுந்திருந்த பண்டைத் தமிழகத்தில் உண்டி கொடுத்து உயிர் பாராட்டிய பண்பு பெரிதாகப் போற்றப்பட்டது. உண்டிக்கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் எனப் புகழ்ப்பெற்றார்கள். இவ்வாறு பண்டைக்காலம் மனிதநேயம் மிக்க காலமாக மிளிர்ந்துள்ளது என்பதனை அறிந்தோம்.

நன்றி!



www.Padasalai.Net

## திறன் அறிவோம் – புத்தக வினா

**பலவுள் தெரிக.**

1. **சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.** பிடிஏ–4; ஏப்ரல்–2023

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

**விடை இ) உழவு, ஏர், மண், மாடு**

4. **இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ...............**
பிடிஏ–2; அ.மா.வி 2019; செப்.–2020; ஆகஸ்ட்–2022; அரையாண்டுத் தேர்வு 2023

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**விடை இ) வலிமையை நிலைநாட்டல்**

**குறுவினா**

4. **புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.**

**எதிரெதிர்த் திணைகள் : பொதுவியல் திணை** பிடிஏ–1; செப்.2021; ஜூன் 2023; ஜூலை–2024

| | | | |
|---|---|---|---|
| (i) வெட்சி | × கரந்தை | (ii) வஞ்சி | × காஞ்சி |
| (iii) நொச்சி | × உழிஞை | (iv) தும்பை | × வாகை |
| (v) பாடாண் | × பொதுவியல் | (vi) கைக்கிளை | × பெருந்திணை |

5. **பொதுவியல் திணை பற்றிக் குறிப்பெழுதுக.**
வெட்சித்திணை முதல் பாடாண் திணை வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது பொதுவியல் திணை ஆகும்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

1. **அன்பின் ஐந்திணை என்பது ...............** அ.மா.வி 2019

அ) அகப்பொருள் ஆ) புறப்பொருள்
இ) ஐவகைநிலம் ஈ) நுண்பொருள்

**விடை அ) அகப்பொருள்**

2. **போரில் வெற்றி பெற்ற மன்னன் சூடிக்கொள்ளும் பூவைத் தேர்க.** ஜூலை–2024

அ) கரந்தைப் பூ ஆ) வாகைப் பூ இ) தும்பைப் பூ ஈ) நொச்சிப் பூ

**விடை ஆ) வாகைப் பூ**

3. **தும்பைத் திணை பற்றி எழுதுக. (அ) பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, போரிடும் திணை குறித்து எழுதுக.** பிடிஏ–4

1. பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச்சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவது தும்பைத் திணை.
2. போரிடுகின்ற அரசர்கள் இருவரும் தும்பைப் பூ மாலையையே சூடியிருப்பார்கள் போர்த் திணைகள் படிப்படியாக வளர்ந்த நிலையில், போரைத் தொடங்கும் நிகழ்வாக ஆநிரை கவர்தல் மேற்கொள்ளப்பட்டது.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **ஆநிரைகளை கவர்ந்து வருவதைக் குறிப்பிடும் புறத்திணை எது?**
அ) வெட்சி ஆ) கரந்தை இ) வஞ்சி ஈ) நொச்சி

2. **ஆநிரைகளை மீட்கச் செல்பவர்கள் எந்தப் பூவைச் சூடிச் செல்வர்?**
அ) வெட்சிப் பூ ஆ) கரந்தைப் பூ இ) வஞ்சிப் பூ ஈ) நொச்சிப் பூ

3. **மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்றச் செல்வதைக் குறிப்பிடும் புறத்திணை ...................**
அ) நொச்சி ஆ) உழிஞை இ) வாகை ஈ) காஞ்சி


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



4. **வாகைப் பூவைச் சூடுபவர் ....................**
அ) கோட்டையின் உள்ளிருந்தே போரிடுபவர்
ஆ) போர்க்களத்தில் எதிர் எதிர் நின்று போரிடுபவர்
இ) மண்ணாசை காரணமாக பகைவர் நாட்டைக் கைப்பற்றச் செல்பவர்
ஈ) போரில் வெற்றிபெற்ற மன்னன்

5. **மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்றச் செல்வதைக் குறிப்பிடும் புறத்திணை பூ ....................**
அ) வஞ்சிப் பூ ஆ) நொச்சிப் பூ இ) உழிஞைப் பூ ஈ) தும்பைப் பூ

6. **ஒரு தலைக்காமம் என்பது ....................**
அ) பொதுவியல் ஆ) அன்பின் ஐந்திணை
இ) பெருந்திணை ஈ) கைக்கிளை

7. **பாடாண் திணை என்பது ....................**
அ) களவொழுக்கம் ஆ) போரின் தன்மைகள்
இ) ஆண் மகனின் ஒழுகலாறுகள் ஈ) பெண் மகளின் ஒழுகலாறுகள்

8. **மன்னனது போரை மட்டும் சொல்லாது பிற மாண்புகளையும் பாடும் திணை ....................**
அ) வாகைத்திணை ஆ) நொச்சித்திணை
இ) பொதுவியல் திணை ஈ) பாடாண்திணை

9. **மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த போது .................. சொத்தாகக் கருதினர்.**
அ) நிலத்தை ஆ) ஆநிரைகளை இ) கோட்டையை ஈ) வீரத்தை

10. **புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது..................**
அ) புறத்திணை ஆ) அகத்திணை இ) குறிஞ்சித்திணை ஈ) பொதுவியல் திணை

11. **புறத்திணை .................... வகைப்படும்.**
அ) ஏழு ஆ) ஐந்து இ) பன்னிரண்டு ஈ) ஆறு

12. **பொருத்துக.**
அ) நிரை கவர்தல் - 1. கரந்தை
ஆ) நிரை மீட்டல் - 2. வெட்சி
இ) மண்ணாசை - 3. காஞ்சி
ஈ) எதிர்த்துப்போரிடல் - 4. வஞ்சி

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 4, 3 இ) 2, 1, 3, 4 ஈ) 3, 2, 1, 4

13. **பொருத்துக.**
அ) கோட்டையைக் காத்தல் - 1. உழிஞை
ஆ) கோட்டையை வளைத்தல் - 2. தும்பை
இ) ஒருவரோடு ஒருவர் போரிடுவது - 3. வாகை
ஈ) வெற்றி - 4. நொச்சி

அ) 4, 3, 2, 1 ஆ) 4, 1, 3, 2 இ) 4, 1, 2, 3 ஈ) 3, 2, 4, 1

14. **பகை வேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட போரிடுவது ................**
அ) வஞ்சித்திணை ஆ) உழிஞைத்திணை இ) நொச்சித்திணை ஈ) தும்பைத்திணை

15. **உழிஞைத்திணை - இத்தொடருக்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுக்க.**
அ) கோட்டையைக் காத்தல் வேண்டி உள்ளிருந்தே போரிடுவது.
ஆ) மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்ற கருதி போர்க்குச் செல்வது.
இ) மாற்றரசனின் கோட்டையைச் சுற்றி வளைத்தல்
ஈ) ஆநிரைக் கவர்தல்

16. **பாடாண் திணை - இத்தொடரைப் பிரிக்கும் முறை ..................**
அ) பாடாண் + திணை ஆ) பாடு + ஆண்திணை
இ) பா + ஆண் + திணை ஈ) பாடு + ஆண் + திணை



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

17. **பொருந்தா காமத்தைக் குறிப்பது ...................**
அ) பாடாண் திணை ஆ) பெருந்திணை இ) தும்பைத்திணை ஈ) நொச்சித்திணை

18. **தவறான கூற்றைத் தேர்க.**
அ) வஞ்சித்திணை என்பது எதிர்த்துப் போரிடல்
ஆ) நொச்சித்திணை என்பது கோட்டையைக் காக்க உள்ளிருந்து போரிடுதல்
இ) தும்பைத்திணை என்பது வலிமையை நிலைநாட்ட களம் குறித்துப் போரிடல்
ஈ) வெட்சித்திணை என்பது நிரை கவர்தல்.

19. **இட்லிப்பூ என்பது ................**
அ) வெட்சிப்பூ ஆ) காஞ்சிப்பூ இ) வாகைப்பூ ஈ) உழிஞைப்பூ

20. **சிறிய முட்டை வடிவில் கொத்துக் கொத்தாகப் பூக்கக் கூடியது ................**
அ) நொச்சிப்பூ ஆ) கரந்தைப்பூ இ) வஞ்சிப்பூ ஈ) உழிஞைப்பூ

21. **வெள்ளையாக பஞ்சுப் போன்ற நுண்மயிர் அடர்ந்துள்ளது எப்பூ?**
அ) வாகைப்பூ ஆ) தும்பைப்பூ இ) வஞ்சிப்பூ ஈ) காஞ்சிப்பூ

22. **முடக்கொற்றான் என்றழைக்கப்படுவது ................**
அ) வாகைப்பூ ஆ) தும்பைப்பூ இ) வஞ்சிப்பூ ஈ) உழிஞைப்பூ

23. **நொச்சிப்பூ ................ நிலத்துக்குரியது.**
அ) நெய்தல் ஆ) பாலை இ) மருதம் ஈ) குறிஞ்சி

24. **செம்மை, நீலம், இளஞ்சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூப்பது ................**
அ) வெட்சி ஆ) வஞ்சி இ) கரந்தை ஈ) காஞ்சி

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. அ) வெட்சி | 2. ஆ) கரந்தைப் பூ | 3. ஆ) உழிஞை |
| 4. ஈ) போரில் வெற்றிபெற்ற மன்னன் | 5. இ) உழிஞைப் பூ | 6. ஈ) கைக்கிளை |
| 7. இ) ஆண் மகனின் ஒழுகலாறுகள் | 8. ஈ) பாடாண்திணை | 9. ஆ) ஆநிரைகளை |
| 10. அ) புறத்திணை | 11. இ) பன்னிரண்டு | 12. ஆ) 2, 1, 4, 3 |
| 13. இ) 4, 1, 2, 3 | 14. ஈ) தும்பைத்திணை | |
| 15. இ) மாற்றரசனின் கோட்டையைச் சுற்றி வளைத்தல் | | 16. ஈ) பாடு + ஆண் + திணை |
| 17. ஆ) பெருந்திணை | 18. அ) வஞ்சித்திணை என்பது எதிர்த்துப் போரிடல் | |
| 19. அ) வெட்சிப்பூ | 20. ஆ) கரந்தைப்பூ | 21. இ) வஞ்சிப்பூ |
| 22. ஈ) உழிஞைப்பூ | 23. இ) மருதம் | 24. இ) கரந்தை |

## குறுவினா

1. **வெட்சித் திணை என்றால் என்ன?**
   1. மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில், ஆநிரைகளைச் (மாடுகளை) சொத்தாகக் கருதினர். ஒரு குழுவினரிடமிருந்து மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்தது.
   2. ஆநிரைக் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வர். எனவே, ஆநிரை கவர்தல் வெட்சித் திணை எனப்பட்டது.

2. **கரந்தைத் திணை என்றால் என்ன?**
   1. கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச் செல்வர். அப்போது கரந்தைப் பூவைச் சூடிக் கொள்வர்.
   2. அதனால் கரந்தைத் திணை என்று பெயர் பெற்றது.

3. **வஞ்சித் திணை என்றால் என்ன?**
   1. மண்(நாடு) சொத்தாக மாறிய காலத்தில் மண்ணினைக் கவர்தல் போராயிற்று.
   2. மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப் பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



4. **காஞ்சித் திணை என்றால் என்ன?**
தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப் பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித் திணை.

5. **நொச்சித் திணை என்றால் என்ன?**
   1. மண்ணைக் காக்கக் கோட்டைகள் கட்டப்பட்டன.
   2. கோட்டையைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப் பூவைச் சூடி உள்ளிருந்தே போரிடுவது நொச்சித் திணை.

6. **பாடாண் திணை என்றால் என்ன?**
   1. பாடு + ஆண் + திணை = பாடாண் திணை.
   2. ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண் திணை ஆகும்.

7. **பொதுவியல் திணை என்றால் என்ன?**
வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது பொதுவியல் திணை.

## சிறுவினா

1. **வெட்சிப் பூவின் வேறு பெயர் யாது? வெட்சிப் பூவின் அமைப்பு குறித்து எழுதுக.**
வெட்சிப் பூவின் வேறுபெயர் **இட்லிப் பூ** ஆகும். இது அழகுச் செடியாக வீட்டுத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் வளர்க்கப்படுகிறது. சிவந்த நிறத்தில் காட்சியளிக்கும்.

2. **கரந்தைப் பூவின் அமைப்பையும் அதன் வேறு பெயரையும் குறிப்பிடுக.**
சிறிய முட்டை வடிவில் கொத்தாகப் பூக்கும் கரந்தைப் பூ நறுமணம் மிக்கு அமைந்திருக்கும். இது செம்மை, நீலம், இளஞ்சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூக்கின்றது. இதன் வேறுபெயர் **'கொட்டைக் கரந்தை'** ஆகும். இது செடியில் பூக்கும்.

3. **மருத நிலத்துக்குரிய பூ எது? அதன் அமைப்பையும் வகைகளையும் குறிப்பிடுக.**
மருத நிலத்துக்குரிய பூ நொச்சி ஆகும். நீலநிறத்தில் கொத்துக் கொத்தாகப் பூக்கும். **இதன் வகைகள்** மணி நொச்சி, கருநொச்சி, மலைநொச்சி, வெண்ணொச்சி.

4. **உழிஞைப் பூ பற்றி விளக்குக.**
வேலிகளில் ஏறிப்படரும் உழிஞைக் கொடிகளில் பூப்பவை உழிஞைப் பூ ஆகும். இதன் கூட்டிலைகளும், மலர்களும் சிறியதாக இருக்கும். இதன் வேறுபெயர் முடக்கத்தான் (முடக்கொற்றான்) ஆகும்.

5. **புறத்திணைகளில் கூறப்பட்டுள்ள பூக்களை செடிப் பூ, கொடிப் பூ, மரப் பூ என வரிசைப்படுத்துக.**
**செடியில் பூக்கும் பூக்கள் :** வெட்சிப் பூ, கரந்தைப் பூ, நொச்சிப் பூ, தும்பைப் பூ
**கொடியில் பூக்கும் பூக்கள் :** வஞ்சிப் பூ, உழிஞைப் பூ.
**மரத்தில் பூக்கும் பூக்கள் :** காஞ்சிப் பூ, வாகைப் பூ.

## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க.** பிடிஏ–4; அ.மா.வி 2019; செப்.–2020; ஏப்ரல் & அரை.தேர்வு 2023; கா.தேர்வு 2024

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**விடை :** சங்க கால இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள ஐவகை நிலங்களில் மருதம் பயிரிட ஏற்றது. ஏனெனில் அங்குதான் செழிப்பான விளை நிலங்கள் உள்ளன. ஒரு விவசாயியின் உண்மையான உழைப்பின் பலன் தகுந்த சூரிய ஒளி, பருவமழை மற்றும் மண்வளம் ஆகியவற்றை சார்ந்திருக்கிறது. ஆனாலும் அனைத்திலும் சிறந்ததாக சூரிய ஒளியே, பண்டைய தமிழரால் தவிர்க்க முடியாத ஒன்றாய் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.

வரப் போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.

1. **வரப் போகிறேன்** – இன்னும் சிறிது நேரத்தில் **வரப் போகிறேன்.**
2. **இல்லாமல் இருக்கிறது** – கோடைக்காலம் என்பதால் கிணறு வற்றிப்போய் நீர் **இல்லாமல் இருக்கிறது.**
3. **கொஞ்சம் அதிகம்** – இந்த ஆடை மிகவும் நேர்த்தியாக உள்ளது. ஆனால் விலைதான் **கொஞ்சம் அதிகம்.**
4. **முன்னுக்குப் பின்** – குமரன் **முன்னுக்குப்பின்** முரணாகப் பேசுகிறான்.
5. **மறக்க நினைக்கிறேன்** – என் கவலைகளை **மறக்க நினைக்கிறேன்.**

### தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

| சொல் | பிரித்து எழுதுதல் | | எண்ணுரு |
|---|---|---|---|
| மூவேந்தர் | மூன்று + வேந்தர் | சேரர், சோழர், பாண்டியர் | ௩ |
| நாற்றிசை | நான்கு + திசை | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு | ௪ |
| முத்தமிழ் | மூன்று + தமிழ் | இயல், இசை, நாடகம் | ௩ |
| இருதிணை | இரண்டு + திணை | உயர்திணை, அஃறிணை | ௨ |
| முப்பால் | மூன்று + பால் | அறம், பொருள், இன்பம் பிடிஏ–6 | ௩ |
| ஐந்திணை | ஐந்து + திணை | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை பிடிஏ–6 | ௫ |
| நானிலம் | நான்கு + நிலம் | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் | ௪ |
| அறுசுவை | ஆறு + சுவை | இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு | ௬ |
| பத்துப்பாட்டு | பத்து + பாட்டு | திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி | ௧0 |
| எட்டுத்தொகை | எட்டு + தொகை | நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து | அ |

### கடிதம் எழுதுக.

**நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

பிடிஏ–3; அரையாண்டுத் தேர்வு 2019; மார்ச் 2024

**நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்**

சென்னை 29
19.05.20XX

**அனுப்புநர் :**
செல்வம். அ
20, முத்து மாரியம்மன் கோவில் தெரு, சென்னை –29.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**பெறுநர் :**

நாளிதழ் ஆசிரியர்,
ஜனனம், சென்னை- 40

**வணக்கம்**

**பொருள் :** பொங்கல் மலருக்காகக் கட்டுரை வெளியிடுதல் தொடர்பாக.

நான் மேலே கண்ட முகவரியில் வசிக்கிறேன். நான் பத்தாம் வகுப்பு படிக்கிறேன். தங்களுடைய நாளிதழில் பொங்கல் மலருக்காக கட்டுரை எழுத விருப்பம் உள்ளவர்கள் எழுதி அனுப்பலாம் என்ற விளம்பரத்தைப் பார்த்தேன். அதற்காக உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதி அனுப்பியுள்ளேன். என்னுடைய கட்டுரை நாளிதழில் வரவேண்டும் என்பது என் நீண்ட நாள் கனவு. தங்களுடைய விளம்பரம் என் கனவை நனவாக்கிவிட்டது.

என்னுடைய கட்டுரையை இப்பொங்கல் மலரில் வெளியிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

**இடம் :** சென்னை -29

**நாள் :** 19.06.21

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள.
செல்வம். அ

உறைமேல் முகவரி:

| | |
|---|---|
| நாளிதழ் ஆசிரியர்,<br>ஜனனம், சென்னை - 40 | அஞ்சல் தலை |

## 'உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம்'

பிடிஏ–4; செப்–2021

**முன்னுரை :** "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதியார் உழவுத்தொழிலை மேன்மை படுத்தியுள்ளார். உழவன் சேற்றில் கை வைக்கவில்லையென்றால் நாம் சோற்றில் கை வைக்க முடியாது என்பது நம் அனைவருக்கும் தெரியும். அத்தகு உயர்வுடைய உழவுத்தொழில் பற்றியும் உழவர்கள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**உழவுத் தொழில் :** நம் நாட்டில் இரு கண்களாக திகழ்பவை உழவும், நெசவுமே! 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற கூற்றிற்கிணங்க உணவினை விளைவிக்கும் உழவுத்தொழிலே உலகில் உள்ள அனைத்து தொழிலிலும் சிறந்த தொழில். இதனையே வள்ளுவர்

'சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை' என்று குறிப்பிடுகிறார்.

**உழவர் :** உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியார் உழவை முதலில் நிறுத்தி சிறப்பித்துள்ளார். தெய்வப்புலவரோ 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்று உழவரை முன்னிறுத்திப் பாடியுள்ளார். காந்தியடிகள் கிராமங்களின் சிறப்பைப் போற்றியுள்ளார். "உழவே அறிவியல்களில் எல்லாம் உயர்ந்த அறிவியல்" என்று டாக்டர் ஜான்சன் கூறினார். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற முதுமொழியும் உழவர்களைப் பற்றியது.

**உழவுத்தொழிலின் இன்றியமையாமை :** மனிதன் மலைகளில் தொடங்கிய வாழ்வைக் காடுகளில் தொடர்ந்தான். அடுத்த படி நிலை வளர்ச்சியே மருதம். காடுகளைச் சமன்படுத்தி ஆடுமாடுகளை வளர்த்தான். உழவுத் தொழிலைக் கண்டறிந்தான். வேட்டையாடி வாழ்க்கையைத் தொடங்கியவன், மனித சமூகமாக வளர்ந்து நாகரிகம் பெற்றதற்குக் காரணம் உழவுத்தொழிலே. இந்த உழவுத்தொழில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டது. ஆனால் இன்றோ மழைப் பொழிவின் மாற்றம், வயல்வெளிகளில் வீடுகள் போன்றவற்றால் விவசாயம் குறைந்துவிட்டது. தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்த குடும்பத்தில் உள்ளவர்கள் கூட 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது' எனக் கூறி உழவுத்தொழிலைக் கைவிட்டனர். இந்த நிலை மாற வேண்டும். இரண்டாம் பசுமைப்புரட்சியாக இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வேளாண்மையைப் பெருக்குவோம்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

**உழவர்களை மதித்தல் :** ஆண்டிற்கு ஒருமுறை உழவர்திருநாள் கொண்டாடப்படுகிறது. இது பொங்கல் திருநாள், அறுவடை நாள் என்று கொண்டாடப்படுகிறது. இத்திருநாள் உழவர்களையும் உழவுத்தொழிலையும் சிறப்பிக்கும் நாள் என்று கொண்டாடப்படுகிறது. ஆண்டு முழுவதும் வயலில் வியர்வை சிந்த உழைத்த உழவர்கள் பகலவனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவர்.

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் :**

உழுவதால் ஏற்படும் மெய்வருத்தத்தை நோக்கிப் பிறதொழில்களைச் செய்து வாழ்ந்தாலும் முடிவில் ஏர்த்தொழில் செய்பவரையே உலகம் எதிர்நோக்கியிருக்கிறது. இதனை வள்ளுவர்

“சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.” – திருக்குறள் (1031)

என்று கூறியுள்ளார். உழவுத்தொழில் செய்பவர்கள் பிறரிடம் சென்று இரவார். தம்பால் இரப்பவர்க்கு அவர் வேண்டுவதை ஈவர்.

**முடிவுரை :** “உழுவர் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து”

என்ற வள்ளுவரின் கருத்தால் உழவுத்தொழிலின் சிறப்பு சொல்லாமலே விளங்கும். விவசாயம் அழிவுப்பாதையை நோக்கிச் செல்லாமல் இருக்கப் பாடுபடுவோம். விவசாயம் மனிதனின் உயிர்மூச்சாகத் திகழ்வதால் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்.

## பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

பிடிஏ–4; செப்.–2020

கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்
கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை
காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ

**விடை :**

(i) கம்பன் (ii) உமறுப்புலவர் (iii) ஜவ்வாது புலவர்
(iv) காசிம்புலவர் (v) சேகனாப் புலவர் (vi) செய்குத்தம்பிப் பாவலர்
(vii) குணங்குடி மஸ்தான் சாகிபு

## விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

**மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்**

**சேர்க்கை எண் :** 10296 **நாள் :** 15.6.20xx **வகுப்பும் பிரிவும் :** 11–அ

பிடிஏ–2,6; மே–2022

அரையாண்டுத் தேர்வு 2023; மார்ச் 2024

| | | |
|---|---|---|
| 1. | மாணவ/மாணவியின் பெயர் | : ராஜி .அ. |
| 2. | பிறந்த நாள் | : 19.5.2008 |
| 3. | தேசிய இனம் | : இந்தியன் |
| 4. | பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : அன்புமணி அ. |
| 5. | வீட்டு முகவரி | : எண் –15, கம்பர் தெரு, திருவள்ளுவர் குடியிருப்பு, காஞ்சிபுரம். |
| 6. | இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : பத்தாம் வகுப்பு |
| 7. | பயின்ற மொழி | : தமிழ் |
| 8. | பெற்ற மதிப்பெண்கள் | : 490/500 |
| 9. | இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி | : அரசு உயர்நிலைப் பள்ளி, நேரு சாலை, காஞ்சிபுரம். |


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com



| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்(100) |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 620 085 | தமிழ் | 99 |
| பொதுத் தேர்வு 2019 | | ஆங்கிலம் | 95 |
| | | கணக்கு | 100 |
| | | அறிவியல் | 100 |
| | | சமூக அறிவியல் | 96 |
| | | மொத்தம் | 490 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்
11. தாய்மொழி : தமிழ்
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் : அறிவியல்/தமிழ்

ராஜீ . அ

மாணவ / மாணவியின் கையெழுத்து

## மொழியோடு விளையாடு

**விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க :**




**செய்தியாக மாற்றியமை :**

வேலூர் மாவட்டம், போக்குவரத்துக் காவல் துறையினரால் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெறவிருக்கிறது. 'சாலை பாதுகாப்பு' என்பது ஒரு தொடர் அன்று. அது தொடரும் நம்முடைய வாழ்க்கைமுறை என்பதை உணர வேண்டும். போக்குவரத்துக்கான அடையாளக் குறியீடுகளைப் பற்றியும் வாகனங்களை வேகமாக ஓட்டுவதனால் ஏற்படும் விபத்துகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**தமிழெண்களால் நிரப்புக.**

**கீழ்க்காணும் நாள்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| - | - | - | க | உ | ௩ | ச |
| ரு | சூ | எ | அ | கூ | க0 | கக |
| கஉ | க௩ | கச | கரு | கசூ | கஎ | கஅ |
| ககூ | உ0 | உக | உஉ | உ௩ | உச | உரு |
| உசூ | உஎ | உஅ | உகூ | ௩0 | - | - |

**தொடரைப் படித்து விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து) காலாண்டுத் தேர்வு 2023

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் ................ **விடை** கற்றல்



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை ........................ **விடை** கரு
3. கல் சிலை ஆகுமெனில், நெல் ...................... ஆகும். **விடை** சோறு
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து ........................ **விடை** எழுத்து
5. மீன் இருப்பது நீரில் ; தேன் இருப்பது ........................ **விடை** பூவில்

### அகராதியில் காண்க.

1. குணதரன் – முனிவன், நற்குணமுடையவன்
2. செவ்வை – நேர்மை, மிகுதி
3. நகல் – ஏளனம், நட்பு, மூலத்தில் இருந்து உருவாக்கப்படும் பிரதி
4. பூட்கை – வலிமை, உறுதி

### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**உழவரைப் போற்றுவோம்** ஏப்ரல்–2023

சூரியனுக்கு காலை வணக்கம் சொல்லும் – விவசாயி
நிலமகளைக் காக்கும் – விவசாயி
கலப்பையுடன் புறப்பட்டான் காலமெல்லாம் வியர்வை சிந்தும் – விவசாயி
ஏர் பிடிக்கும் கைகளால் பார் செழிக்க வைக்கின்றான் – விவசாயி
கலப்பையை ஆயுதமாக ஏந்தி பசுமைப்புரட்சி செய்கின்றான் – விவசாயி
ஊருக்கெல்லாம் சோறு போடும் – விவசாயி
நம் உயிர் காக்கும் குலசாமி! – செ. சசிகலாதேவி

### படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | |
|---|---|
| Agreement - ஒப்பந்தம் | Border - எல்லை |
| Discourse - சொற்பொழிவு | Rebellion - கிளர்ச்சி |
| Monarchy - முடியாட்சி | |

### நிற்க அதற்குத் தக...

அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை.

அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்....

பிடிஏ–1; செப்.–2020

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன். |
| கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன். | கல்வெட்டுகள் குறித்த செய்திகளை எல்லோரும் அறியும் வண்ணம் செய்வேன். |
| கல்வெட்டுகளை மாணவர்கள் அறியும்படி வரலாற்றுச் சின்னங்கள் உள்ள இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வேன். | கல்வெட்டுகள் குறித்த செய்திகளை புத்தகமாக அச்சிட்டு மாணவர்களும், மற்றவர்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் இலவசமாகத் தருவேன். |
| பாடப்புத்தகத்தில் பழம்பெருமை வாய்ந்த செய்திகளை இடம்பெற செய்வேன். | கல்வெட்டுகளை அடிக்கடி சுத்தம் செய்வேன். |


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## அறிவை விரிவு செய்

1. என் கதை – நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்
2. வேருக்கு நீர் – ராஜம் கிருஷ்ணன்
3. நாற்காலிக்காரர் – ந. முத்துசாமி

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 = 4)

1. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே–
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
2. சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள மருவூர்ப்பாக்கம் அமைந்துள்ள நகரம் ?
   அ) மதுரை ஆ) புகார் இ) வஞ்சி ஈ) சிலப்பதிகாரம்
3. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,
   அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு
   இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு
4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் .................
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.
6. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
7. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ – இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?
8. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளிக்க.** (2 × 3 = 6)

9. மருவூர்ப்பாக்கத்தில் அமைந்திருந்த வீதிகள் குறித்து எழுதுக.
10. 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற போராட்டத்தில் ஈடுபட்டதற்காக ம.பொ.சி. அனுபவித்த சிறைவாசம் பற்றி எழுதுக.
11. புறத்திணைகளில் கூறப்பட்டுள்ள பூக்களை செடிப் பூ, கொடிப் பூ, மரப் பூ என வரிசைப்படுத்துக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. 'தூசும்' – என தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

**V. விடையளி (ஏதேனும் ஒன்று)** (1 × 8 = 8)

13. எம்.எஸ்.சுப்புலட்சுமி, பால சரஸ்வதி, ராஜம் கிருஷ்ணன், கிருஷ்ணம்மாள் ஜெகநாதன், சின்னப்பிள்ளை ஆகியோர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக.
14. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக..

☆ ☆ ☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com

# இயல் 7 சங்க இலக்கியத்தில் அறம்

## உரைநடை உலகம்

கரு

தமிழர் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர்; இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர்; உலகமே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர்; அரசியல் அறம், அறங்கூறவையம், போர் அறம், கொடை, உதவி, வாய்மை குறித்துச் சங்க இலக்கியங்கள் பாடிய செய்திகள் இங்குக் கூறப்பட்டுள்ளன.



### கற்பவை கற்றபின்

1. 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" - கொன்றை வேந்தன்
"கிழமை பட வாழ்" - ஔவையார் ஆத்திசூடி
மேற்கண்ட பாடல் அடிகளின் கருத்துகளை ஒப்பிட்டுப் பேசுக.

அனைவருக்கும் வணக்கம்!

நான் இப்போது குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்ற கொன்றைவேந்தன் பாடலடியையும், கிழமை பட வாழ் என்ற ஔவையாரின் ஆத்திசூடி பாடலடியையும் ஒப்பிட்டுப் பேச வந்துள்ளேன்.

**குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' இதன் பொருள்: பிறருடைய குற்றங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்கு யாருமே இருக்கமாட்டார்கள் என்பதாகும். மனிதர்கள் அனைவரிடத்தலும் குறைகளும் உண்டு நிறைகளும் உண்டு. நம்மோடு இருக்கும் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் குறைகள் கண்டிப்பாக இருக்கும். நாம் அக்குற்றத்தினைப் பார்த்துக்கொண்டிருந்தால் நட்பும் உறவும் நீடிக்காது.

பிறருடைய குற்றங்களைப் பார்க்காமல் அந்த இடத்தில் நாம் இருந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். பிறருடைய தவறுகளை மன்னிப்போம் மறப்போம் என்றெண்ணி மறந்துவிடவேண்டும். மன்னிக்கும் மனப்பக்குவத்தைப் பெற்று வாழ்ந்தால் நட்புகளும் உறவுகளும் நிலைத்து நிற்கும். எவரையும் பகைவராக எண்ணக் கூடாது. மற்றவர்கள் நமக்குத் தீமை செய்வதாக நாம் உணர்ந்தால் அவருடன் நன்றாகப் பழகி அவரே திருந்தும்படி அவருக்கு நன்மையைச் செய்யவேண்டும். நாம் செய்த தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டுவிட்டால் துன்பங்கள் மறையும். நீங்கள் தவறு செய்துவிட்டு மன்னிப்பு கேட்டுக்கொண்டால் அது தவறைக் குறைத்துவிடும். அதனையே நியாயப்படுத்தினால் தவறு இரட்டிப்பாகி விடுகிறது.

**கிழமைப்பட வாழ்**

இப்பாடல் அடிகளின் பொருள் : உடலும் பொருளும் பிறருக்கு உரிமைப்படுமாறு வாழ்வதாகும்.என்பும் உரியர் பிறர்க்கு என்று வள்ளுவர் கூறியுள்ளது இப்பாடலடிக்குப் பொருத்தமானதாகும். நமக்காக மட்டுமே வாழாமல் மற்றவர்களின் நலனுக்காகவும் வாழ்வது சிறந்த வாழ்வாகும். அவ்வாறு நாட்டுக்காக தங்களுடைய வாழ்க்கையையே தியாகம் செய்தவர்கள் ஏராளம். தம்மிடம் உள்ள பொருளைப் பிறருக்காகக் கொடுப்பதும் , தம்மால் இயன்ற அளவிற்கு மற்றவர்களுக்கு உதவி செய்வதும் அவசியம் எனச்செயல்பட வேண்டும். எப்போதும் எல்லோரிடத்திலும் அன்போடு பழக வேண்டும். விட்டுக்கொடுத்து வாழ வேண்டும். பிறர் நமக்குத் தீங்கு செய்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்வதும்சிறந்த பண்பாகும். இவ்விரு பாடல்அடிகளிலும் உள்ள அடிப்படை பண்பு குற்றங்களைப்பாராட்டக்கூடாது, விட்டுக்கொடுக்கும் குணம், தன் உடலாலும் மற்றவர்க்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதாகும்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## திறன் அறிவோம் – புத்தக வினா

**பலவுள் தெரிக.**

2. **மேன்மை தரும் அறம் என்பது ....................** பிடிஏ–4; செப்.–2021; மார்ச் 2024
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.
விடை **அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது**

3. **உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் .............** பிடிஏ–6; செப்.–2020; ஏப்ரல் & அரை.தேர்வு 2023, 2024
அ) உதியன், சேரலாதன்
ஆ) அதியன், பெருஞ்சாத்தன்
இ) பேகன், கிள்ளிவளவன்
ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி
விடை **ஆ) அதியன், பெருஞ்சாத்தன்**

**குறுவினா**

1. **குறிப்பு வரைக - அவையம்.** பிடிஏ–5; மே–2022; ஏப்ரல்–2023
   1. அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.
   2. '**அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்**' என்கிறது புறநானூறு.
   3. **உறையூரிலிருந்த அறஅவையம்** தனிச் சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.
   4. **மதுரையில் இருந்த அவையம்** பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது
   5. மேலும் அங்குள்ள '**துலாக்கோல் போல நடுநிலைமிக்கது**' என்கிறது.

4. **சங்க இலக்கியத்தில் அரசனின் கடமையாக சொல்லப்பட்டன எவை?**
   1. மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.
   2. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
   3. நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது.

**சிறுவினா**

1. **சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**
பிடிஏ–1, 5; அ.மா.வி; அரை.தேர்வு 2019; செப். 2021; மே 2022; ஏப்ரல் 2023; ஜூன் 2023; ஜூலை 2024

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பது குறித்துக் காண்போம்.
   1. **அரசியல் அறம் :** நீர் நிலை பெருக்கம், நிலவளம், உணவுப் பெருக்கம், அரசின் கடமையாகச் சொல்லப்படுகிறது. அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்ற சங்க இலக்கியம் காட்டும் அறம் இன்றைக்கும் தேவையே.
   2. **இன்றைய தேவை :** நீர்நிலை, நிலவளம், உணவுப் பெருக்கம் குறைந்தால் பஞ்சம், வறுமை ஏற்படும். கையூட்டுப் பெற்றுக் கொண்டு முறைதவறி நீதி கூறினால் நாடு கெடும் என்பதால் அவை இன்றைக்கும் தேவையே.
   3. **போர் அறம் :** சங்க இலக்கியத்தில் கூறப்பட்டதைப் போன்று, வலிமை கொண்ட நாடு, வலிமை, வளம் அற்ற நாடுகளோடு போர் செய்தலைத் தவிர்க்க வேண்டும். இயற்கை, விலங்கு, மனிதம் காக்கப்பட வேண்டும்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



4. **வணிகம் :** வணிகத்தில் கூடுதல் விலை, கலப்படம், தரமற்ற பொருள்கள் போன்றவற்றைத் தவிர்த்து, மக்கள் நலம், வளம் சார்ந்து வணிகம் நடைபெற வேண்டும்.
5. **உதவி :** பிறர் துன்பம் தீர்ப்பதுதான் உண்மையான செல்வம். தனிநபர், நாடு, அரசியல் அமைப்புகள் போன்றவை வறுமை உற்றோர்க்கும், பிறருக்கும் உதவி செய்து வாழவேண்டும்.

2. **வாய்மை பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.**
   1. வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை "பொய்யாச் செந்நா" "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.
   2. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள்.
   3. இன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான்.
   4. துன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான்.

5. **'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.**

(குறிப்பு : – சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்.)

**'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' உரைக் குறிப்பு :**

இயற்கையின் இயல்புநிலை திரிதல் – உலகின் இயல்புநிலை சிதைக்கப்படுதல் – ஐம்பூதங்களின் தோற்றம் – மக்கள்தொகைப் பெருக்கத்தால் காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்தல். இயற்கை வழங்கிய கொடைகளான காடும், மலையும், ஆறும், நீரும் பாதுகாக்கப்படுதல் – தொழிற்சாலைகளின் பெருக்கத்தால் காற்று மாசுபடாமல் இருக்க வழிவகை செய்தல் – நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்தாமை, மற்றும் தொழிற்சாலையில் வெளியேறும் கழிவு நீரை ஆற்றிலும் குளத்திலும் கலக்காமல் இருந்தால்– கழிவுநீரை மறுசுழற்சி செய்து தொழிற்சாலைகளின் தேவைக்கு மீண்டும் பயன்படுத்துதல் – மண்ணின் தூய்மை கெடாமல் இருக்க இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல், வாகனத்தினால் ஏற்படும் ஓசைகளைக் கட்டுப்படுத்துதல் ஏவுகணைகள், செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதால் ஓசோன் படலம் அழியாமல் இருக்க வழி செய்தல் – சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்.

### நெடுவினா

1. **பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

பிடிஏ–5; ஆகஸ்ட்–2022; ஏப்ரல்–2023; ஜுலை–2024

சென்னை - 102
19-06-20XX

என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய அத்தை அவர்களுக்கு, கமலா எழுதுவது, என் வணக்கங்கள்! நாங்கள் இங்கு அனைவரும் நலமாக இருக்கிறோம். அங்கு தாத்தா, பாட்டி, மாமா, ராம் மற்றும் உங்கள் நலனையும் அறிய ஆவலாக உள்ளேன். உங்களிடம் என் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்காகவே இக்கடிதத்தை எழுதுகிறேன்.

சென்ற வாரம் எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. பெற்றோர்கள் மற்றும் அவரவர் உறவினர்கள் என்று பெருந்திரளாக இருந்தது. பள்ளித்திடல் நிரம்பி வழிந்தது என்றால் மிகையாகாது. இக்கூட்டத்தில் ஆண்டு விழாவிற்கு வந்திருந்த ஒருவர் அவருடைய பணப்பையைத் தவறவிட்டு விட்டார். அந்தப் பை என்னிடம் கிடைத்தது. அதில் அவருடைய அடையாள அட்டை, வாக்காளர் அட்டை, கொஞ்சம் பணமும் இருந்தது. அத்துடன் தொலைபேசி எண்கள் எழுதப்பட்ட சிறிய ஏடும் இருந்தது. நான் அப்பாவிடம் அலைபேசியை வாங்கி அவரிடம் பேசினேன்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



அவருடைய பையை வந்து பெற்றுக் கொள்ளும்படிக் கூறினேன். அவரும் வந்து வாங்கிக் கொண்டு என்னை மனதார வாயாரப் பாராட்டினார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இதனை உங்களிடம் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினேன்.

பள்ளி விடுமுறையின்போது ஊருக்கு வருகிறேன். அனைவரையும் விசாரித்ததாகக் கூறுங்கள்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
கமலா.

உறைமேல் முகவரி

பெறுநர்
திருமதி. பெ.லட்சுமி,
க/பெ. ந. பெருமாள், எண். 20, காந்தி தெரு, மதுரை.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார். வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.

**வினாக்கள் :** பிடிஏ–3, 6; செப்.–2020; அரையாண்டுத் தேர்வு 2023

**அ) போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?**

போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

**ஆ) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது?**

தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

**இ) போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?**

போரில் பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**ஈ) யாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?**

தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

**உ) உண்மையான மகிழ்ச்சி என்பது எது?**

ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.

### உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மே–2022

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

**அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?**

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்கு துணைபுரிந்தன.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?**

அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு.

**இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?**

மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கதாக இருந்தது என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

## நெடுவினா

1. **சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக. (அல்லது)**
**சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள அறங்கள் இக்காலத்திற்கு மட்டுமல்ல, எக்காலத்திற்கும் பொருந்தி வருவனவாகும்.**

**சங்க இலக்கியங்கள் கூறும் போர் அறங்கள் :** அ.மா.வி 2019; செப்.–2021

1. வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்தல் கூடாது.
2. பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர்கள் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும். தம்மைவிட வலிமை குறைந்தவர்களுடன் போர் செய்தல் கூடாது.
3. நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப் பெருக்கம் செய்து அனைவருக்கும் கிடைக்கச் செய்வது.
4. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்று சங்க இலக்கியம் காட்டும் அறம் இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளது.
5. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயன் மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது எனப் புறநானூறு கூறுகிறது.
6. வணிகத்தில் கூடுதல் விலை, கலப்படம், தரமற்ற பொருள்கள் போன்றவற்றை தவிர்த்து, மக்கள் நலம், வளம் சார்ந்து வணிகம் நடைபெற வேண்டும்.
7. பிறர் துன்பம் தீர்ப்பதுதான் உண்மையான செல்வம். தனிநபர், நாடு, அரசியல் அமைப்புகள் போன்றவை வறுமை உற்றோர்க்கும், பிறருக்கும் உதவி செய்து வாழவேண்டும்.

**படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.**


அ.மா.வி 2019

(i) தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர்.
(ii) சமய கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம் சங்ககாலம்.
(iii) வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.
(iv) கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடைமாட்சியைப் புலப்படுத்துகிறது.
(v) பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று கூறியவர் ...................**
அ) கால்டுவெல் ஆ) இராசமாணிக்கனார் இ) ஆர்னால்டு ஈ) இளங்குமரனார்
2. **"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" - இவ்வடிகள் இடம்பெற்ற நூல்.....**
அ) அகநானூறு ஆ) குறுந்தொகை இ) நற்றிணை ஈ) புறநானூறு
3. **'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' - இவ்வடி இடம்பெற்ற நூல்.....**
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பதிற்றுப்பத்து ஈ) திருக்குறள்


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

4. "அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும்" என்று கூறியவர்
அ) நல்லந்துவனார் ஆ) மூலங்கிழார்
இ) நக்கீரர் ஈ) ஊன்பொதிப்பசுங்குடையார்

5. "நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும்
அறனும் காத்தலும் அமைச்சர் கடமை" - என்று பாடிய பத்துப்பாட்டு நூல்............
அ) குறிஞ்சிப் பாட்டு ஆ) மதுரைக்காஞ்சி இ) முல்லைப் பாட்டு ஈ) மலைபடுகடாம்

6. "செம்மை சான்ற காவிதி மாக்கள்" என்று மாங்குடி மருதனார் போற்றுவது யாரை?
அ) மன்னரை ஆ) வீரர்களை இ) அமைச்சரை ஈ) ஓவியர்களை

7. தனிச்சிறப்புப் பெற்ற அறஅவையம் எங்கு இடம்பெற்றது?
அ) மதுரை ஆ) கொற்கை இ) புகார் ஈ) உறையூர்

8. எறியார் எறிதல் யாவணது எறிந்தார்
எதிர்சென்று எறிதலும் செல்லான் - என்ற புறநானூற்று அடிகள் உணர்த்துவது...........
அ) தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது
ஆ) அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும்
இ) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன
ஈ) தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி

9. "செல்வத்தின் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே" - இவ்வடிகள் இடம் பெற்ற நூல்...........
அ) நற்றிணை ஆ) கலித்தொகை இ) புறநானூறு ஈ) மதுரைக்காஞ்சி

10. வள்ளல்கள் எழுவரின் கொடைப் பெருமையைப் பதிவு செய்த நூல் எது?
அ) பொருநராற்றுப் படை ஆ) மதுரைக்காஞ்சி
இ) பெரும்பாணாற்றுப் படை ஈ) சிறுபாணாற்றுப் படை

11. கொடை இலக்கியங்கள் எனப் போற்றப்பட்டவை எவை?
அ) சங்க இலக்கியம் ஆ) சங்க மருவிய இலக்கியம்
இ) ஆற்றுப்படை இலக்கியம் ஈ) பக்தி இலக்கியம்

12. சேர மன்னர்கள் பத்துப்பேரைப் பற்றியது .................
அ) மதுரைக்காஞ்சி ஆ) பதிற்றுப்பத்து இ) நற்றிணை ஈ) புறநானூறு

13. 'இல்லோர் ஒக்கல் தலைவன்'; 'பசிப்பிணி மருத்துவன்' - இத்தொடர்கள் யாரைக் குறிக்கிறது?
அ) வள்ளல்கள் ஆ) வீரர்கள் இ) மன்னர்கள் ஈ) புலவர்கள்

14. கொடுப்பதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுப்பவன் யார்?
அ) நக்கீரன் ஆ) சேரலாதன் இ) அதியன் ஈ) பெருஞ்சாத்தன்

15. "வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்
வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை" - என்று குறிப்பிட்டப் புலவர்?
அ) பெரும்பதுமனார் ஆ) குமணன் இ) நச்செள்ளையார் ஈ) கபிலர்

16. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவனும் அதைப் பாடியவரும் யாவர்?
அ) பேகன்; பரணர் ஆ) அதியன்; ஔவையார்
இ) குமணன்; சாத்தனார் ஈ) மலையமான்; கபிலர்

17. பொருத்துக.
அ) மறுமை நோக்கிக் கொடுக்காதவன் - 1). மலையமான்
ஆ) எல்லாவற்றையும் கொடுப்பவன் - 2). சேரலாதன்
இ) வறுமையுற்றாலும் கொடுப்பவன் - 3). பேகன்
ஈ) தேடி வரவழைத்துக் கொடுப்பவன் - 4). அதியன்
அ) 3, 1, 4, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 3, 2, 4, 1


www.Padasalai.Net

18. இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்று பாடும் அகநூல்........
அ) அகநானூறு ஆ) குறுந்தொகை இ) கலித்தொகை ஈ) நற்றிணை

19. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் ............. என்று குறிப்பிடுகிறார்.
அ) சான்றாண்மை ஆ) பேராண்மை இ) இரவாமை ஈ) உதவியாண்மை

20. "உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்" என்று கூறிய நூல்?
அ) குறுந்தொகை ஆ) கலித்தொகை இ) புறநானூறு ஈ) நற்றிணை

21. "பிழையா நன்மொழி" என்று வாய்மையைக் குறிப்பிடும் நூல்..............
அ) குறுந்தொகை ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) கலித்தொகை

22. அறநெறிக்காலம் என்பது .................
அ) சங்ககாலம் ஆ) சங்ககாலத்திற்குப் பிந்தைய காலம்
இ) பக்தி இலக்கிய காலம் ஈ) தற்காலம்

23. அறநெறிக்கால அறங்கள் .................. சார்ந்தவை.
அ) சமயம் ஆ) வரலாறு இ) பண்பாடு ஈ) இலக்கியம்

24. துலாக்கோல் போல நடுநிலை மிக்கது .................. அவையம்.
அ) உறையூர் ஆ) மதுரை இ) கொற்கை ஈ) வஞ்சி

25. பதிற்றுப்பத்து ................ அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது.
அ) பாண்டிய ஆ) சோழ இ) சேர ஈ) பல்லவ

26. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்று புறநானூற்றில் பாடியவர்
அ) நக்கீரனார் ஆ) நல்லந்துவனார் இ) பெருங்கடுங்கோ ஈ) பெரும்பதுமனார்

27. புறநானூற்றில் ................ என்ற புலவரின் கொடைத் தன்மை கூறப்பட்டுள்ளது.
அ) கபிலர் ஆ) நக்கீரனார் இ) பெருஞ்சித்திரனார் ஈ) நச்செள்ளையார்

28. சீனாவிற்குச் சென்று பௌத்த சமயத் தத்துவங்களைப் போதித்த போதிதர்மர் ............... மாநகரத்துச் சிற்றரசர் ஆவார்.
அ) காஞ்சி ஆ) மதுரை இ) உறையூர் ஈ) தஞ்சை

29. குமணனின் கொடைத் தன்மையைப் பாடியவர் ..................
அ) நக்கீரர் ஆ) பரணர் இ) கபிலர் ஈ) பெருந்தலைச் சாத்தனார்

30. "அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்" என்று கூறிய நூல் .............
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) பரிபாடல்

31. போதி தர்மர் ................ நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
அ) கி.பி. ஆறாம் ஆ) கி.பி. ஏழாம் இ) கி.பி. இரண்டாம் ஈ) கி.மு. இரண்டாம்

32. 'ஜென் தத்துவம்' எந்த சமயத் தத்துவத்தின் அடிப்படையில் தோன்றியது?
அ) சமணம் ஆ) பௌத்தம் இ) சைவம் ஈ) வைணவம்

33. போதி தர்மருக்கு எங்கு கோவில் கட்டப்பட்டுள்ளது?
அ) ஜப்பான் ஆ) தாய்லாந்து இ) சீனா ஈ) இலங்கை

34. சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும், ................. முதன்மைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன.
அ) அமைச்சர்களை ஆ) அரசர்களை இ) போர் வீரர்களை ஈ) சாதாரண குடிமக்களை

35. 'தாவோயியம்' என்ற கோட்பாடு ................. நாட்டைச் சேர்ந்தது.
அ) ஜப்பான் ஆ) ஜெர்மனி இ) சீனா ஈ) ரோம்

---

**விடைகள் :**

1. இ) ஆர்னால்டு
2. ஈ) புறநானூறு
3. ஆ) புறநானூறு
4. ஈ) ஊன் பொதிப் பசுங்குடையார்
5. ஆ) மதுரைக்காஞ்சி
6. இ) அமைச்சரை
7. ஈ) உறையூர்
8. அ) தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது
9. இ) புறநானூறு
10. ஈ) சிறுபாணாற்றுப் படை

www.Padasalai.Net

11. இ) ஆற்றுப்படை இலக்கியம்
12. ஆ) பதிற்றுப்பத்து
13. அ) வள்ளல்கள்
14. ஈ) பெருஞ்சாத்தன்
15. அ) பெரும்பதுமனார்
16. ஆ) அதியன்; ஔவையார்
17. அ) 3, 1, 4, 2
18. இ) கலித்தொகை
19. ஈ) உதவியாண்மை
20. ஈ) நற்றிணை
21. இ) நற்றிணை
22. ஆ) சங்ககாலத்திற்குப் பிந்தைய காலம்
23. அ) சமயம்
24. ஆ) மதுரை
25. இ) சேர
26. அ) நக்கீரனார்
27. இ) பெருஞ்சித்திரனார்
28. அ) காஞ்சி
29. ஈ) பெருந்தலைச் சாத்தனார்
30. ஆ) புறநானூறு
31. அ) கி.பி. ஆறாம்
32. ஆ) பௌத்தம்
33. இ) சீனா
34. ஆ) அரசர்களை
35. இ) சீனா

---

## குறுவினா

**1. உண்மையான மகிழ்ச்சி என்பது எது?**

1. வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.
2. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.
3. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி.

**2. நாக்கு குறித்து உம் பாடப்பகுதியில் கூறப்பட்ட செய்தியைக் கூறுக.**

1. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள்.
2. இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான்.
3. மெய் பேசும் – நா மனிதனை உயர்த்துகிறது.
4. பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.
5. 'பொய்யாச் செந்நா' என்றும் 'பொய்படுபறியா வயங்கு செந்நா' என்றும் இலக்கியங்கள் போற்றுகின்றன.

**3. சங்ககால அறங்கள் குறித்து எழுது.**

1. சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்ககால அறங்கள் ஆகும்.
2. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.

**4. அறத்தின் குறியீடுகளாகக் கூறப்பட்டவை யாவை?**

1. மன்னர்களுடைய செங்கோல்.
2. மன்னர்களுடைய வெண்கொற்றக் குடை.

**5. அரசன் எவ்வாறு தண்டனை வழங்க வேண்டும் என்று ஊன் பொதிப் பசுங்குடையார் கூறுகிறார்?**

குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து அரசன் தண்டனை வழங்க வேண்டும் என்று ஊன் பொதிப் பசுங்குடையார் கூறுகிறார்.

**6. 'கடையெழு வள்ளல்கள்' என்று போற்றப்பட்ட எழுவரின் கொடைப் பெருமையை பதிவு செய்துள்ள இலக்கியங்கள் யாவை?**

**எழுவரின் கொடைப் பெருமையைப் பதிவு செய்துள்ள இலக்கியங்கள் :** சிறுபாணாற்றுப்படை, பெருஞ்சித்திரனாரின் பாடல்கள்.

**7. கொடைப் பெருமைகளாகப் பேசப்படுபவை யாவை?**

1. அரியன என்று தயங்காது கொடுத்தல்.
2. ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாது கொடுத்தல்.
3. நாள்தோறும் கொடுத்தல்.

**8. 'ஈதல்' பற்றி கலித்தொகை கூறுவதை எழுதுக.**

**'ஈதல்' பற்றி கலித்தொகை கூறும் செய்திகள் :** ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது.

## சிறுவினா

**1. 'அறங்கூறவையம்' குறித்து சங்ககால இலக்கியங்கள் கூறும் செய்திகள் யாவை?**

1. 'அறங்கூறவையம்' என்பது சங்ககாலத்தில் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு கூறும் வழக்கு மன்றம் ஆகும். அறநெறி தவறாமல் நீதி வழங்கப்பட்டதால், 'அறம் கூறும் அவையம்' எனப்பட்டது. இவை 'அறம் கூறும் மன்றங்கள்' எனவும் அழைக்கப்பட்டன.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

2. இவை அரசன் அறநெறியில் நின்று ஆட்சி புரிவதற்கு உதவிபுரிந்தன. அறம் 'அறக்கண்ட நெறிமான் அவையம்' என்று புறநானூறு குறிப்பிடுவதிலிருந்து இதன் சிறப்பை அறிய முடிகிறது.
3. உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது. மதுரையிலிருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

**2. சங்க இலக்கியங்களில் புலவர்கள் வள்ளல்களின் இயல்புகளை எவ்வாறு எடுத்துரைத்துள்ளனர்?**

| வள்ளலின் பெயர் | போற்றியவர் | போற்றுதல் (வள்ளல்களின் இயல்பு) |
|---|---|---|
| பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தன் | நக்கீரர் | வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுப்பவன். |
| அதியன் | ஔவையார் | உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன். |
| ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | நச்செள்ளையார் | இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்துக் கொடுப்பவன். |
| பேகன் | பரணர் | மறுமை நோக்கிக் கொடுக்காதவன். |
| குமணன் | பெருந்தலைச் சாத்தனார் | தன்னை நாடி வந்து பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தை விட பெருந்துன்பம் என்று வருந்தியவன். |
| மலையமான் திருமுடிக்காரி | கபிலர் | எல்லாவற்றையும் கொடுப்பவன். |

**3. சங்க இலக்கியத்தில் 'அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை' குறித்து எழுதுக.**

1. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயன் மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது எனப் புறநானூறு கூறுகிறது.

இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்

2. எனச் சங்க கால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார்.
3. நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

**விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க :**

1. **விடை: 'செம்மை சான்ற காவிரி காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறார்.**
**வினா:** மாங்குடி மருதனார் அமைச்சர்களை எங்ஙனம் போற்றுகிறார்?

2. **விடை: அறத்தின் குறியீடுகளாக மன்னர்களின் செங்கோலும் வெண்கொற்றக் கொடையும் போற்றப்பட்டன.**
**வினா:** அறத்தின் குறியீடுகளாக போற்றப்பட்டவை எவை?

3. **விடை: அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை ஆகும்.**
**வினா:** அறநெறிக்கால அறங்கள் எதைச் சார்ந்தது?

**நிறுத்தற்குறியிடுக :**

1. **வள்ளல்கள் இல்லோர் ஒக்கல் தலைவன் பசிப்பிணி மருத்துவன் என்றெல்லாம் போற்றப்பட்டனர்**
வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

2. **வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்பதை பொய்யாச் செந்நா பொய்படுபறியா வயங்கு செந்நா என்று இலக்கியங்கள் போற்றுகின்றன**
வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்பதை "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் போற்றுகின்றன.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com



**வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக :**

1. **இரவலர் வராவிட்டாலும் அவர்களை தேடி வரவழைத்து கொடுப்பவன் ஆட்கோட்பாட்டுச் சேரலாதன் ஆவார்.**

   இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்துக் கொடுப்பவன் ஆட்கோட்பாட்டு __ சேரலாதன் ஆவார்.

2. **பௌத்த சமய தத்துவத்தின் ஒரு பிரிவை போதித்தப் போதி தர்மருக்கு கோயில் கட்டி சிலை வைத்து வழிபடுகின்றனர் சீனர்கள்.**

   பௌத்த சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்த_ போதி தர்மருக்கு கோயில் கட்டிச் சிலை வைத்து வழிபடுகின்றனர் சீனர்கள்.

☆ ☆ ☆

**இயல் 7**

# தேம்பாவணி

## கவிதைப்பேழை

– வீரமாமுனிவர்

### கரு

கிறித்துவிற்கு முன் தோன்றிய **திருமுழுக்கு யோவான்** என்பவர் கிறித்துவின் வருகையை முன்னரே அறிவித்தவர் ஆவார். இவரை **'அருளப்பன்'** என்றும் குறிப்பிடுவர். வீரமாமுனிவர் இவரை **'கருணையன்'** என்று குறிப்பிட்டுள்ளார். இவர் தன் தாய் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார். தன் தாய் இறந்தவுடன் கருணையன் அடைந்த துன்பத்தில் இயற்கையும் பங்கெடுத்துக் கொண்டு ஆறுதல் அளிப்பது பாடப்பகுதியில் அமைந்துள்ளது.

### ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : வீரமாமுனிவர்

**இயற்பெயர்** : கான்சுடான்சு சோசப் பெசுகி

**பெற்றோர்** : கொண்டல்போ பெஸ்கி – எலிசபெத்

**ஊர்** : இத்தாலி நாட்டிலுள்ள காஸ்திக்கிளியோனே

**காலம்** : 1680 முதல் 1747 வரை

**அறிந்திருந்த மொழிகள்** : இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம்

**இவருடைய தமிழாசிரியர்** : மதுரை சுப்ரதீபக் கவிராயர்

**சிறப்பு** : தனது முப்பதாவது வயதில் தமிழகம் வந்து பயின்று காப்பியங்கள் படைத்தார்.

**இயற்றிய பிற நூல்கள்** : சதுரகராதி (தமிழின் முதல் அகராதி நூல்), தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), ஞான உபதேசம், திருக்காவலூர் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை, வேதியர் ஒழுக்கம். மேலும் மொழிபெயர்ப்பு நூல்கள், மருத்துவ நூல்கள், உரைநடை நூல்கள் ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.

### நூற்குறிப்பு

ஆகஸ்ட்–2022

**'தேம்பாவணி' பெயர் பொருள் விளக்கம் :** தேம்பா + அணி = வாடாத மாலை. தேன் + பா + அணி = தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு.

**நூல் அமைப்பு :**

| | |
|---|---|
| காண்டங்களின் எண்ணிக்கை | – 3 |
| படலங்களின் எண்ணிக்கை | – 36 |
| ஒவ்வொரு காண்டத்திலும் உள்ள படலங்களின் எண்ணிக்கை | – 12 |
| மொத்த பாடல்களின் எண்ணிக்கை | – 3615 |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**தேம்பாவணி ஒரு வழிநூல் :** கி.பி. 1665-இல் ஸ்பானிய நாட்டில் வாழ்ந்த **ஆகிர்தமரி** என்ற பரிசுத்த கன்னி இயற்றிய **'தேவமாதாவின் வரலாறு'** என்ற நூலைத் தழுவி இயற்றப்பட்டமையால் இது வழிநூல் எனப்படுகிறது.

**கதைக் கரு :** இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையான **சூசை மாமுனிவர்**, தாவீது மன்னனின் அரச மரபில் தோன்றிய வரலாற்றை இந்நூல் கூறுகிறது. சூசை மாமுனிவரின் பெயரை தமிழில் 'வளன்' என்று வீரமாமுனிவர் மாற்றியுள்ளார். **நூல் எழுதப்பட்ட காலம்:** 17-ஆம் நூற்றாண்டு ஆகும்.

## பாடப்பகுதி

தேம்பாவணியில், கருணையன் என்பவர், தன் தாய் இறந்தபோது அடைந்த துன்பங்கள் பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

பாடல்

**பூக்கையைக் குவித்துப் பூவே
புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆக
இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
அழுங்கணீர் பொழிந்தான் மீதே.**



## சொல்லும் பொருளும்

* பூக்கையைக் குவித்து – மலர் போன்ற தன் கைகளைக் குவித்து
* பூவே புரிவொடு – பூமித்தாயே பரிவுடன் (அன்புடன்)
* காக்கென்று – என் அன்னையின் உடலைக் காப்பாயாக என்று கூறி
* அம்பூஞ் சேக்கையைப் பரப்பி – அழகிய மலர்களால் ஆன படுக்கையை பரப்பினான். ('அம்' என்றால் அழகு என்பது பொருளாகும். 'அம்பூ' என்பது அழகிய மலர்கள் என்பதைக் குறிக்கிறது)
* இங்கண் – இவ்வுலகில்
* திருந்திய அறத்தையாவும் – செம்மையான அறங்கள் யாவற்றையும்
* யாக்கையைப் பிணித்தென்று ஆக – தன்னுள் (தன் உடலினுள்) பொதிந்து வைத்து
* இனிதிலுள் அடக்கி வாய்ந்த – பயனுள்ள வாழ்க்கை நடத்திய
* ஆக்கையை அடக்கி – தன் அன்னையின் உடலை அடக்கம் செய்து
* பூவோடு அழுங்கணீர் – மலர்களுடன் தன் கண்ணீரையும் சேர்த்து
* பொழிந்தான் மீதே – ஒரு சேரப் பொழிந்தான் (சிந்தினான்)

## பொருளுரை

கருணையன், தன் மலர் போன்ற கைகளைக் குவித்து, "பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக!" என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினான். இவ்வுலகில் செம்மையான அறங்களை எல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.

## விரிவான விளக்கம்

தன் தாயின் பிரிவு கருணையனை அளவிடற்கரிய துன்பத்திற்கு ஆளாக்குகிறது. தன் தாயின் உடலை மண்ணில் புதைப்பதற்கு முன், அழகிய மலர்களால் ஆன படுக்கை ஒன்றை தயார் செய்கிறான். இறந்த பின்னரும் தன் தாயின் உடல் நோகாமல் இருக்க வேண்டும் என்று எண்ணுவதுடன் பூமித்தாயிடம் தன் அன்னையின் உடலை பரிவுடன் காக்கும்படி வேண்டுகிறான்.

## அருஞ்சொற்பொருள்

| | | | |
|---|---|---|---|
| சேக்கை – படுக்கை | பிணித்து – கட்டி | யாக்கை – உடல் | வாய்ந்த – பயனுள்ள |


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com



## பிரித்தெழுதுக

| | | |
|---|---|---|
| பூக்கை – பூ + கை | பிணித்தென்று – பிணித்து + என்று | இனிதிலுள் – இனிதில் + உள் |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| காக்கென்று | – காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம் |
| கணீர் | – 'கண்ணீர்' என்பதன் இடைக்குறை |
| பூக்கை, பூஞ்சேக்கை | – உவமைத் தொகைகள் |
| குவித்து | – வினையெச்சம் |

## பகுபத உறுப்பிலக்கணம் தருக

| | |
|---|---|
| **குவித்து – குவி + த் + த் + உ**<br>குவி – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | **பொழிந்தான் – பொழி + த்(ந்) + த் + ஆன்**<br>பொழி – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி |
| **அடக்கி – அடக்கு + இ**<br>அடக்கு – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி | **பிணித்து – பிணி + த் + த் +உ**<br>பிணி – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி |

**பாடல்**

**வாய்மணி யாகக் கூறும்**
**வாய்மையே மழைநீ ராகித்**
**தாய்மணி யாக மார்பில்**
**தயங்கியுள் குளிர வாழ்ந்தேன்**
**தூய்மணி யாகத் தூவும்**
**துளியிலது இளங்கூழ் வாடிக்**
**காய்மணி யாகு முன்னர்க்**
**காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ.**

## சொல்லும் பொருளும்

* வாய் மணியாகக் கூறும் – வாயாலே மணிபோல கூறுகின்ற
* வாய்மையே – உண்மையான சொற்களையே
* மழை நீராகி – மழை நீரை உட்கொள்வது போல் பருகி
* தாய் மணியாக மார்பில் – தாயின் மார்பில் மணி மாலையாக
* தயங்கி உள் குளிர வாழ்ந்தேன் – அசைந்து உள்ளம் குளிரும்படியாக வாழ்ந்தேன்
* தூய மணியாகத் தூவும் – தூய மணி போன்று தூவுகின்ற
* துளி இலது – மழைத்துளி இல்லாமல்
* இளங்கூழ் வாடி – இளம்பயிர் வாடிப்போய்
* காய்மணி ஆகு முன்னர் – முதிர்ந்த நெல்மணி ஆவதற்கு முன்பு
* காய்ந்து எனக் – காய்ந்து விட்டதைப் போல்
* காய்ந்தேன் அந்தோ – ஐயோ! நானும் வருந்துகிறேன்

## பொருளுரை

"என் தாய், தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலை என அசைந்து, அழகுற வாழ்ந்தேன். இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்பு தூய மணிபோன்ற தூவும் மழைத் துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விட்டதைப் போல நானும் என் தாயை இழந்து வாடுகின்றேன்".

www.Padasalai.Net



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## விரிவான விளக்கம்

நெற்பயிர்கள் மழை இல்லாமல் வாடிக் கருகி விடுவதைப் போல தானும் தாய் இல்லாமல் வாடுவதாக கருணையன் வருந்திக் கூறும் இப்பாடலில் வீரமாமுனிவர் உவமையணியை அழகுற கையாண்டுள்ளார்.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| இளங்கூழ் – இளம்பயிர் | காய்ந்தேன் – வருந்தினேன் | தயங்கி – அசைந்து |

## பிரித்தெழுதுக

| | | |
|---|---|---|
| நீராகி – நீர் + ஆகி | மணியாக – மணி + ஆக | தயங்கியுள் – தயங்கி + உள் |
| துளியிலது – துளி + இலது | காய்ந்தென – காய்ந்து + என | |

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. காய்மணி | வினைத்தொகை | 2. இளங்கூழ் | பண்புத்தொகை |

## பகுபத உறுப்பிலக்கணம் தருக

| | |
|---|---|
| **காய்ந்தேன் – காய் + த்(ந்) + த் + ஏன்** | **தயங்கி – தயங்கு + இ** |
| காய் – பகுதி | தயங்கு – பகுதி |
| த் – சந்தி 'ந்' ஆனது விகாரம் | இ – வினையெச்ச விகுதி |
| த் – இறந்தகால இடைநிலை | |
| ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | |

**பாடல்**

**விரிந்தன கொம்பில் கொய்த**
**வீயென உள்ளம் வாட**
**எரிந்தன நுதிநச்சு அம்புண்டு**
**இரும்புழைப் புண்போல் நோகப்**
**பிரிந்தன புள்ளின் கானில்**
**பெரிதழுது இரங்கித் தேம்பச்**
**சரிந்தன அசும்பில் செல்லும்**
**தடவிலா தனித்தேன் அந்தோ!**

## சொல்லும் பொருளும்

* விரிந்தன கொம்பில் – பரந்து விரிந்து நின்ற மரக்கிளையில் இருந்து
* கொய்த – பறிக்கப்பட்ட
* வீ என – மலர் போல
* உள்ளம் வாட – என் மனம் வருந்துகிறது
* எரிந்தன – எரியும் தன்மை வாய்ந்த
* நுதிநச்சு – தன் நுனியில் (முனைப்பகுதி) நஞ்சினைக் கொண்ட
* அம்புண்டு – அம்பினால் அடிபட்டு
* இரும் புழை – பெரிய துளைபட்ட
* புண் போல் – புண்ணைப் போன்று
* நோக – வேதனை அடைந்தேன்
* பிரிந்தன – துணையைப் பிரிந்த
* புள்ளின் – பறவையைப் போல்
* கானில் – இந்த காட்டில்
* பெரிது அழுது – அதிகமாக அழுது
* இரங்கித் தேம்ப – இரங்கி வாடுகின்றேன்
* சரிந்தன – சரிவான வழுக்குகின்ற
* அசும்பில் – நிலத்தில்
* செல்லும் – செல்லுகின்ற
* தடம் இலா – வழி தெரியாத
* தனித்தேன் அந்தோ – தன்மையனாய் தனித்து நின்று தவிக்கின்றேன் ஐயோ!


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

### பொருளுரை

'என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல் வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இந்தக் காட்டில் இரங்கி வாடுகின்றேன். சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்'.

### விரிவான விளக்கம்

கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலர், நெருப்பும் நஞ்சும் முனையில் இருக்கின்ற அம்பினால் துளைக்கப்பட்ட புண், துணையைப் பிரிந்த பறவை, பாதை தெரியாத வழுக்குகின்ற நிலம் போன்றவற்றிற்கு இணையான துயரத்தை கருணையன் அடைந்துள்ளதை உவமைநயம் மிக்க ஆசிரியர் கூறியுள்ளார்.

### அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| கொம்பு – கிளை | தடம் – வழி (அ) பாதை | அசும்பு – நிலம் |
| கொய்த – பறித்த | கான் – காடு | புள் – பறவை |
| வீ – மலர் | தேம்ப – வாட | இலா – இல்லாத |
| புழை – துளை | | |

### பிரித்தெழுதுக

| | | |
|---|---|---|
| வீயென – வீ + என | பெரிதழுது – பெரிது + அழுது | தடவிலா – தடம் + இலா |

### இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| கொய்த – பெயரெச்சம் | இரங்கி – வினையெச்சம் | தடவிலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

### பகுபத உறுப்பிலக்கணம் தருக

| கொய்த – கொய் + த் + அ | இரங்கி – இரங்கு + இ | விரிந்தன – விரி + த்(ந்) + த் + அன் + அ |
|---|---|---|
| கொய் – பகுதி<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி | இரங்கு – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி | விரி – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>அன் – சாரியை<br>அ – பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதி |

பாடல்

**உய்முறை அறியேன்; ஓர்ந்த**
**உணர்வினொத்து உறுப்பும் இல்லா**
**மெய்முறை அறியேன்; மெய்தான்**
**விரும்பிய உணவு தேடச்**
**செய்முறை அறியேன்; கானில்**
**செல்வழி அறியேன்; தாய்தன்**
**கைமுறை அறிந்தேன் தாயும்**
**கடிந்தெனைத் தனித்துப் போனாள்.**

### சொல்லும் பொருளும்

* உய்முறை அறியேன் – உயிர் பிழைக்கும் வழியை என்னால் அறியமுடியவில்லை
* ஓர்ந்த உணர்வின் ஒத்து – நினைந்து கண்ட உணர்வுகளுக்கு ஏற்றவாறு
* உறுப்பும் இல்லா – இயங்கும் உறுப்புகள் இல்லாத
* மெய்முறை அறியேன் – உடலின் தன்மையையும் என்னால் அறிய முடியவில்லை
* மெய் தான் விரும்பிய – உடம்பானது தான் விரும்பிய
* உணவு தேட – உணவைத் தேடி
* செய்முறை அறியேன் – கொடுக்க வேண்டிய முறையை என்னால் அறிய முடியவில்லை
* கானில் செல்வழி அறியேன் – காட்டில் செல்லும் வழிகளையும் என்னால் அறிய முடியவில்லை


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

* தாய் தன் கைமுறை அறிந்தேன் – என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டும் அறிந்து கொண்டுள்ளேன்
* தாயும் கடிந்து எனைத் தனித்துப் போனாள் – என்னைத் தவிக்க விட்டுவிட்டு என் தாய் மட்டும் தனியாகப் போய்விட்டாள்

**பொருளுரை**

“நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்; நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்; உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்; காட்டில் செல்வதற்கான வழிமுறைகளையும் அறியேன். என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு என் தாய், தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே”!

**விரிவான விளக்கம்**

தாயின் வழிகாட்டுதல் இல்லாமல், தனக்கு சுயமாக எந்த வழிமுறையும் தெரியாது. எதுவும் தெரியாத தன்னை தவிக்க விட்டுவிட்டு தனியாகப் போய் விட்டாளே என்று கருணையன் ஏங்கித் தவிக்கிறார்.

**அருஞ்சொற்பொருள்**

| | | | |
|---|---|---|---|
| உய்முறை – வாழும் வழி | ஓர்ந்து – நினைத்த | கடிந்து – விலக்கி | மெய் – உடல் |

**பிரித்தெழுதுக**

| | |
|---|---|
| உணர்வினொத்து – உணர்வின் + ஒத்து | கடிந்தெனை – கடிந்து + எனை |

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| உய்முறை, செய்முறை, செல்வழி | வினைத்தொகைகள் |
| மெய்முறை | வேற்றுமைத் தொகை |
| கைமுறை | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| ஓர்ந்த, விரும்பிய | பெயரெச்சங்கள் |

**பகுபத உறுப்பிலக்கணம் தருக**

அறியேன் – அறி + ய் + ஆ + ஏன் (பிடிஏ–5)
அறி – பகுதி
ய் – உடம்படுமெய் சந்தி
ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

அறிந்தேன் – அறி + த்(ந்) + த் + ஏன்
அறி – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**பாடல்**

நவமணி வடக்க யில்போல்
  நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
  தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
  துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
  ஒலித்து அழுவ போன்றே.

**சொல்லும் பொருளும்**

* நவமணி வடக்கயில் போல் – ஒன்பது வகை மணிகளால் செய்த மணிமாலைகளைப் பிணித்தது போல்
* நல் அறப் படலை பூட்டும் – நல்ல அறங்களை எல்லாம் இணைத்து கோவையாக ஆக்கும்
* தவம் அணி மார்பன் – தவத்தையே அணிந்துள்ள மார்பை உடையவனாகிய கருணையன்
* சொன்ன தன் இசைக்கு – சோக இசைக்கு ஏற்ப (புலம்புதலுக்கு ஏற்ப)
* இசைகள் பாட – தாமும் இசைபாடக் கருதி
* துவம் அணி மரங்கள் தோறும் – தேன் மலர்கள் பூத்த மரங்கள் தோறும்

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



* துணர் அணிச் சுனைகள் தோறும் – பூங்கொத்துகளை அணியாகக் கொண்ட தடாகங்கள் தோறும்
* உவம் அணி கானம் – வாழ்கின்ற பறவைகளும் வண்டுகளும்
* கொல் என்று – கொல்லென்று இரைந்து
* ஒலித்து அழுவ போன்றே – ஒலி எழுப்பிய விதம் அவைகள் அழுவன போல் தோன்றியது

**பொருளுரை**

நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்தது போன்று, நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிகலனாக அணிந்த மார்பனாகிய கருணையன், புலம்புவதைக் கேட்டு பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம் வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

**விரிவான விளக்கம்**

கருணையன் அழுது புலம்புவதைக் கேட்ட வண்டுகளும் பறவைகளும், கூடவே அழுது புலம்புவது போல் உள்ளது என்று கூறும் ஆசிரியர் இயற்கையும் கருணையனின் துக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டன என்று விளக்குகிறார்.

**அருஞ்சொற்பொருள்**

| | | |
|---|---|---|
| 1. படலை – மாலை | 2. துணர் – மலர்கள் | 3. உவமணி – மணமலர் |
| 4. கானம் – இசை | 5. சுனை – ஊற்று | |

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| நல்லறம் – பண்புத்தொகை | ஒலித்து – வினையெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம் தருக**

| | |
|---|---|
| **ஒலித்து – ஒலி + த் + த் + உ** (பிடிஏ–6) (ஆகஸ்ட்–2022; ஏப்ரல்–2023)<br>ஒலி – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | **வாழ்க – வாழ் + க** (மே – 2022)<br>வாழ் – பகுதி<br>க – வியங்கோள் வினைமுற்று. |

## கற்பவை கற்றபின்

1. **வீரமாமுனிவர் தமிழகத்தில் தங்கி பணிசெய்த இடங்களைப் பற்றியும் அங்கு அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகளைப் பற்றியும் நூலகத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டி வகுப்பறையில் பகிர்க.**

வீரமாமுனிவர் கி.பி. 1710– இல் கிறித்துவ மதப் பரப்புப் பணியைச் செய்வதற்காக லிஸ்பனிலிருந்து கோவாவிற்கு வந்தார். பின்னர் கோவாவிலிருந்து 1711ஆம் ஆண்டு கால்நடையாகவே அம்பலக்காடு வந்து, அங்கிருந்து மதுரையிலுள்ள காமநாயக்கன்பட்டிக்கு வந்து சேர்ந்தார். முதலில் இவர், கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற தனது பெயரை 'தைரியநாதன்' என்று மாற்றிக் கொண்டார். பின்னர் அப்பெயர் வடமொழிக் கலப்பு என்று அறிந்தவுடன் தூயதமிழில் 'வீரமாமுனிவர்' என்று மாற்றியமைத்துக் கொண்டார். மதுரை சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று காப்பியங்கள் இயற்றுமளவிற்குப் புலமை பெற்றார்.

**தமிழ்ப் பணிகள் :** பல இடங்களுக்குச் சென்று இலக்கியச் சுவடிகளைத் தேடி எடுத்து வெளிக் கொணர்ந்தார். இதனால் இவர் 'சுவடி தேடும் சாமியார்' என்று அழைக்கப்பட்டார்.

**காப்பியம்:** **தேம்பாவணி** – இந்நூல் மூன்று காண்டங்களில் 36 படலங்களைக் கொண்டு 3615 விருத்தப்பாக்களால் ஆனது. இதில் பின்னிணைப்பாக யாப்பு வடிவங்களைக் கொடுத்துள்ளார். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிராத வெளிநாட்டவரால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் என்ற பெருமையுடையது இந்நூல்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**அகராதிகள் :** சதுரகராதி: தமிழில் தோன்றிய முதல் அகராதி நூல் இது. 'சதுர்' என்றால் நான்கு என்பது பொருளாகும். இந்நூலில் பெயர் அகராதி, பொருள் அகராதி, தொகை அகராதி, தொடை அகராதி என்ற நான்கு பிரிவுகள் உள்ளன. இந்நூலை 1732ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் நாள் முடித்ததாக இந்நூலின் இறுதியில் வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் – இலத்தீன் அகராதி, இலத்தீன் – தமிழ் அகராதி
பிரெஞ்சு – தமிழ் அகராதி, தமிழ் – பிரெஞ்சு அகராதி, போர்த்துகீசிய – இலத்தீன் – தமிழ் அகராதி

**இலக்கண நூல்கள்**

**தொன்னூல் விளக்கம்** : இந்நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்துள்ளார்.

**கொடுந்தமிழ் இலக்கணம்** : முதன்முதலில் பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் வகுத்து எழுதப்பட்ட நூல்.

**செந்தமிழ் இலக்கணம்** : தூய தமிழ் இலக்கண நூல் ஆகும்.

**சிற்றிலக்கியங்கள் :**

திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை, அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கருணாகரப் பதிகம், திருக்காவலூர் திருத்தலத்தையும் ஏலாக்குறிச்சியில் உள்ள அடைக்கல மாதாவையும் போற்றும் வண்ணம் **திருக்காவலூர் கலம்பகம்** என்ற நூல் இயற்றப்பட்டது.

**உரைநடை நூல்கள்:**

வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், ஞானக் கண்ணாடி, வாமணன் கதை

**நகைச்சுவை இலக்கியம் :**

**பரமார்த்தக் குரு கதை :** தமிழில் முதன்முதலில் தோன்றிய நகைச்சுவை இலக்கியம் ஆகும். 1728-இல் புதுவையில் இந்நூலை வீரமாமுனிவர் எழுதி வெளியிட்டார்.

**மொழிபெயர்ப்பு நூல் :** திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் எழுதி வெளியிட்டார்.

**தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தம் :** முற்காலத்தில் தமிழ் எழுத்துகளின் வரிவடிவத்தில் குறில் நெடில் வேறுபாடுகள் இல்லாமல் இருந்தது.

எ.கா.

ஏ், ஓ் – எழுத்துகளின் மேல் புள்ளி இருந்தால் அவற்றை குறில் எழுத்துகளாக வாசிக்க வேண்டும்.

எ, ஒ – எழுத்துகளின் மேல் புள்ளி இல்லாமல் இருந்தால் அவற்றை நெடில் எழுத்துகளாக வாசிக்க வேண்டும்.

கெ் – பெ் – குறில் எழுத்துகள்

கெ – பெ – நெடில் எழுத்துகள்

வீரமாமுனிவர் அவற்றை மாற்றியமைத்தார்.

எ, ஒ – குறில் எழுத்துகள் ; ஏ, ஓ – நெடில் எழுத்துகள் என மாற்றினார்.

கெ, பெ – குறில் எழுத்துகள்

கே, பே – நெடில் எழுத்துகள் என மாற்றினார்.

இவருடைய தமிழ்ப்பணியைப் பாராட்டி இவருக்கு **வழங்கப்பெற்ற சிறப்புப் பட்டங்கள்**

தமிழ் சிறுகதை முன்னோடி, செந்தமிழ் தேசிகர்
மொழிபெயர்ப்பு வழிகாட்டி, தமிழ் அகராதியின் தந்தை, தமிழ் உரைநடையின் தந்தை

1742-இல் மதுரையிலிருந்து கேரளத்திலுள்ள அம்பலக்காட்டிற்குச் சென்று வசித்தார். 1747இல் அம்பலக்காட்டில் இயற்கை எய்தினார்.

## திறன் அறிவோம் – புத்தக வினா

### பலவுள் தெரிக.

4. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ........, ....... வேண்டினார்.
பிடிஏ–3; அரை. தேர்வு 2019; ஏப்ரல்–2023

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

**விடை** அ) கருணையன், எலிசபெத்துக்காக

### குறுவினா

2. ‘‘காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்’’ – உவமை உணர்த்தும் கருத்து யாது?
பிடிஏ–1; அரையாண்டுத் தேர்வு 2023

**உவமை:** இளம் பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்பே மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விடுகிறது.

**உவமை உணர்த்தும் கருத்து:** கருணையன் வளர்ந்து பெரியவராகி இவ்வுலகிற்கு நற்பலன்களை வழங்குவதற்கு முன் தன் தாயை இழந்து விடுகிறார்.

| உவமை | உவமேயம் |
|---|---|
| இளம் பயிர் | கருணையன் |
| முதிர்ந்த நெல்மணிகள் | கருணையன் வளர்ந்து பெரியவர் ஆதல் |
| மழைத்துளி | கருணையனின் தாய் |

### சிறுவினா

3. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்? ஜூன் 2023; மார்ச் 2024

**அறியேன் என்று கருணையன் கூறுவன :**

1. ‘நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
2. நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்.
3. உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்.
4. காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்.
5. என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன்‘ என்று கருணையன் கூறுகிறார்.

### நெடுவினா

1. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. பிடிஏ–3; செப்.–2021; மே–2022

**முன்னுரை :**

கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்த சூழலில் அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி ஆறுதல் அளிக்கிறது.

**கருணையன் கண்ணீர் :**

கருணையன், தன் மலர் போன்ற கைகளைக் குவித்து, “பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக” என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினார். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒருசேரப் பொழிந்தார்.

**தாயை இழந்து வாடுதல் :**

“என் தாய் தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாழ்ந்தேன். ஐயோ! இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணிப்போன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விட்டதைப் போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே!”


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**வழி தெரியாமல் தவித்தல் :**

"என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என்னுடைய துயரம். துணையைப் பிரிந்த பறவையைப்போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன். சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்."

**ஏதும் அறியாதவன் :**

"நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன், நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன். உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன். காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன். என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு, என்தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே!" என்று கருணையன் அழுகிறார்.

**பறவைகளும் வண்டுகளும் கூச்சலிட்டன :**

நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்ததுபோன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன், இவ்வாறு புலம்பிக் கூறினார். அது கேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம்வீசும் மலர்களும் மலர்ந்த குளங்கள் தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

**முடிவுரை:**

'மலர்போன்ற கை', மணிபோலக் கூறும் உண்மையான சொல், பயிர் வளர்ந்து நெல்மணிகளைக் காணும் முன் வாடியது போல, பறிக்கப்பட்ட மலரைப் போல, அம்பினால் துளைக்கப்பட்டு ஏற்பட்ட வலியைப் போல், துணையைப் பிரிந்த பறவைபோல், வாய்மையான சொற்களே மழைநீர் எனப் பல உவமைகளையும் உருவகங்களையும் கையாண்டு கவிதாஞ்சலியை நிகழ்த்தியுள்ளார் வீரமாமுனிவர்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **தேம்பாவணியை இயற்றியவர் ...............**
அ) வீரமாமுனிவர் ஆ) ஜி.யு.போப்
இ) தஞ்சை வேதநாயக சாஸ்திரிகள் ஈ) ஹெச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை

2. **தேம்பாவணி இயற்றப்பட்ட காலம் .............**
அ) 16-ஆம் நூற்றாண்டு ஆ) 17-ஆம் நூற்றாண்டு
இ) 18-ஆம் நூற்றாண்டு ஈ) 19-ஆம் நூற்றாண்டு

3. **வீரமாமுனிவர் ............. மாதங்களில் உருது மொழியைக் கற்றுக் கொண்டார்.**
அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு ஈ) ஆறு

4. **சந்தாசாகிப் ஆட்சி செய்த பகுதி ...............**
அ) மதுரை ஆ) வேலூர் இ) திருச்சி ஈ) ஆற்காடு

5. **'இஸ்மத் சன்னியாசி' என்பதன் பொருள் .............**
அ) தூயதுறவி ஆ) எளிய துறவி இ) அயல்நாட்டுத் துறவி ஈ) இரக்கமுள்ள துறவி

6. **'இஸ்மத் சன்னியாசி' என்ற பட்டத்திற்கு உரியவர் .............**
அ) ஜி.யு.போப் ஆ) வீரமாமுனிவர் இ) கால்டுவெல் ஈ) சீகன் பால்கு

7. **தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர் .............**
அ) இயேசு ஆ) அருளப்பன் இ) சூசையப்பர் ஈ) தோமையர்

8. **தேம்பாவணியில் உள்ள படலங்களின் எண்ணிக்கை .............**
அ) 36 ஆ) 38 இ) 40 ஈ) 42

9. **'வாய்மணியாகக் கூறும் <u>வாய்மையே மழைநீராகி</u>' - அடிக்கோடிட்ட சொற்களில் ............. அணி பயின்று வந்துள்ளது.**
அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) எடுத்துக்காட்டு உவமை அணி ஈ) பிறிதுமொழிதல் அணி



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**10. பொருத்துக.**

அ) தேம்பாவணி - 1. அகராதி நூல்
ஆ) சதுரகராதி - 2. நகைச்சுவை இலக்கியம்
இ) தொன்னூல் விளக்கம் - 3. காப்பியம்
ஈ) பரமார்த்த குருகதைகள் - 4. இலக்கண நூல்

அ) 3, 1, 2, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 4, 3, 2, 1

**11. 'இஸ்மத் சன்னியாசி' என்பது ............ சொல் ஆகும்.**

அ) பாரசீகம் ஆ) உருது இ) போர்த்துகீசியம் ஈ) இலத்தீன்

**12. கருணையன் தான் எதை மட்டும் அறிந்துள்ளதாகக் கூறி அழுதார்?**

அ) உயிர் பிழைக்கும் வழி ஆ) உணவைத் தேடிக் கொணரும் வழி
இ) தன் தாய் கையால் காட்டிய வழி ஈ) காட்டில் செல்வதற்கான வழி

**13. 'யாக்கையைப் பிணித்தென்று ஆக இனிதிலுள் அடக்கி வாய்ந்த' - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லுக்கான இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) பெயரெச்சம் ஆ) பண்புத் தொகை
இ) வினையெச்சம் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**14. கிறித்துவிற்குமுன் தோன்றியவர் .....................**

அ) சூசை ஆ) மரியாள் இ) யோசேப்பு ஈ) திருமுழுக்கு யோவான்

**15. கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி யார்?**

அ) சூசை ஆ) வளன் இ) அருளப்பன் ஈ) தாவீது

**16. கருணையனின் தாயார் யார்?**

அ) தோமையர் ஆ) எலிசபெத் இ) எவருமில்லை ஈ) மரியாள்

**17. வீரமாமுனிவர் இந்தியாவிற்கு வந்த நோக்கம் .....................**

அ) அரசியல் ஆ) சமயப் பணி இ) சுற்றுலா ஈ) வாடாத பூ

**18. 'தேம்பாவணி' என்பதன் ஒரு பொருள் .....................**

அ) வாடாத மாலை ஆ) அழகான மாலை இ) சமயக் காப்பியம் ஈ) வாடாத பூ

**19. 'தேம்பாவணி' யில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை .....................**

அ) 67 ஆ) 1900 இ) 3615 ஈ) 3315

**20. 'தேம்பாவணி' - இச்சொல்லைப் பிரிக்கும் முறை .....................**

அ) தேன்பா + அணி ஆ) தேம் + பாவணி இ) தேன் + பாவணி ஈ) தேன் + பா + அணி

**21. கிறித்துவின் வளர்ப்புத் தந்தை யார்?**

அ) போப் ஆ) தாமஸ் இ) பீட்டர் ஈ) சூசையப்பர்

**22. தேம்பாவணியில் உள்ள காண்டங்களின் எண்ணிக்கை .....................**

அ) நான்கு ஆ) ஆறு இ) மூன்று ஈ) பத்து

**23. தமிழில் தோன்றிய முதல் அகராதி நூல் .....................**

அ) வின்சுலோ ஆ) தமிழ்ப் பேரகராதி இ) சதுரகராதி ஈ) அபிதானகோசம்

**24. "பூமித்தாயே என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக" - இக்கூற்றைக் கூறியவர்...........**

அ) கருணையன் ஆ) சூசை இ) வீரமாமுனிவர் ஈ) இயேசு

**25. பொருத்துக.**

அ) சேக்கை - 1. உடல்
ஆ) யாக்கை - 2. படுக்கை
இ) பிணித்து - 3. துளை
ஈ) புழை - 4. கட்டி

அ) 3, 4, 1, 2 ஆ) 2, 1, 4, 3 இ) 2, 1, 3, 4 ஈ) 4, 3, 2, 1



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**26. பொருத்துக.**

அ) காடு - 1. அசும்பு
ஆ) நிலம் - 2. படலை
இ) மாலை - 3. துணர்
ஈ) மலர் - 4. கான்

அ) 4, 1, 2, 3 ஆ) 4, 1, 3, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 2, 1, 4

**27. பொருத்துக.**

அ) கணீர் - 1. வேற்றுமைத் தொகை
ஆ) காய்மணி - 2. கண்ணீர் என்பதன் இடைக்குறை
இ) காக்கென்று - 3. வினைத் தொகை
ஈ) மெய்முறை - 4. தொகுத்தல் விகாரம்

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 3, 1, 4 இ) 2, 3, 4, 1 ஈ) 3, 2, 4, 1

**28. 'தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாட' - இவ்வடியில் இடம் பெற்ற தொடை நயம்..........**

அ) அடி எதுகை ஆ) சீர் எதுகை இ) சீர்மோனை ஈ) எதுவுமில்லை

**29. 'வாய்மணி யாகக் கூறும்
வாய்மையே மழைநீ ராகித்' - இவ்வடி இடம் பெற்ற நூல்..................**

அ) கருணையன் ஆ) கம்பராமாயணம் இ) சீறாப்புராணம் ஈ) தேம்பாவணி

---

**விடைகள் :**
1. அ) வீரமாமுனிவர்
2. ஆ) 17-ஆம் நூற்றாண்டு
3. இ) இரண்டு
4. இ) திருச்சி
5. அ) தூயதுறவி
6. ஆ) வீரமாமுனிவர்
7. இ) சூசையப்பர்
8. அ) 36
9. ஆ) உருவக அணி
10. ஆ) 3, 1, 4, 2
11. அ) பாரசீகம்
12. இ) தன் தாய் கையால் காட்டிய வழி
13. இ) வினையெச்சம்
14. ஈ) திருமுழுக்கு யோவான்
15. இ) அருளப்பன்
16. ஆ) எலிசபெத்
17. ஆ) சமயப் பணி
18. அ) வாடாத மாலை
19. இ) 3615
20. ஈ) தேன் + பா + அணி
21. ஈ) சூசையப்பர்
22. இ) மூன்று
23. இ) சதுரகராதி
24. அ) கருணையன்
25. ஆ) 2, 1, 4, 3
26. அ) 4, 1, 2, 3
27. இ) 2, 3, 4, 1
28. இ) சீர்மோனை
29. ஈ) தேம்பாவணி

---

## குறுவினா

**1. தேம்பாவணி பாடப்பகுதியில் கருணையன் பற்றி நீவிர் அறிந்தவற்றை சுருக்கமாக எழுதுக.**

1. கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி கருணையன் ஆவார்.
2. தன் தாயுடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார்.
3. தன் தாய் இறந்தவுடன் அவர் படும் துயரங்கள் அளவிடற்கரியவை.
4. தாயை இழந்தவுடன் வாழும் வகை அறியாமல் தவிக்கும் அவருடைய மனவேதனைகள் பாடப்பகுதியில் அமைந்துள்ளன.

**2. கருணையனின் துயரத்தில் இயற்கை எவ்வாறு பங்கெடுத்துக் கொண்டது?**

கருணையன் தன் தாயை இழந்த வேதனையில் புலம்பி அழுவதைக் கண்ட பறவைகளும் வண்டுகளும் அந்தக் காட்டில் அழுவன போன்று கூச்சலிட்டன. அவை பல்வேறு இசைகளை இயக்கியது போன்று ஒலியெழுப்பின.

**3. கருணையன் பூமித்தாயிடம் எவ்வாறு வேண்டினார்?**

கருணையன் தன் மலர் போன்ற கைகளைக் குவித்து, "பூமித் தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக" என்று வேண்டினார்.

**4. தன் தாயுடன், அந்தக் காட்டில் எவ்வாறு வாழ்ந்ததாகக் கருணையன் கூறுகிறார்?**

தன் தாய், மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையாக அசைந்து அழகுற வாழ்ந்ததாக கருணையன் கூறுகிறார்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com


5. **கருணையனின் தாய் எலிசபெத்தின் பண்பு நலனைக் கூறுக.**
   1. இவ்வுலகில் உள்ள செம்மையான அறங்கள் அனைத்தையும் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கையை வாழ்ந்தவர்.
   2. தன் மகன் கருணையனுக்கு மணிபோன்ற உண்மையான சொற்களையே கூறி வளர்த்தவர்.

6. **கருணையன் வாழ்ந்த காட்டில் பறவைகளும் விலங்குகளும் வசித்த இடங்களை வீரமாமுனிவர் உவமைநயம் மிக்க எவ்வாறு கூறியுள்ளார்?**
   1. தேன் மலர்கள் பூத்த மரங்கள் தோறும் பறவைகள் இருந்தன.
   2. மணம் வீசும் மலர்கள் மலர்ந்துள்ள சுனை தோறும் வண்டுகள் இருந்தன.

7. **தூய துறவி பற்றி எழுதுக.**

   வீரமாமுனிவர், திருச்சியை ஆட்சி செய்த 'சந்தாசாகிப்' என்ற மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக் கொண்டார். இவருடைய எளிமையையும் துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப், இவருக்கு இஸ்மத் சன்னியாசி என்ற பட்டத்தை வழங்கினார். இந்த பாரசீகச் சொல்லுக்கு 'தூய துறவி' என்பது பொருளாகும்.

## குறுவினா

1. **கருணையன் தன் தாய் எலிசபெத்தின் உடலை எவ்வாறு அடக்கம் செய்தார்?**
   1. கருணையன் பூமித்தாயிடம் தன் தாயின் உடலை பரிவுடன் காக்கும்படி இரு கை குவித்து வணங்கி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினார்.
   2. பின்னர் தன் தாயின் உடலை மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன் மேல் தன் கண்ணீருடன் மலர்களையும் ஒருசேரப் பொழிந்தார்.

2. **தன் தாயைப் பிரிந்த கருணையனின் துயரங்களை தொகுத்து எழுதுக.**

   **தன் தாயைப் பிரிந்த கருணையனின் துயரங்கள் :**
   1. மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலர் போல அவர் மனம் வாடித் துயருற்றது.
   2. தீயையும் நஞ்சையும் தன் முனையில் கொண்டுள்ள அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்று துயருற்றார்.
   3. துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல், அந்தக் காட்டில் அழுது இரங்கி வாடினார்.
   4. சரிவான வழுக்கு நிலத்தில் தனியே விடப்பட்டு, செல்லும் பாதை தெரியாமல் தவிப்பவர் போல் தவித்தார்.

3. **கருணையன் தவத்தையே அணிகலனாக அணிந்த மார்பை உடையவன் என்ற கூற்றை விவரிக்கவும்.**

   ஒன்பது வகையான மணிகளால் ஆன நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்தது போன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே தன் மார்பில் அணிகலனாக அணிந்தவர் கருணையன் ஆவார்.

4. **ஆக்கையை அடக்கிப் பூவோடு அழுங்கணீர் பொழிந்தான் மீதே" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

   **இடம் :** வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணியில் எலிசபெத் அம்மையார் அடக்கம், கருணையின் கண்ணீர் படலத்தில் 2388 பாடலில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.

   **பொருள் :** தன் அன்னையின் உடலை அடக்கம் செய்து மலர்களுடன் தன் கண்ணீரையும் சேர்த்து ஒரு சேரப் பொழிந்தான் கருணையன்.

   **விளக்கம் :** அருளப்பன் அவன் தாய் எலிசபெத்துடன் காட்டில் வாழ்ந்து வந்தான். தன் தாய் இறந்தவுடன் கருணையன் அடைந்த துன்பத்தை இப்பாடல் விளக்குகிறது. தாயின் உடலை மண்ணில் புதைப்பதற்குமுன், மலர்படுக்கை தயார் செய்தான். இறந்த பிறகும் தன் அன்னையின் உடல் நோகாமல் இருக்க மலர்களையும் கண்ணீரையும் சேர்த்துச் சிந்தினான்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

பூக்கையைக் குவித்துப் பூவே
புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆக
இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
அழுங்கணீர் பொழிந்தான்
மீதே.

**1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் .............**

அ) மணிமேகலை ஆ) இயேசு காவியம்
இ) தேம்பாவணி ஈ) சிலப்பதிகாரம் **விடை இ) தேம்பாவணி**

**2. சேக்கை என்பதன் பொருள் ...............**

அ) சேர்க்கை ஆ) சேர்ப்பது இ) இணைப்பது ஈ) படுக்கை **விடை ஈ) படுக்கை**

**3. கணீர் - இலக்கணக் குறிப்பு தருக.**

அ) மெய்ம்மயக்கம் ஆ) இடைக்குறை
இ) குறிப்புச்சொல் ஈ) தொகுத்தல் விகாரம் **விடை ஆ) இடைக்குறை**

**4. பிணித்தென்று - பிரித்து எழுதுக.**

அ) பிணித்து + என்று ஆ) பிணி + என்று
இ) பிணித்து + தென்று ஈ) பிணி + தென்று **விடை அ) பிணித்து + என்று**

☆☆☆

www.Padasalai.Net


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**இயல் 7**

# அக்கறை

**கவிதைப்பேழை**

– கல்யாண்ஜி

## கரு

- ✳ உரைநடையில் கவிதை எழுதுவதைப் பாரதி தம் வசன கவிதைகள் மூலமாக தொடங்கினார். அந்த வகையில் நூறு ஆண்டுகளை எட்டும் புதுக்கவிதைகள் மனித நேயத்தை வலியுறுத்துவதாக உள்ளன.
- ✳ அடுத்தவர் மீதான அக்கறை நம்மிடம் இல்லாதபோது அங்கு மனிதம் மலராது. வாழ்வில் மனிதம் நசுங்கி விடாமல் இருக்க வேண்டும் என்பதை கல்யாண்ஜியின் இக்கவிதை வலியுறுத்துகிறது.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | கல்யாண்ஜி |
| இயற்பெயர் | : | சி. கல்யாண சுந்தரம் |
| புனைப் பெயர் | : | வண்ணதாசன் |
| ஊர் | : | திருநெல்வேலி |
| தந்தை | : | தி.க. சிவசங்கரன் (சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்) |
| பிறப்பு | : | 22.08.1946 (அகவை 75) |
| விருது | : | 2016 – சாகித்திய அகாதெமி – ஒரு சிறு இசை. |
| நூல்கள் | : | (கவிதை) புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற நதி, மணல் உள்ள ஆறு |

**கூடுதல் செய்தி :**

| | | |
|---|---|---|
| புதினம் | : | சின்னு முதல் சின்னு வரை |
| கட்டுரை | : | அகம்புறம் |
| கடிதம் | : | வண்ணதாசன் கடிதங்கள் |
| சிறுகதை தொகுப்பு | : | சமவெளி, மனுஷா, கனிவு, நடுகை, உயரப் பறத்தல் சில இறகுகள் சில பறவைகள், ஒரு சிறு இசை. |

## பாடல்

**சைக்கிளில் வந்த**
**தக்காளிக் கூடை சரிந்து**
**முக்கால் சிவப்பில் உருண்டது**
**அனைத்துத் திசைகளிலும் பழங்கள்**
**தலைக்கு மேலே**
**வேலை இருப்பதாய்க்**
**கடந்தும் நடந்தும்**
**அனைவரும் போயினர்**
**பழங்களை விடவும்**
**நசுங்கிப் போனது**
**அடுத்த மனிதர்கள்**
**மீதான அக்கறை.**

– கல்யாண்ஜி

www.Padasalai.Net


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| சைக்கிள் – மிதிவண்டி | அக்கறை – கரிசனை |

## பொருளுரை

மிதிவண்டியில் வந்த தக்காளி கூடை சரிந்து ஒரே சிவப்பு மயமாய் தரையில் உருண்டு ஓடியது. எல்லாத் திசைகளிலும் பழங்கள் சிதறிக் கிடந்தன. பார்த்தவர் அனைவரும் தங்களுக்கு அதிக வேலை இருப்பதாகக் கூறியபடி கடந்தும் அதன் வழியாக நடந்தும் சென்றனர். நசுங்கிய பழங்களை விட அவர்கள் உள்ளத்தில் நசுங்கிப்போனது பிற மனிதர்கள் மீதான அக்கறை(கரிசனை).

## இலக்கணக்குறிப்பு

1. உருண்டது, போனது – ஒன்றன் பால் வினைமுற்றுகள்
2. சரிந்து – வினையெச்சம்
3. அனைவரும் – முற்றும்மை

## பகுபத உறுப்பிலக்கணம்

**சரிந்து** – சரி + த்(ந்) + த் + உ
சரி – பகுதி
த் – சந்தி (ந் ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

## கற்பவை கற்றபின்

1. **நிலா, மழை, காற்று, தண்ணீர் போன்றவை குறித்த புதுக்கவிதைகளைத் திரட்டி, இலக்கிய மன்றத்தில் படித்துக் காட்டுக.**

| நிலா | மழை |
|---|---|
| இரண்டு எழுத்தின் இதிகாசமே!<br>உன்னை உச்சரித்தாலே<br>உதடோடு மனதும் இனிக்கும்<br>உன்னை ரசித்து ரசித்து<br>கண் சிமிட்டுகிறது வானம்<br>மின்னலாக,<br>உன்னை நினைத்தாலே<br>எழுத்துகளெல்லாம்<br>இலக்கியமாகிறது<br>இரண்டு எழுத்தின் இதிகாசம் நீ. | கடலில் நீரை முகந்து<br>கணக்கில்லாத நீரைத் தரும்<br>மழையே! மழையே!<br>நினைக்கவும் வைப்பாய் சில வேளையில்<br>நீ இல்லாமல் உலகில்<br>உணவு ஏது? உலகம் ஏது? உயிர்கள் ஏது?<br>உன் பெருமையை<br>உணர்ந்த மக்கள் உனக்கு<br>உதவியாக மரத்தை நட்டு நம்மவர்களுக்கு<br>உதவியாக நீரையும் சேமிக்கின்றாரோ! |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



| காற்று | தண்ணீர் |
|---|---|
| தென்னையிளஞ் சோலைகளில் பாட்டுப் பாடும்<br>தேனிருக்கும் மலர்களுடன் கூட்டுச் சேரும்<br>அன்னையென தாகந்தீர் பொய்கை தன்னில்<br>தென்றலென அதன்பெயரைச் சொல்லக் கூடும்<br>தினவெடுத்தால் அதுகூடப் புயலாய் மாறும்! | நீ இல்லையேல்<br>இவ்வுலகில் யாருமில்லை<br>ஓரறிவு முதல் ஆறறிவு வரை<br>நீ<br>எதையும் பருகுவதில்லை<br>உன்னைப் பருகாமல்<br>யாரும் வாழ்வதில்லை.<br>நீ இருக்கும் இடங்களில்<br>செழுமை இருக்கும்.<br>நீ இல்லையேல்<br>வறுமை இருக்கும். |

## திறன் அறிவோம் - புத்தக வினா

**பலவுள் தெரிக.**

3. **வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்**
அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்
இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்
**விடை அ) ஒரு சிறு இசை**

**குறுவினா**

5. **பழங்களை விடவும் நசுங்கிப்போனதாக கல்யாண்ஜி எதைக் குறிப்பிடுகிறார்.**
அடுத்த மனிதர்கள் மீதுள்ள நேயமும் அக்கறையும் பழங்களை விடவும் நசுங்கிப் போனது.

## கூடுதல் வினாக்கள்

1. **கல்யாண்ஜியின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற சிறுகதை ............ .**
அ) அந்நியமற்ற நதி ஆ) மணல் உள்ள ஆறு
இ) ஒரு சிறு இசை ஈ) ஒளியிலே தெரிவது
2. **கல்யாணசுந்தரம் எழுதிய கடிதங்களின் தொகுப்பு ............ .**
அ) சில இறகுகள் சில பறவைகள் ஆ) அகமும் புறமும்
இ) கலைக்க முடியாத கற்பனைகள் ஈ) தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்
3. **உரைநடையில் கவிதை எழுதுவதை வசன கவிதை வழியாக தொடங்கியவர் ............ .**
அ) ந. பிச்சமூர்த்தி ஆ) வண்ணதாசன்
இ) பாரதியார் ஈ) வல்லிக்கண்ணன்
4. **பழங்களை விடவும்**
**நசுங்கிப்போனது**
**அடுத்த மனிதர்கள்**
**மீதான அக்கறை - இதில் நசுங்கிப்போனது எது?**
அ) பழங்கள் ஆ) அக்கறை இ) மனிதம் ஈ) உண்மை
5. **கல்யாண்ஜி கவிதை பரவலாக வலியுறுத்தப்படுவது................**
அ) சமத்துவம் ஆ) ஒற்றுமை இ) மனிதம் ஈ) அக்கறை



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

6. **கல்யாண்ஜி எழுதிய கவிதை நூல்களுள் சேராதது................**
அ) புலரி ஆ) அந்நியமற்ற நதி
இ) மணல் உள்ள ஆறு ஈ) ஒளியிலே தெரிவது

7. **வண்ணதாசனின் சிறுகதை தொகுப்புகளுள் பொருந்தாதது.................**
அ) உயரப் பறத்தல் ஆ) ஒளியிலே தெரிவது
இ) கலைக்க முடியாத ஒப்பனைகள் ஈ) அகமும் புறமும்

8. **கல்யாண்ஜியின் இயற்பெயர்...............**
அ) வண்ணதாசன் ஆ) வாணிதாசன்
இ) கல்யாணசுந்தரம் ஈ) பூவண்ணன்

9. **கல்யாண்ஜியின் கட்டுரைத் தொகுப்பு ...................**
அ) ஒரு சிறு இசை ஆ) அகமும் புறமும்
இ) சில இறகுகள் சில பறவைகள் ஈ) அந்நியமற்ற நதி

10. **தலைக்கு மேலே வேலை இருப்பதாய்க் கடந்தும் நடந்தும் அனைவரும் போயினர் - இவ்வரியில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு ..................**
அ) வினைமுற்று ஆ) முற்றெச்சம்
இ) முற்றும்மை ஈ) உம்மைத் தொகை

11. **புதுக்கவிதையின் வரலாறு எட்டும் ஆண்டுகள் .............**
அ) ஐம்பது ஆ) எண்பது இ) அறுபது ஈ) நூறு

12. **வண்ணதாசன் பெயரில் கதை இலக்கியத்திலும் பங்களிப்பு செய்து வருபவர்...............**
அ) கல்யாண சுந்தரம் ஆ) தேனரசன் இ) பூவண்ணன் ஈ) வாணிதாசன்

விடைகள் :
1. இ) ஒரு சிறு இசை
2. அ) சில இறகுகள் சில பறவைகள்
3. இ) பாரதியார்
4. இ) மனிதம்
5. இ) மனிதம்
6. ஈ) ஒளியிலே தெரிவது
7. ஈ) அகமும் புறமும்
8. இ) கல்யாணசுந்தரம்
9. ஆ) அகமும் புறமும்
10. இ) முற்றும்மை
11. ஈ) நூறு
12. அ) கல்யாண சுந்தரம்

☆ ☆ ☆


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**இயல் 7**

# இராமானுசர்-நாடகம்

**விரிவானம்**

## கற்பவை கற்றபின்

1. **இந்நாடகம் வெளிப்படுத்துவது போன்று இராமானுசர் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றைத் தொகுத்து, அவை குறித்த உங்களின் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**இராமானுசர் வாழ்க்கை நிகழ்வுகள் :**

இராமானுசர் வைணவ சமயத்தின் முக்கிய ஆச்சார்யர்களுள் ஒருவர் ஆவார். தமிழ் வேதமான 'திருவாய்மொழியின் செவிலித் தாய்' என்று போற்றப்படுகிறார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சமத்துவம், சமதர்மம், சாதிமத ஏற்றத் தாழ்வின்மை ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியவர். இந்தத் தத்துவப் பிரிவுகளில் ஒன்றாக விசிஷ்டாத்வைதத்தை தோற்றுவித்தவர். இவர் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தவர்.

தாழ்த்தப்பட்ட மக்கள், தீண்டத்தகாதவர்கள் என்று அக்காலத்தில் ஒதுக்கப்பட்டவர்களை **'திருக்குலத்தார்'** என்று அழைத்தார். அவர்களை கோயிலுக்குள் அழைத்துச் சென்றார். வைசிய குலத்தைச் சேர்ந்த **திருகச்சி நம்பி** என்பவரை தனது குருவாக ஏற்றுக்கொண்டார். சாதி வேற்றுமை பார்க்காமல், தன்னிடம் சீடர்களாக ஆக வேண்டும் என்று வருபவர்களை சீடர்களாக ஏற்றுக் கொண்டார்.

காஞ்சிபுரத்தில், யாதவப் பிரகாசர் என்ற சைவ ஆச்சாரியாரிடம் சிலகாலம் இராமானுசர் கல்வி பயின்றார். குருவிற்கும் இவருக்கும் பல விஷயங்களில் வாக்குவாதம் ஏற்பட்டது. அதனால் யாதவப் பிரகாசர், இராமானுசரை கொல்லவும் ஏற்பாடு செய்தார். ஆனால் இராமானுசர் அதிலிருந்து தப்பிவிட்டார். பின்னாளில் இதே யாதவப் பிரகாசர், தன் தவறை உணர்ந்து இராமானுசர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டார். அவரை மன்னித்து அவருக்கு 'கோவிந்த ஜீயர்' என்ற பட்டத்தை இராமானுசர் வழங்கினார்.

**என்னுடைய கருத்துகள் (மாணவரின் கருத்து) :**

இராமானுசர் பக்தி நெறி மூலமாக மக்களிடையே நன்னெறிகளைப் பரப்பியவர்.
சாதி மத பேதங்களை சமூகத்திலிருந்து நீக்குவதற்காகப் பாடுபட்டவர்.
தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவிற்கு இந்தியாவில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.
தன்னைக் கொல்ல நினைத்த யாதவப் பிரகாசரை மன்னித்து, அவருக்கு 'கோவிந்த ஜீயர்' பட்டத்தை வழங்கிய நிகழ்விலிருந்து, மன்னிக்கும் குணம் உடையவர் இராமானுசர் என்பதை அறிய முடிகிறது.

தான் ஒருவன் நரகம் சென்றாலும் பரவாயில்லை, மக்கள் அனைவரும் நல்முக்தி அடைய வேண்டும் என்பதற்காக திருமந்திரத்தை குருவின் ஆணையை மீறி பொதுமக்களுக்குக் கூறியவர்.

தன்னலம் கருதாமல் பொதுநலத்தை மட்டும் கருத்தில் கொண்டு வாழ்ந்தவர் இராமானுசர் ஆவார்.

## திறன் அறிவோம் – புத்தக வினா

**நெடுவினா**

2. **கிடைப்பதற்கரிய திருமந்திரம் கிடைத்தவுடன் இராமானுஜர் செய்த நிகழ்வுகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

இராமானுசர், கூரேசர், முதலியாண்டான் ஆகியோர் பூரணரின் அழைப்பை ஏற்றுப் திருக்கோட்டியூர் வந்தனர். அங்கு இராமானுசருக்குக் கிடைப்பதற்கரிய திருமந்திரம் கிடைத்தது. அதற்குப்பின் இராமானுசரின் செயல்பாடு எவ்வாறு இருந்தது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**பூரணரைச் சந்தித்தல் :**

பூரணர் தண்டுகொடியுடன் இராமானுசரை வரச்சொல்லியிருந்தார். இராமானுசர் தண்டுகொடிக்கு இணையான கூரேசர், முதலியாண்டான் ஆகியோருடன் சென்றிருந்தார். இராமானுசர் கூரேசர், முதலியாண்டார் ஆகிய மூவருக்கும் திருமந்திரத்தைக் கூறுகிறேன் என்றார்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**பூரணர் இட்ட கட்டளை :**

பூரணர் மூவரிடமும் "நான் கூறப் போகின்ற திருமந்திர மறைபொருள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும். வேறு யாரிடமாவது இதை நீங்கள் கூறவீர்கள் எனில் அத ஆசிரியர் கட்டளையை மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்கு தண்டனையாக நரகமே கிட்டும்" என்று கூறினார்.

**இராமானுசரின் செயல் :**

இராமானுசர் திருக்கோட்டியூர் சௌமய நாராயணன் திருக்கோவிலின் மதில் சுவரின் மேல் நின்று கொண்டு உரத்த குரலில் பெரியோர்களே! பக்தியால் முக்திக்கு வழிகாணத் துடிப்பவர்களே! அனைவரும் அருகில் வாருங்கள். கிடைப்பதற்கரிய பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை உங்களுக்குக் கூறுகிறேன். அனைவரும் இணைந்து மந்திரத்தைச் சொல்லுங்கள் என்று என்று கூறினார். அனைவரும் அம்மந்திரத்தை மூன்று முறை கூறினர். மேலும் "எம்பெருமானே! நான் இன்று உளம் மகிழ்கிறேன். எளிய மக்களுக்குத் தங்களது பிறவிப் பிணியைத் தீர்க்கும் திருமந்திரத்தைக் கூறி அவர்களை உன் திருவடிகளைப் புகலாகப் பெறச் செய்து விட்டேன்" என்று கூறி மகிழ்ந்தார்.

**பூரணரின் கோபம் :**

இராமானுசர் திருமந்திரத்தைப் பொது மக்களுக்கு கூறிய செய்தியை அறிந்த பூரணர் கோபமடைந்தார். இராமானுசரை வரவழைத்து "நீங்கள் குருவிற்கு நம்பிக்கைக்கேடு செய்து விட்டீர்கள், நீங்கள் செய்த இச்செயலுக்குக் கொடிய தண்டனையாக நரகமே கிட்டும் எனத் தெரிந்தும் செய்துள்ளீர்கள்" என்று கூறினார்.

**இராமானுசரின் பதில் :**

கிடைப்பதற்கரிய மந்திரத்தைத் தங்களின் திருவருளால் நான் பெற்றேன். அதன் பயன் எனக்கு மடுமே கிட்டும். அந்த அருமந்திரத்தை அனைவருக்கும் கூறினால் துன்பத்தில் உழன்று பேதை வாழ்வு வாழ்நது வரும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்களின் பிறவிப்பிணி நீங்கிப் பேறு பெறுவார்கள். இதனால் நான் மட்டுமே தண்டனை கிடைக்கப்பெற்று நரகத்தைச் சேர்வேன். ஆனால் மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ்வார்கள் என்று கூறினார்.

**பூரணரின் வாழ்த்து :**

எம்பெருமான உங்களுக்கு இருந்த பரந்த உள்ளம் எனக்கு இல்லாமல் போனது. நம் பரமாச்சியார் ஆளவந்தாரின் திருஉள்ளத்தை அறிந்தவரும் இறைவனின் திருவருளை உலகிற்கு உணர்த்தியவரும் தாங்கள் மட்டுமே. "எம்பெருமான் என்னும் திருநாமம் என்றென்றும் உமக்கு நிலைத்த நீடூழி வாழவேண்டும்" என்று மகிழ்ச்சி பொங்க வாழ்த்தினார்.

**முடிவுரை :**

இராமானுசர் தன்னலமின்றி பிறருடைய நலன் கருதி பொருமக்களின் துன்பங்களைந்தவர். அவர்களின்ந பிறவிப் பிணியை நீக்கியவர். என்றென்றும் அவர் புகழ் நிலைத்து நிற்றும்.

4. **குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் ஒரு நாடகம் எழுதுக.** பிடிஏ–6

மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.

**காட்சி - 1**

**இடம் :** வகுப்பறை

**கதாபாத்திரங்கள் :** மாணவர்கள், ஆசிரியர்.

**ஆசிரியர்** : இன்று மாணவர்கள் வகுப்பில் கொக்கு, கோழி, உப்பு இவற்றைப் பற்றியும் இவற்றைப் போன்று திகழும் மாணவர்கள் பற்றியும் நாடகமாக நடிக்கவிருக்கிறார்கள்.

**மாணவன் -1** : நான் நேற்று 'இராமானுஜன் வாழ்க்கை வரலாறு' என்ற நூலை நூலகத்தில் படித்தேன். அதில் கொக்கு, கோழி, உப்பு இவற்றைப் பற்றிக் கூறியிருந்தார்.

www.Padasalai.Net


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**மாணவன் -2** : அப்படியா! கொக்கு என்ன செய்யும்? காலமறிந்து, வாய்ப்பிற்காகக் காத்திருந்து வாய்ப்பு கிடைத்ததும் உடனேயே செயல்புரியும்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து" என்றும்
"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
காத்திருக்குமாம் கொக்கு" என்றும் நம் இலக்கியங்கள் கூறியுள்ளனவே.

**மாணவன் -1** : சரியாகச் சொன்னாய்.

**மாணவன் -3** : கோழியைப் பற்றி நான் சொல்லட்டுமா? கோழி எப்போது பார்த்தாலும் குப்பையைக் கிளறிக் கொண்டே இருக்கும். அதைத் தவிர அதற்கு வேறென்ன வேலை உள்ளது? குப்பையைக் கிளறி கிளறி அதன் உணவை உண்ணும்.

**மாணவன் -1** : ஆமாம் ஆமாம்... 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்றெல்லாம் கூறுவார்கள். நாம் உண்ணும் உணவிற்கு உப்புதான். சுவையைச் சேர்க்கிறது என்பதை உணர்த்தும் பழமொழிதான் இவை.

**மாணவன் -2** : கொக்கு, கோழி, உப்பு இவைகளைப் போன்று மாணவர்களும் ஒவ்வொரு வகையில் உள்ளனர்.

**காட்சி - 2**

**ஆசிரியர்** : மாணவர்களே! இன்று எதைப் பற்றி விவாதம் நடைபெறுகிறது?

**மாணவர்கள் மூவரும்** : நேற்று நூலகத்திற்குச் சென்றபோது கொக்கு, கோழி, உப்பு ஆகியவற்றின் இயல்பைப் படித்தோம். அதைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். ஐயா.

**ஆசிரியர்** : அப்படியா! என்ன தெரிந்து கொண்டீர்கள்?

**மாணவன் -3** : கொக்கு, காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும், கோழி குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும். கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும். இவை போன்றே மூன்றுவிதமான மாணவர்கள் உள்ளதாகவும் கூறுவார்களே அது எவ்வாறு?

**ஆசிரியர்** : சரியாகச் சொன்னீர்கள். **கொக்கு,** ஒற்றைக்காலில் பொறுமையாக நின்று கொண்டு தனக்குத் தேவையான மீன்கள் வந்தவுடன் விரைந்து செயல்படும். அதுபோலவே மாணவர்கள் சரியான வாய்ப்புக் கிடைக்கும்போது அதைப் பயன்படுத்தி அரிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும். **கோழி** இது குப்பையைக் கிளறும். ஆனால் அந்தக் குப்பைகளை விட்டு விட்டு தனக்குத் தேவையான உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும். அதுபோல மாணவர்களும் தமக்கு நேரும் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீமைகளைப் புறந்தள்ளி நன்மைகளை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். **மூன்றாவது உப்பு** – உப்பை எந்த உணவோடு கலக்கினாலும் அது இருக்கிறது என்று கூற முடியும். ஆனால் கலக்கிய உணவில் உப்பு கண்ணுக்குத் தெரியாது. அதன் சுவையை மட்டுமே உணர முடியும். அதுபோல, மாணவர்கள் எந்தத் துறையில் இறங்கினாலும் அதில் சிறப்பான தனித்தன்மையை வெளிப்படுத்தி, தனது மறைவுக்குப் பின்னும் அதை இவர்தான் செய்தார் என்று கூறும்படி விளங்க வேண்டும்.

**மாணவர்கள்** : இவ்வளவு செய்தி உள்ளதா? இனிமேல் நாங்கள் கொக்கு, கோழி, உப்பு போல் இருப்பதற்கு முயற்சி செய்வோம் ஐயா.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

பிடிஏ–4; அரையாண்டுத் தேர்வு 2019

1. **"என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும் எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்" – என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்புடைய தன்னலமற்ற பண்பு கொண்ட உன்னைக் கவர்ந்த ஆளுமை ஒருவரைக் குறித்து விவரித்து எழுதுக.**

"என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும்

எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்" – என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்புடைய தன்னலமற்ற பண்பு கொண்ட என்னைக் கவர்ந்த ஆளுமைகளில் ஒருவர் நம் தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக கருதப்படுபவர், 'பெருந்தலைவர் காமராஜர்'.

தமிழகத்தை ஒன்பது ஆண்டு காலம் ஆட்சிசெய்த இவருடைய காலம், தமிழக அரசியல் வரலாற்றில் பொற்காலமாக கருதப்படுகிறது. பள்ளிக்குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு திட்டத்தினை ஏற்படுத்தி,



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

ஏழை எளிய மக்களின் கல்வியில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினார். தன்னுடைய உழைப்பால், தொண்டால், படிப்படியாக உயர்ந்த இவர், 'பெரும் தலைவர்', 'தென்னாட்டு காந்தி', 'படிக்காத மேதை', 'கர்ம வீரர்', 'கல்விக்கண் திறந்த காமராஜர்' என பல்வேறு சிறப்பு பெயர்களால் அழைக்கப்படுகிறார். சமுதாயத்தில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் ஏழைகளுக்கு நல்லது செய்யும் அவரின் தன்னலமற்ற தொண்டிற்காக, இந்திய அரசு, அவரின் மறைவிற்கு பின்னர் 1976 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருதினை வழங்கியது. தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் சமூகத்தொண்டு செய்வதிலேயே அர்பணித்துக்கொண்டார்.

சமூகத் தொண்டையே பெரிதாக நினைத்து வாழ்ந்த அவர், கடைசிவரை திருமணம் செய்துகொள்ளாமலே வாழ்ந்தார். ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபொழுதும் இறுதிவரை வாடகை வீட்டிலேயே வாழ்ந்து இருந்தார். அவருக்காக அவர் சேர்த்து வைத்த சொத்து சில கதர் வேட்டிகள், சட்டைகள், புத்தகங்கள் மற்றும் 150 ரூபாய் மட்டுமே. இப்படிப்பட்ட உன்னதமான நேர்மையான இன்னொரு தலைவனைத் தமிழக வரலாறு மட்டுமல்ல, உலக வரலாறும் இனி சந்திக்குமோ என்பது சந்தேகமே?

இந்தியாவின் மதிக்கத்தக்க இரண்டு பிரதமர்களை உருவாக்கி, 'இந்தியாவின் கிங்மேக்கராகத்' திகழ்ந்த பெருந்தலைவர் காமராஜர், 'பகைவர்களும் மதிக்கும் பண்பாளராகவும்', 'படிக்காத மேதையாகவும்', 'கல்வியின் நாயகனாகவும்', 'மனிதநேயத்தின் மறுஉருவமாகவும்' திகழ்ந்தார். சினிமாவில் நாம் பார்த்து ஆச்சரியப்படும் ஹீரோக்களைப் போல இல்லாமல், நிஜ வாழ்க்கையில் உண்மையான ஹீரோவாக வாழ்ந்துக் காட்டியவர். அரசியலில் நேர்மை, வாய்மை, தூய்மை, நாணயம் என அனைத்தையும் கற்பித்த மாமனிதராக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த இந்தியாவிற்கே வழிகாட்டும் தலைவராக விளங்கியவர்.

2. **இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனித நேயத்தை விவரிக்கவும்.**

செப்.–2021; ஆகஸ்ட்–2022; மார்ச் 2024

**முன்னுரை:**

நாளுக்கு ஒரு முறை மலர்வது சண்பகம். ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது பிரம்ம கமலம். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி. நம் தலைமுறைக்கு ஒருமுறை பிறப்பவர்கள் ஞானிகள். அவர்களுள் ஒருவரான இராமானுசரின் மனித நேயம் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**பூரணரைச் சந்தித்தல்:**

திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இராமானுசரை வரச் சொல்லுங்கள் என்னும் செய்தி பூரணரால் திருவரங்கத்திற்கு அனுப்பப்பட்டது. இராமானுசர், கூரேசர், முதலியாண்டான் ஆகியோர் பூரணர் இல்லத்திற்கு வந்தனர். இராமானுசரைப் பார்த்த பூரணர், "தண்டு, கொடியுடன் உங்களைத்தானே வரச்சொன்னேன், தாங்கள் உறவுகளுடன் வந்துள்ளீர்களே?" என்று கேட்டார்.

**இராமானுசரின் பதில்:**

இராமானுசர் பூரணரிடம், "சுவாமிகள் என்மேல் கோபம் கொள்ளக்கூடாது.தாங்கள் கூறிய தண்டு கொடிக்கு இணையானவர்கள் இவர்கள்.அடியவர்களாகிய எங்களுக்குத் திருவருள் புரியவேண்டும்" என்று கூறினார். உடனே பூரணர் இவர்களை நீங்கள் தண்டு, கொடி எனக் கூறியதால் உங்கள் மூவருக்குமாகத் திருமந்திரத்தைக் கூறுகிறேன் என்றார்.

**பூரணர் இட்ட கட்டளை:**

பூரணர் மூவரையும் வீட்டிற்குள் அழைத்து நான் கூறுவதை நன்றாகக் கவனியுங்கள். நான் கூறப் போகின்ற திருமந்திர மறைபொருள்கள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும். வேறு யாரிடமாவது இதை நீங்கள் கூறுவீர்கள் எனில் அது ஆசிரியர் கட்டளையை மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்குத் தண்டனையாக நரகமே கிட்டும் என்று கூறினார்.

**திருமந்திரத்தைக் கூறுதல்:**

பூரணர், 'திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்' என்று திருமந்திரத்தைக் கூறினார். பிறகு மூவரும் மூன்று முறை உரக்கச்சொன்னார்கள். திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவிலின் மதில் சுவரின் மேல் இராமானுசர் நின்று கொண்டு, அனைவரும் அருகில் வாருங்கள், கிடைப்பதற்கரிய பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை உங்களுக்குக் கூறுகிறேன். அனைவரும் இணைந்து சொல்லுங்கள் என இராமானுசர் பொதுமக்களிடம் கூற அவருடன் சேர்ந்து அனைவரும் கூறினர்.

**இராமானுசரின் மனித நேயம்:**

பூரணரின் சொல்லை மீறியதற்காக முதலில் இராமானுசர் பூரணரிடம் மன்னிப்பு கேட்டார். பிறகு "கிடைப்பதற்கரிய மந்திரத்தைத் தங்களின் திருவருளால் நான் பெற்றேன். அந்த அருமருந்தை அனைவருக்கும் கூறினால் அவர்கள் தங்களின் பிறவிப்பிணி நீங்கி பேறு பெறுவார்கள். இதற்குத்


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



தண்டனையாக நான் மட்டுமே நரகம் செல்வேன். அவர்கள் அனைவரும் நலமுடன் வாழ்வார்கள்" என்று மனித நேயத்துடன் பூரணரிடம் இராமானுசர் விளக்கமளித்தார். இராமானுசரின் விளக்கத்தைக் கேட்ட பூரணர், 'எம்பெருமான்'என்னும் திருநாமம் என்றென்றும் உமக்கு நிலைத்து, நீங்கள் நீடூழி வாழவேண்டும் என்று ஆசீர்வதித்தார். மேலும், தன் மகன் சௌம்ய நாராயணனை இராமானுசரிடம் அடைக்கலமாக அளித்தார்.

**முடிவுரை:** இராமானுசர் தன்னலமின்றி பிறருடைய நலன் கருதி பொதுமக்களின் துன்பங்களைந்தவர், அவர்களின் பிறவிப்பிணியை நீக்கியவர். என்றென்றும் அவர் புகழ் நிலைத்து நிற்கும்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **'கூர்வேல் குவைஇய மொய்ம்பின்**
**தேர்வண் பாரிதண் பறம்பு நாடே!'**
- இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் ........
அ) அக நானூறு ஆ) ஐங்குறு நூறு இ) புறநானூறு ஈ) நற்றிணை

2. **பொருத்துக :**
அ) நாளுக்கு ஒருமுறை மலர்வது - 1. பிரம்ம கமலம்
ஆ) ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது - 2. சண்பகம்
இ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது - 3. மூங்கில்
ஈ) தலைமுறைக்கு ஒரு முறை மலர்வது - 4. குறிஞ்சி
அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 1, 4, 3

3. **'திருமந்திரம்' - என்ற நூலின் ஆசிரியர்.............**
அ) திருமூலர் ஆ) சுந்தரர் இ) திருநாவுக்கரசர் ஈ) ஞான சம்பந்தர்

4. **பெரியோர்களே! பத்தியால் முக்திக்கு வழிகாணத் துடிப்பவர்களே! - என்று கூறியவர்**
அ) கூரேசர் ஆ) இராமானுசர் இ) பூரணர் ஈ) முதலியாண்டான்

5. **சௌம்ய நாராயணனின் தந்தை யார்?**
அ) பூரணர் ஆ) முதலியாண்டான் இ) கூரேசர் ஈ) இராமானுசர்

6. **பூரணரின் வாசலில் எத்தனைப் பேர் நின்றனர்?**
அ) மூன்று ஆ) இருவர் இ) நான்கு ஈ) ஐவர்

7. **திருமந்திரத் திருவருளைப் பெற இராமானுசர் .................. முறை திருக்கோட்டியூர் வந்தார்.**
அ) 18 ஆ) 19 இ) 20 ஈ) 21

8. **இராமானுசருக்கு திருமந்திரத் திருவருளை உபதேசித்தவர் .................**
அ) பெரிய நம்பி ஆ) பூரணர் இ) திருகச்சி நம்பி ஈ) ஆளவந்தார்

9. **இராமானுசர் திருமந்திரத்தை யாருக்கு உபதேசித்தார்?**
அ) முதலியாண்டான் ஆ) கூரேசர் இ) திருகச்சி நம்பி ஈ) பொதுமக்கள்

10. **பரம ஆச்சாரியார் என்று அழைக்கப்பட்டவர்..................**
அ) பெரிய நம்பி ஆ) திருகச்சி நம்பி இ) பூரணர் ஈ) ஆளவந்தார்

11. **'எம்பெருமான்' என்று இராமானுசரை அழைத்தவர் ..................**
அ) பெரிய நம்பி ஆ) முதலியாண்டான் இ) பூரணர் ஈ) கூரேசர்

**விடைகள் :**
1. இ) புறநானூறு 2. ஈ) 2, 1, 4, 3 3. அ) திருமூலர்
4. ஆ) இராமானுசர் 5. அ) பூரணர் 6. அ) மூன்று
7. அ) 18 8. ஆ) பூரணர் 9. ஈ) பொதுமக்கள்
10. ஈ) ஆளவந்தார் 11. இ) பூரணர்

☆☆☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



# இயல் 7 பா-வகை, அலகிடுதல்

## கற்கண்டு

### அலகிடுதல்

எழுத்து - குறில் நெடில், ஒற்று

அசை - எழுத்தானது தனியாகவோ பல சேர்ந்தோ ஓசையுடன் பிரிந்து நிற்பது அசை எனப்படும். அசை நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

**நேரசை :**

| | |
|---|---|
| குறில் தனித்து வரல் | க |
| குறில் ஒற்றுடன் வரல் | கல் |
| நெடில் தனித்து வரல் | கா |
| நெடில் ஒற்றுடன் வரல் | கால் |

**நிரையசை :**

| | |
|---|---|
| குறில் இணைந்து வரல் | பட |
| குறிலுடன் ஒற்று இணைந்து வரல் | படம் |
| குறில் நெடில் இணைந்து வரல் | படா |
| குறில் நெடிலுடன் ஒற்று இணைந்து வரல் | படாம் |

**சீர் :** அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி, அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும். சீர் - ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச் சீர், நாலசைச்சீர் என நால்வகைப்படும்.

**ஓரசைச்சீர் :** வெண்பாவின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்பனவற்றுள் ஏதேனும் ஒன்றனைப் பெற்று வரும்.

(எ.கா)

| ஓரசைச்சீர் | | |
|---|---|---|
| சொல் | அசை | வாய்பாடு |
| என் | நேர் | நாள் |
| படும் | நிரை | மலர் |
| நாடு | நேர்பு | காசு |
| உலகு | நிரைபு | பிறப்பு |

| ஈரசைச்சீர் | |
|---|---|
| அசை | வாய்பாடு |
| நேர் நேர் | தேமா |
| நிரை நேர் | புளிமா |
| நிரை நிரை | கருவிளம் |
| நேர் நிரை | கூவிளம் |

மூவசைச் சீர் - மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது மூவசைச் சீர். அவை எட்டு.

| காய்ச்சீர்கள் - நான்கு | | கனிச்சீர்கள் - நான்கு | |
|---|---|---|---|
| அசை | வாய்பாடு | அசை | வாய்பாடு |
| நேர் நேர் நேர் | தேமாங்காய் | நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் | நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் | நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் | நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

**நாலசைச்சீர் - பதினாறு :** மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறு. இதனைப் பொதுச்சீர் என்பர்.

## கற்பவை கற்றபின்

1. **பாடநூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளையும் அவற்றின் பாவகைகளையும் வகைப்படுத்திப் பட்டியல் இடுக.**

| கவிதைகள் | பாவகை | கவிதைகள் | பாவகை |
|---|---|---|---|
| அன்னை மொழியே | ஆசிரியப்பா | காலக்கணிதம் | ஆசிரியப்பா |
| காசிக் காண்டம் | ஆசிரியப்பா | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | ஆசிரியப்பா |
| திருக்குறள் | குறள் வெண்பா | கம்பராமாயணம் | விருத்தம் - கலித்துறை |
| பரிபாடல் | கலிவெண்பா | திருவிளையாடற் புராணம் | வெண்பா |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## திறன் அறிவோம் – புத்தக வினா

**பலவுள் தெரிக.**

பிடிஏ–2; அரை.தேர்வு 2019; ஆகஸ்ட் 2022; ஜூன் 2023

5. **சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ..........**
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

விடை அ) அகவற்பா

**குறுவினா**

பிடிஏ–1; ஏப்ரல்–2023; ஜூலை–2024

2. **குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

**குறள் வெண்பாவின் இலக்கணம் :**

1. வெண்பாவின் பொது இலக்கணம் அமையப் பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
2. முதலடி நான்கு சீராகவும் (அளவடி) இரண்டாம் அடி மூன்று சீராகவும் வரும்.
3. **(எ.கா) :** அறம் சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

**சிறுவினா**

2. **ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.**
1. ஓசை – அகவல் ஓசை பெற்று வரும்.
2. சீர் – ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
3. தளை – ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்.
4. அடி – மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
5. முடிப்பு – ஏகாரத்தில் முடிதல் சிறப்பு.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

பிடிஏ–1; அரையாண்டுத் தேர்வு 2019; காலாண்டுத் தேர்வு 2023

1. **அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | அரி/யவற்/றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 2. | எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| 3. | அரி/தே | நிரை நேர் | புளிமா |
| 4. | பெரி/யா/ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | பே/ணித் | நேர் நேர் | தேமா |
| 6. | தம/ராக் | நிரை நேர் | புளிமா |
| 7. | கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

பிடிஏ–2

2. **வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | வன்/கண் | நேர் நேர் | தேமா |
| 2. | குடி/காத்/தல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 3. | கற்/றறி/தல் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 4. | ஆள்/வினை/யோ | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 5. | டைந்/துடன் | நேர் நிரை | கூவிளம் |
| 6. | மாண்/ட | நேர் நேர் | தேமா |
| 7. | தமைச்/சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



3. வெண்பா, ஆசிரியப்பா - பொது இலக்கணத்தை அட்டவணைப்படுத்துக. செப்.–2020

| பொது இலக்கணம் | வெண்பா பிடிஏ–6 | ஆசிரியப்பா(அகவற்பா) |
|---|---|---|
| ஓசை | செப்பல் ஓசை பெற்று வரும் மே–2022 | அகவல் ஓசை பெற்று வரும். |
| சீர் | ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும். | ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும். |
| தளை | இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வரும். | ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும். |
| அடி | இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். (கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்.) | மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும். |
| முடிப்பு | நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும். | ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு. |

4. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. பிடிஏ–3; செப்.–2020

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு | |
|---|---|---|---|---|
| 1. | தொழு/தகை | நிரை நிரை | கருவிளம் | இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது. |
| 2. | யுள்/ளும் | நேர் நேர் | தேமா | |
| 3. | படை/யொடுங்/கும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் | |
| 4. | ஒன்/னார் | நேர் நேர் | தேமா | |
| 5. | அழு/தகண் | நிரை நிரை | கருவிளம் | |
| 6. | ணீ/ரும் | நேர் நேர் | தேமா | |
| 7. | அனைத்/து | நிரைபு | பிறப்பு | |

5. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். பிடிஏ–4

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | ஊ/ழை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | உப்/பக்/கம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | காண்/பர் | நேர் நேர் | தேமா |
| 4. | உலை/வின்/றித் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | தா/ழா | நேர் நேர் | தேமா |
| 6. | துஞற்/று | நிரை நேர் | புளிமா |
| 7. | பவர் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

6. "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்." பிடிஏ–5; ஆகஸ்ட்–2022; மார்ச் & கா.தேர்வு 2024

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | உல/கத்/தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2. | டொட்/ட | நேர் நேர் | தேமா |
| 3. | வொழு/கல் | நிரை நேர் | புளிமா |
| 4. | பல/கற்/றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | கல்/லார் | நேர் நேர் | தேமா |
| 6. | அறி/விலா | நிரை நிரை | கருவிளம் |
| 7. | தார் | நேர் | நாள் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் நாள் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



7. **பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்** பிடிஎ–6

| வ. எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | பா/டற் | நேர் நேர் | தேமா |
| 3. | கியை/பின்/றேல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 4. | கண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5. | கண்/ணோட்/டம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | இல்/லா/த | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 7. | கண் | நேர் | நாள் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் நாள் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

8. **பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.** அ.மா.வி 2019; இரண்டாம் தி.தேர்வு 2022

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| 2. | லவ/ரைப் | நிரை நேர் | புளிமா |
| 3. | பொரு/ளா/கச் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 4. | செய்/யும் | நேர் நேர் | தேமா |
| 5. | பொரு/ளல்/ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6. | தில்/லை | நேர் நேர் | தேமா |
| 7. | பொருள் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

9. **செய்க பொருளைச் செறுநர் செருகறுக்கும்**
**எஃகதனிற் கூரிய தில்.** அ.மா.வி 2019

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | செய்/க | நேர் நேர் | தேமா |
| 2. | பொரு/ளைச் | நிரை நேர் | புளிமா |
| 3. | செறு/நர் | நிரை நேர் | புளிமா |
| 4. | செரு/கறுக்/கும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 5. | எஃ/கத/னிற் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 6. | கூ/ரிய | நேர் நிரை | கூவிளம் |
| 7. | தில் | நேர் | நாள் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் நாள் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

10. **இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானும் கெடும்.** காலாண்டுத் தேர்வு 2019

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | இடிப்/பா/ரை | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2. | இல்/லா/த | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | ஏ/மரா | நேர் நிரை | கூவிளம் |
| 4. | மன்/னன் | நேர் நேர் | தேமா |
| 5. | கெடுப்/பார் | நிரை நேர் | புளிமா |
| 6. | இலா/னும் | நிரை நேர் | புளிமா |
| 7. | கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

11. **செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்**
**தியற்கை அறிந்து செயல்.** செப்–2021

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | செயற்/கை | நிரை நேர் | புளிமா |
| 2. | அறிந்/தக் | நிரை நேர் | புளிமா |
| 3. | கடைத்/தும் | நிரை நேர் | புளிமா |
| 4. | உல/கத் | நிரை நேர் | புளிமா |
| 5. | தியற்/கை | நிரை நேர் | புளிமா |
| 6. | அறிந்/து | நிரை நேர் | புளிமா |
| 7. | செயல் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

12. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.** முதல் தி.தேர்வு 2022

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | ஒழுக்/கம் | நிரை நேர் | புளிமா |
| 2. | விழுப்/பம் | நிரை நேர் | புளிமா |
| 3. | தர/லான் | நிரை நேர் | புளிமா |
| 4. | ஒழுக்/கம் | நிரை நேர் | புளிமா |
| 5. | உயி/ரினும் | நிரை நிரை | கூவிளம் |
| 6. | ஓம்/பப் | நேர் நேர் | தேமா |
| 7. | படும் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

13. **கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்ட தமைச்சு.** மே 2022; ஜுன்–2023; முதல் தி.தேர்வு & ஜுலை 2024

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | கரு/வியும் | நிரை நிரை | கருவிளம் |
| 2. | கால/மும் | நேர் நிரை | கூவிளம் |
| 3. | செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4. | செய்/யும் | நேர் நேர் | தேமா |
| 5. | அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 6. | மாண்/ட | நேர் நேர் | தேமா |
| 7. | தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

14. **நாள்தோறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும்.** ஏப்ரல் & அரையாண்டுத் தேர்வு 2023

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| 2. | நா/டி | நேர் நேர் | தேமா |
| 3. | முறை/செய்/யா | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 4. | மன்/னவன் | நேர் நிரை | கூவிளம் |
| 5. | நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| 6. | நா/டு | நேர் நேர் | தேமா |
| 7. | கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

15. **வெண்பாவின் ஓசையையும், ஆசிரியப்பாவின் ஓசையையும் எழுதுக.** செப்–2021
1. வெண்பாவின் ஓசை செப்பலோசை
2. ஆசிரியப்பாவின் ஓசை அகவலோசை

16. **பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?** ஆகஸ்ட்–2022
பா நான்கு வகைப்படும். அவை (i) வெண்பா (ii) ஆசிரியப்பா (iii) கலிப்பா (iv) வஞ்சிப்பா,

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **வெண்பாவிற்குரிய ஓசை எது?**
அ) செப்பலோசை ஆ) அகவல் ஓசை இ) துள்ளல் ஓசை ஈ) தூங்கல் ஓசை

2. **அகவல் ஓசைக்குரிய பாவகை எது?**
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

3. **திருக்குறளிலும் நாலடியாரிலும் பயின்று வந்துள்ள ஓசை.**
அ) செப்பலோசை ஆ) அகவல் ஓசை இ) துள்ளல் ஓசை ஈ) தூங்கல் ஓசை

4. **சங்க இலக்கியங்கள், பெருங்கதை ஆகிய காப்பியங்களில் அமைந்துள்ள பாவகை**
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

5. **தூங்கலோசை என்பது................**
அ) தாழ்ந்து உயர்ந்து வருவது ஆ) தாழ்ந்து வருவது
இ) உயர்ந்து வருவது ஈ) உயர்ந்து தாழ்ந்து வருவது

6. **'நேர் நேர்' என்ற ஈரசைச் சீருக்குரிய வாய்பாடு .................**
அ) தேமா ஆ) புளிமா இ) கருவிளம் ஈ) கூவிளம்

7. **'தார்' என்று முடியும் ஈற்றுச் சீரில் அமைந்துள்ள வாய்பாடு .................**
அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

8. **மூவகைச் சீர்களில் இறுதியாக 'நேர்' என்று அமைந்தால் இதன் வாய்பாடு .................**
அ) காய்ச்சீர் ஆ) கனிச்சீர் இ) மாச்சீர் ஈ) விளச்சீர்

9. **ஈற்றசைச் சீர் 'காசு' என்ற வாய்பாட்டை பெற்றால், அதில் அமைந்திருக்கும் ஓரசைச் சீர் .................**
அ) நேர் ஆ) நிரை இ) நேர்பு ஈ) நிரைபு

10. **நிரை நிரை என்பது .................**
அ) தேமா ஆ) புளிமா இ) கருவிளம் ஈ) கூவிளம்

11. **யாப்பின் உறுப்புகள் யாவை?**
அ) மூன்று ஆ) நான்கு இ) ஆறு ஈ) ஐந்து

12. **பா எத்தனை வகைப்படும்?**
அ) ஆறு ஆ) இரண்டு இ) ஐந்து ஈ) நான்கு

13. **கலிப்பாவிற்குரிய ஓசை .............**
அ) துள்ளல் ஆ) அகவல் இ) தூங்கல் ஈ) செப்பல்

14. **வஞ்சிப்பாவிற்குரிய ஓசை எது?**
அ) துள்ளல் ஆ) தூங்கல் இ) செப்பல் ஈ) அகவல்

15. **வெண்பா ................. வகைப்படும்.**
அ) ஆறு ஆ) ஐந்து இ) நான்கு ஈ) எட்டு

16. **ஆசிரியப்பா ...................... வகைப்படும்.**
அ) ஐந்து ஆ) நான்கு இ) எட்டு ஈ) ஆறு

17. **இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வருவது ...............**
அ) வெண்பா ஆ) கலிப்பா இ) ஆசிரியப்பா ஈ) வஞ்சிப்பா

18. **அகவற்பா என்பது ...........**
அ) வஞ்சிப்பா ஆ) கலிப்பா இ) வெண்பா ஈ) ஆசிரியப்பா


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**19. ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்று முடிவது ...........**
அ) வஞ்சிப்பா ஆ) வெண்பா இ) ஆசிரியப்பா ஈ) கலிப்பா

**20. பொருத்துக.**
அ) செப்பலோசை - 1). சொற்பொழிவாற்றுவது போன்றது
ஆ) அகவலோசை -2). தாழ்ந்து உயர்ந்து வருவது
இ) துள்ளலோசை -3). தாழ்ந்தே வருவது
ஈ) தூங்கலோசை -4). இருவர் உரையாடுவது போன்றது
அ) 4, 1, 2, 3 ஆ) 4, 1, 3, 2 இ) 4, 3, 2 1 ஈ) 3, 4, 1, 2

**21. அசை ................ வகைப்படும்.**
அ) மூன்று ஆ) நான்கு இ) இரண்டு ஈ) ஐந்து

**22. 'பலகற்றும்' - ஏற்புடைய வாய்பாடு ..............**
அ) தேமாங்காய் ஆ) கருவிளங்காய் இ) புளிமாங்காய் ஈ) கூவிளங்காய்

**23. பொருத்துக.**
1) நிரை, நேர் - அ) கூவிளம்
2) நேர், நிரை - ஆ) புளிமா
3) நேர், நேர் நேர் - இ) கூவிளங்காய்
4) நேர், நிரை, நேர் - ஈ) தேமாங்காய்
அ) 1 - அ, 2 - இ, 3 - ஈ, 4 - ஆ ஆ) 1 - ஆ, 2 - அ, 3 -ஈ, 4 - இ
இ) 1 - இ, 2 - அ, 3 - அ, 4 - ஆ ஈ) 1 - ஈ, 2 - இ, 3 - ஈ, 4 - ஆ

**24. தவறான இணையைச் சுட்டுக.**
அ) நேர், நேர், நேர் - தேமாங்காய் ஆ) நிரை, நேர் நேர் - புளிமாங்காய்
இ) நிரை நிரை நிரை - கருவிளங்கனி ஈ) நேர், நிரை, நிரை - கூவிளங்காய்

---

**விடைகள் :**
1. அ) செப்பலோசை
2. ஆ) ஆசிரியப்பா
3. அ) செப்பலோசை
4. அ) அகவற்பா
5. ஆ) தாழ்ந்து வருவது
6. அ) தேமா
7. அ) நாள்
8. அ) காய்ச்சீர்
9. இ) நேர்பு
10. இ) கருவிளம்
11. இ) ஆறு
12. ஈ) நான்கு
13. அ) துள்ளல்
14. ஆ) தூங்கல்
15. ஆ) ஐந்து
16. ஆ) நான்கு
17. அ) வெண்பா
18. ஈ) ஆசிரியப்பா
19. ஆ) வெண்பா
20. அ) 4, 1, 2, 3
21. இ) இரண்டு
22. இ) புளிமாங்காய்
23. ஆ) 1 - ஆ, 2 - அ 3 - ஈ, 4 - இ
24. ஈ) நேர், நிரை, நிரை - கூவிளங்காய்

---

## குறுவினா

**1. யாப்பின் உறுப்புகள் யாவை?**
எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை.

**2. ஓசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
ஓசை செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என நான்கு வகைப்படும்.

**3. அகவல் ஓசை விளக்குக.**
அகவல் ஓசை ஆசிரியப்பாவுக்கு உரியது. இலக்கணக் கட்டுக் கோப்புக் குறைவாகவும், கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது அகவற்பா என்னும் ஆசிரியப்பா.

**4. வெண்பாவின் வகைகள் யாவை?**
குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என வெண்பா ஐந்து வகைப்படும்.

**5. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?**
1. நேரிசை ஆசிரியப்பா
2. இணைக்குறள் ஆசிரியப்பா
3. நிலை மண்டில ஆசிரியப்பா
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா - என ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.



www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**சிறுவினா**

1. **யாப்போசை தரும் பாவோசை பற்றி எழுதுக.**
   1. செப்பலோசை – இருவர் உரையாடுவது போன்ற ஓசை.
   2. அகவலோசை – ஒருவர் பேசுதல் போன்ற சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை.
   3. துள்ளலோசை – கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந் துள்ளிவரும் ஓசை. அதாவது தாழ்ந்து உயர்ந்து வருவது. தூங்கலோசை – சீர்தோறுந் துள்ளாது தூங்கி வரும் ஓசை, தாழ்ந்தே வருவது.
2. **மூவசைச் சீரினை எழுதுக.**

| மூவசைச் சீர் | |
|---|---|
| நேர் நேர் நேர் – தேமாங்காய் | நேர் நேர் நிரை – தேமாங்கனி |
| நிரை நேர் நேர் – புளிமாங்காய் | நிரை நேர் நிரை – புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் – கருவிளங்காய் | நிரை நிரை நிரை – கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் – கூவிளங்காய் | நேர் நிரை நிரை – கூவிளங்கனி |

## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க**

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein
   **விடை :** ஒரு பள்ளியில் கற்றதை மறந்துவிட்டால், பள்ளியில் கற்ற கல்வியினால் பயன் என்னே! **– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**
2. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb
   **விடை :** பெரும்பாலும் நாளையே இந்த வாரத்தின் மிகவும் பரபரப்பான நாள். **– ஸ்பானிஷ் பழமொழி**
3. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle
   **விடை :** நம் இருண்ட தருணங்களில்தான், நாம் ஒளியைக் காண கவனம் செலுத்த வேண்டும். **– அரிஸ்டாட்டில்**
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.
   **விடை :** வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பது மரணத்திற்குரியதல்ல. தொடர்ந்து முனைகின்ற தைரியமே கணக்கில் கொள்ளப்படுகிறது. **– வின்ஸ்டன் சர்ச்சில்**

**மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக,**

1. **மனக்கோட்டை** ஏப்ரல் 2023
   கந்தன் தேர்விற்குப் படிக்காமலேயே நிறைய மதிப்பெண்கள் பெற்று விடுவோம் என்று **மனக்கோட்டை** கட்டிக் கொண்டிருக்கிறான்.
2. **அள்ளி இறைத்தல்** ஜுன் 2023
   உழைக்காமல் பெற்ற பணத்தைச் சிக்கனமாக செலவு செய்யாமல் அதற்கு இதற்கு என்று **அள்ளி இறைத்தான்** முருகன்.
3. **கண்ணும் கருத்தும்** பிடிஏ–4; அ.மா.வி 201; ஏப்ரல் 2023
   வேலன் தோட்டத்தில் தான் நட்டு வைத்த செடியைக் **கண்ணும் கருத்துமாய்** வளர்த்தான்.
4. **ஆறப்போடுதல்** பிடிஏ–5; ஜுன் 2023
   எச்செயலையும் **ஆறப்போடாமல்** உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டும்.

**உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

1. **தாமரை இலை நீர்போல** ஜுலை–2024
   சில மனிதர்களின் பேச்சு **தாமரை இலை நீர்போல** மனதில் ஒட்டாத பேச்சாக இருக்கும்.
2. **மழைமுகம் காணாப் பயிர்போல** பிடிஏ–6
   வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள் **மழைமுகம் காணாப் பயிர்போல** வருந்திக் கொண்டிருந்தாள்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

3. **கண்ணினைக் காக்கும் இமை போல**
தாய் தன் குழந்தையைக் **கண்ணினைக் காக்கும் இமைபோலப்** பார்த்துக் கொள்வாள்.

4. **சிலை மேல் எழுத்து போல** ஜூலை–2024
சிறுவயதில் என்னுடைய ஆசிரியர் கூறிய அறிவுரை **சிலைமேல் எழுத்து போல** என் மனதை விட்டு நீங்கவில்லை.

## பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

அ.மா.வி 2019; பிடிஎ–2 & ஆகஸ்ட்–2022

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**விடை :** சேரர்களின் பட்டப் பெயர்களில் 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன், 'கொல்லி வெற்பன்' எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

## பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை, எழுத்து வழக்காக மாற்றுக.

| பிடிஎ–5; செப்.–2020 | விடை : |
|---|---|
| "தம்பீ? எங்க நிக்கிறே?"<br>"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே!<br>எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது."<br>"அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு.... நா வெரசா வந்துருவேன்."<br>"அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!"<br>"அவம் பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."<br>"ரொம்பச் சின்ன வயசுல பாத்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்!"<br>"இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங் கௌம்பிட்டேன்..."<br>"சரிங்கண்ணே" | "தம்பி? எங்கே நிற்கின்றாய்?"<br>"நீங்கள் சொன்ன இடத்திலேதான் அண்ணா! எதிர்ப் பக்கத்தில் ஒரு தேநீர்க்கடை இருக்கின்றது."<br>"அங்கேயே தேநீர் குடித்துவிட்டு, செய்தித்தாள் படித்துவிட்டு இரு... நான் சீக்கிரமாக வந்துவிடுவேன்.<br>"அண்ணா! சண்முகத்தையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் அண்ணா! அவனைப் பார்த்தே நீண்ட நாள்களாயிற்று!"<br>"அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றுள்ளான். உன் ஊருக்கே அவனை அழைத்துக் கொண்டு வருகிறேன்."<br>"மிகவும் சிறுவயதில் பார்த்தது அண்ணா! அப்போது அவனுக்கு மூன்று வயது இருக்கும்!"<br>"இப்போது உயரமாக வளர்ந்துவிட்டான்! உனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்களுடன் வருவான். பார்த்துக் கொள்! சரி, தொலைபேசியை வை. நான் புறப்பட்டு விட்டேன்..."<br>"சரிங்கண்ணா" |

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | | | | |
| | | | | | | | | 3 | |
| | | | | 4 | | | | | |
| | | | | | 5 | | | | |
| | | | | | 7 | | | | 6 |
| | 8 | | | | | 9 | | | |
| 10 | | | | | 11 | | | | 12 |
| | | 13 | | | | | | | |
| 14 | | | | | | 15 | | | |
| | | | | 16 | | | 17 | 18 | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | லை | | 2 தே | மா | | ள் | | | ணி |
| ர் | | தி | வ | | டு | ற | | 3 கு | வ |
| கா | ரை | த் | நே | 4 மூ | ட் | கு | | று | பா |
| ல | கீ | ர் | ய | ங் | 5 எ | க் | ழ் | ந் | ம் |
| ம் | ங் | கீ | ப் | கி | 7 தி | ரு | மி | தொ | 6 தே |
| | 8 செ | க் | பா | ல் | ங் | 9 தி | த | கை | |
| 10 சி | | ய் | வா | | 11 க | லி | த் | தொ | 12 கை |
| ங் | | 13 மெ | ண | | ள் | | ளை | த் | க் |
| 14 க | ய | வ | ர் | யா | வை | 15 ஔ | ள் | னை | கி |
| ம் | க | வ | ரு | 16 உ | | | 17 பி | 18 வி | ளை |

www.Padasalai.Net


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

| இடமிருந்து வலம்: | வலமிருந்து இடம் : |
|---|---|
| 1. சிறுபொழுதின் வகைகளுள் ஒன்று (2)<br>2. நேர் நேர் – வாய்பாடு (2)<br>11. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று (5)<br>14. மக்களே போல்வர் .................. (4) | 15. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் –ஆசிரியர் (4)<br>16. மதிமுகம் உவமை எனில் முகமதி........... (5) |
| **மேலிருந்து கீழ் :** | **கீழிருந்து மேல் :** |
| 1. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது (5)<br>2. மொழிஞாயிறு (9)<br>3. நல்ல என்னும் அடைமொழி கொண்ட தொகைநூல் (5)<br>4. கழை என்பதன் பொருள் (4)<br>7. மதியின் மறுபெயர், இது நிலவையும் குறிக்கும் (4)<br>10. குறிஞ்சித் திணைக்குரிய விலங்கு ........ (4)<br>12. ......... என்பது புறத்திணைகளுள் ஒன்று (4) | 5. விடையின் வகைகள் (3)<br>6. வீரமாமுனிவர் இயற்றிய நூல் (5)<br>8. பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம் (4)<br>9. முப்பால் பகுப்பு கொண்ட நூல்களுள் ஒன்று (6)<br>13. மன்னனது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது (7)<br>17. 96 வகை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று (7)<br>18. செய்தவம் – இலக்கணக் குறிப்பு (5) |

## கடிதம் எழுதுக.

**உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

பிடிஏ–2, 5; அ.மா.வி. 2019; மே 2022; அரையாண்டுத் தேர்வு 2023

**அனுப்புநர்**

செந்தமிழ்ச்செல்வன்
எண் 20, மாரியம்மன் கோயில் வீதி,
ஆவடி, சென்னை.

**பெறுநர்**

உயர்திரு ஆணையாளர் அவர்கள்,
தமிழ்நாடு மின்வாரியம்
ஆவடி, சென்னை.

வணக்கத்திற்குரிய ஐயா,

**பொருள் :** பழுதடைந்த மின்விளக்குகளை மாற்றித் தருவது பற்றி வேண்டுதல்.

நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கின்றேன். எங்கள் பகுதியில் சுமார் 300 குடும்பங்கள் உள்ளன. இப்பகுதியில் உள்ள மூன்று தெருக்களில், இரண்டு மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இதனால் இப்பகுதி இருள் சூழ்ந்து உள்ளது. இதனால் குழந்தைகள், பெண்கள், படிக்கும் பிள்ளைகள் என இத்தெருவைப் பயன்படுத்துபவர்கள் அல்லல்படுகின்றனர். இவர்கள் போதிய வெளிச்சமில்லாததால் தெருவில் உள்ள மேடுபள்ளம் தெரியாமல் விழுகின்றனர். இருட்டான சூழலைப் பயன்படுத்தி, சில திருடர்கள் இரு சக்கர மோட்டார் வாகனத்தில் வந்து, நடந்து செல்லும் பெண்களின் கழுத்திலிருந்து தங்கச் சங்கிலிகளை அறுத்துக் கொண்டு சென்ற சம்பவங்களும் நடந்துள்ளன.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

இத்துன்பங்களின்றி நாங்கள் தெருவில் சென்று வருவதற்கு பழுதடைந்த மின்விளக்குகளை சரி செய்து தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செந்தமிழ்ச் செல்வன்

**உறைமேல் முகவரி**

பெறுநர்
உயர்திரு ஆணையாளர் அவர்கள்,
தமிழ்நாடு மின்வாரியம்
ஆவடி, சென்னை.

## கவிதையை உரையாடலாக மாற்றுக

பிடிஏ–6

**மகள் சொல்லுகிறாள்: -**

அம்மா என் காதுக்கொரு தோடு – நீ
அவசியம் வாங்கி வந்து போடு!
சும்மா இருக்க முடியாது – நான்
சொல்லி விட்டேன் உனக்கு இப்போது!

**தாய் சொல்லுகிறாள்:-**

காதுக்குக் கம்மல் அழகன்று – நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை வெகுபணிவாய் – நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய்!

**மகள் மேலும் சொல்லுகிறாள் :-**

கைக்கிரண்டு வளையல் வீதம் – நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!
பக்கியென் றென்னை யெல்லோரும் – என்
பாடசாலையிற் சொல்ல நேரும்!

**தாய் சொல்லும் சமாதானம் : -**

வாரா விருந்து வந்த களையில் – அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆராவமுதே மதி துலங்கு – பெண்ணே
அவர்சொல்வ துன்கைகட்கு விலங்கு!

**பின்னும் மகள் :-**

ஆபர ணங்கள் இல்லை யானால் – என்னை
யார் மதிப்பார் தெருவில் போனால்?
கோபமோ அம்மா இதைச் சொன்னால் – என்
குறைதவிர்க்க முடியும்.

**அதற்குத் தாய் :-**

கற்பது பெண்களுக்கா பரணம் – கெம்புக்
கல்வைத்த, நகைதீராத ரணம்!
கற்ற பெண்களை இந்த நாடு – தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு!

**– பாரதிதாசன்**

**மகள்** : என் காதிற்கு ஒரு தோடு வேண்டும் அம்மா.
இதை நீங்கள் வாங்கி வந்து எனக்குப் போட்டுவிட வேண்டும்.
நான் காதிற்குத் தோடு போடாமல் இருக்க மாட்டேன்.

**விடை : வறுமையில் செம்மை**

வறுமையில் உள்ள குடும்பத்தில் ஒரு மகள் தன் தாயிடம் பேசுவது...

**அம்மா** : கம்மல் காதுக்கு அழகன்று. நான் கூறுவதை நன்றாகக் கவனி. நேர்மையானவர் கூறுகின்றவற்றை நாள்தோறும் பணிவுடன் கேட்டு வந்து உன் காதில் அணிந்து கொள்.

**மகள்** : ஒவ்வொரு கைக்கும் இரண்டு வளையல் வீதம், கடன்பட்டாவது வாங்கிப் போட்டுவிடு போதும். இல்லையெனில், பாடசாலையில் என்னை எல்லோரும் கருமி என்று சொல்வார்கள்.

**அம்மா** : கண்ணே! வளையல் என்பது தொடர்பு அறுபடாமல் இருப்பதாகும். வீட்டிற்கு வரும் விருந்தினரின் களைப்புத் தீருமாறும், அவர்கள் மகிழ்ச்சியடையுமாறும் உபசரித்தலே வளையல். அவ்வாறு உபசரிக்காத கைகளில் அணியப்பட்ட வளையல்கள் விலங்கைப் போன்றது.

**மகள்** : நகைகள் அணியவில்லையெனில் என்னை யாரும் தெருவில் சென்றால் மதிக்க மாட்டார்கள். பிள்ளைகளின் நடுவே எனக்கும் ஒரு மதிப்பு வேண்டாமா? கோபப்படாதே அம்மா! மனது வைத்தால் என் குறை தவிர்க்க முடியும்.

**அம்மா** : கல் வைத்த நகைகள் பெண்களுக்கு அழகைத் தருவதில்லை. அவர்கள் கற்கும் கல்வியே அணிகலன்(அழகு) கல்வியறிவு பெற்ற பெண்களை இந்நாடு மதிக்கும். எனவே கற்பதில் ஆர்வம் கொள்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.**

**கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம், அணி நயம் ஆகியவை இடம்பெற வேண்டும்.**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. – வள்ளலார்

**திரண்ட கருத்து :**

கோடை வெயிலில் துன்பப்படுபவர்கள் இளைப்பாறுவதற்கு ஏற்ற குளிர்ந்த மரம் போன்றவன், அம்மரம் தரும் நிழல் போன்றவன். அந்த நிழலினிடத்தே மரத்தில் நன்கு பழுத்த கனி போன்றவன், அச்சூழலில் அமைந்த நீரோடையில் சுரந்த இன்சுவை தண்ணீரே, அத்தண்ணீரில் மலர்ந்துள்ள நறுமணமிக்க மலரே, மேடையில் வீசுகின்ற மென்மையான பூங்காற்றே, அக்காற்றினால் உடலில் உண்டாகும் சுகத்தைப் போன்றவனே, அந்தச் சுகத்தில் உண்டான இன்பப் பயனாகியவனே, என்னுடைய விளையாட்டுப் பருவத்திலே என்னை மணந்த மணவாளனே, அம்பலத்தில் ஆடுகின்ற அரசனே, என்னுடைய பாமாலையை ஏற்றருளுக.

**மையக் கருத்து :**

வள்ளலார் காண்கின்ற அனைத்துப் பொருட்களிலும் இறைவனைக் காண்கின்றார். அவ்வாறு கண்ட இறைவனுக்குப் பாமாலையைச் சூட்டுகிறார்.

**மோனைத் தொடை :** கோடை – குளிர், ஓடையிலே – உகந்த

**எதுகைத் தொடை :** கோடை – ஓடை, மேடை – ஆடை – அடிஎதுகை

**இயைபுத் தொடை :** கனியே, தண்ணீரே, மலரே, காற்றே, பயனே, அருளே 'ஏ' என்ற எழுத்து அடிகளின் ஈற்றெழுத்தாய் அமைந்துள்ளது.

**அணிநயம் :** உருவக அணி. உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறியுள்ளதால் உருவக அணி ஆயிற்று.

## மொழியோடு விளையாடு

**கண்டுபிடித்து எழுதுக.**

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்கள் இடம் பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக...

**ஒன்று :** தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். (111)

**இரண்டு :** எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (392)

**மூன்று :** காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய். (360)

**நான்கு :** அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. (382)

**ஐந்து :** அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண். (983)

**ஆறு :** படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (381)


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



ஏழு : ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. (398)

எட்டு : கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

பத்து : பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (450)

## சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக

எ.கா. : கானடை என்பதை,

கான் அடை - காட்டைச் சேர் கான் நடை - காட்டுக்கு நடத்தல்
கால்நடை - காலால் நடத்தல் இவ்வாறு மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கூறலாம்.

1. **வருந்தாமரை** அரையாண்டுத் தேர்வு 2023
வரும் + தாமரை - வரும் தாமரை மலர்
வருந்தா + மரை - துன்புறாத மான்
வருந்து + ஆ + மரை - துன்புறும் பசுவும் மானும்

2. **பிண்ணாக்கு** பிடிஏ–1
பிண் + நாக்கு - பிளவு பட்ட நாக்கு
பிண்ணாக்கு - எண்ணெய் எடுத்தப்பின் கிடைக்கும் பொருள்

3. **பலகையொலி**
பல + கை + ஒலி - பல கைகள் எழுப்பும் ஒலி
பலகை + ஒலி - மர பலகையின் ஒலி

## செயல் திட்டம்

1. **ஔவையாரின் ஆத்திசூடி, பாரதியாரின் ஆத்திசூடி ஆகிய இரண்டின் முதல் பத்துத் தொடர்களை ஒப்பிட்டு, நாள்தோறும் ஒரு தொடர் என்னும் அடிப்படையில் கருத்துகளைக் காலை வழிபாட்டு நிகழ்வில் வழங்குக.**

| ஔவையார் | பாரதியார் |
|---|---|
| அறம் செய விரும்பு. | அச்சம் தவிர். |
| ஆறுவது சினம். | ஆண்மை தவறேல். |
| இயல்வது கரவேல். | இளைத்தல் இகழ்ச்சி. |
| எண் எழுத்து இகழேல். | எண்ணுவது உயர்வு. |
| ஏற்பது இகழ்ச்சி | ஏறுபோல் நட. |
| ஐயம் இட்டு உண் | ஐம்பொறி ஆட்சிகொள் |

| ஔவையார் | பாரதியார் |
|---|---|
| ஈவது விலக்கேல். | ஈகைதிறன் |
| உடையது விளம்பேல். | உடலினை உறுதி செய். |
| ஊக்கமது கைவிடேல். | ஊண்மிக விரும்பு |
| ஒப்புரவு ஒழுகு | ஒற்றுமை வலிமையாம் |
| ஓதுவது ஒழியேல் | ஓய்தல் ஒழி |
| ஔவியம் பேசேல் | ஔடதங் குறை |

## அகராதியில் காண்க

1. ஆசுகவி - 'பாடு' எனக் கூறியவுடன் பாடுபவர்
2. மதுரகவி - செவிக்கினிய ஓசைநயம் சிறக்கப் பாடுபவர்
3. சித்திரகவி - சொல்லணி அமைத்துச் சுவை வளம் செழிக்கப் பாடுபவர்
4. வித்தாரகவி - தொடர்நிலைச் செய்யுளும் தூயக் காப்பியங்களும் இயற்றுபவர்.

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | |
|---|---|
| Happiness - மகிழ்ச்சி | Gratuity - பணிக்கொடை |
| Sceptor - செங்கோல் | Truth - வாய்மை |
| Charity - ஈகை | |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



பிடிஏ–3; காலாண்டுத் தேர்வு 2019
இரண்டாம் தி.தேர்வு 2022
ஜூன் 2023; முதல் தி.தேர்வு 2024

அறிவியல் விந்தையாகவும்
ஆடம்பரக் குறியீடாகவும்
இயந்திர நண்பனாகவும்
ஈறிலா தரவுகளையும் தந்து
உலகத்தை எந்தன் கையில் கொடுத்தாய் – நீ வந்ததும்
ஊரும் மறந்தேன் உலகம் மறந்தேன் உறவுகள் தவிர்த்தேன்
எந்தன் அடிமைத்தனம் என்று மாறுமோ?
ஏங்கித் தவிக்கும் உறவுகள் நட்புகள்!
செல்பேசி – என்று பெயர் வைத்தது யார்?
சென்றுவிட்டது உறவுகள் மட்டுமல்ல!
எத்தனை எத்தனை இழப்புகள்! – இதிலிருந்து
மீண்டு வருவேனா! உன்னால்
அழிந்த சிட்டுக்குருவியைக் காண்பேனா? – **செ.சசிகலா தேவி**

### நிற்க அதற்குத் தக

நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ, உடன்பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் சினம்கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்... பிடிஏ–2; செப்.–2021; மார்ச் 2024

| நாம் செய்யவேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல். | நல்ல நண்பர்களைப் பெறலாம்; எதிரிகளை நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப்பேசாதிருத்தல். | நல்ல நட்பு கிடைக்கும், நட்பு தொடரும். |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | மன அமைதி கிடைக்கும், நல் சிந்தனை மேலோங்கும். |
| கோபத்தைக் கைவிடல். | பாசம் மேலோங்கும், ஒற்றுமை பெருகும். |

### அறிவை விரிவு செய்

1. அறமும் அரசியலும் – மு. வரதராசனார்
2. அபி கவிதைகள் – அபி
3. எண்ணங்கள் – எம்.எஸ்.உதயமூர்த்தி



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

1. 'கானடை' என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க. மே–2022; பிடிஏ–3; ஜுலை–2024

அ) கான் அடை - காட்டைச் சேர் ஆ) கான் நடை - காட்டுக்கு நடத்தல்
இ) கால் நடை - காலால் நடத்தல் ஈ) கால் உடை - காலால் உடைத்தல்

விடை ஈ) கால் உடை - காலால் உடைத்தல்

### குறுவினா

1. **ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் இரண்டினை எழுதுக.** செப்.–2020

போக்குவரத்துக் காவல்துறையினரின் கட்டளையை மீறி நாம் செல்லக்கூடாது. வாகனங்களில் அதிவேகம் இருக்கக் கூடாது. வாகனம் ஓட்டுபவர்களுக்கென கூறப்பட்டுள்ள சாலைவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். சாலையில் அந்தந்த வாகனங்களுக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டி ஓட்டக்கூடாது.

2. **"இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி நாங் கெளம்பிட்டேன்..." உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.** செப்.–2021, மே 2022

"இப்போது உயரமாக வளர்ந்துவிட்டான்! உனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்களுடன் வருவான். பார்த்துக் கொள்! சரி, தொலைபேசியை வை. நான் புறப்பட்டு விட்டேன்..."

### விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

1. **சாலைகளின் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி.**

சாலை விதிகளில் முதன்மை விதி எது? பிடிஏ–5; முதல் தி.தேர்வு & ஜுலை–2024

2. **ஓட்டுநர் உரிமம், ஊர்தியின் பதிவுச் சான்றிதழ், ஊர்தியின் வரி மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் போன்றவற்றை ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கையில் வைத்திருக்க வேண்டும்.** பிடிஏ–5

ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாக கையில் வைத்திருக்க வேண்டிய சான்றிதழ்கள் யாவை?

www.Padasalai.Net


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 = 4)

1. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ........, ....... வேண்டினார்.
   அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
   இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்
   பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
   அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
   இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

3. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்
   அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்
   இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ................
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. குறிப்பு வரைக – அவையம்.
6. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது?
7. பழங்களை விடவும் நசுங்கிப்போனதாக கல்யாண்ஜி எதைக் குறிப்பிடுகிறார்.
8. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளிக்க.** (2 × 3 = 6)

9. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
10. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?
11. யாப்போசை தரும் பாவோசை பற்றி எழுதுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. 'நவமணி' – என தொடங்கும் தேம்பாவணி பாடலை அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

**V. விடையளி (ஏதேனும் ஒன்று)** (1 × 8 = 8)

13. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.
14. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

☆ ☆ ☆


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

# மொழித்திறன் பயிற்சிகள்

## வாக்கியப் பிழைகளைத் திருத்துக

1. **செய்திகளை வாசிப்பது மணவாளன்.**
   செய்திகளை வாசிப்பவர் மணவாளன்.
2. **அவள் குருடி அல்ல.**
   அவள் குருடி அல்லள்.
3. **அவை மரங்கள் அன்று.**
   அவை மரங்கள் அல்ல.
4. **மக்கள் வாழ்கிறார்.**
   மக்கள் வாழ்கின்றனர்.
5. **மலர்விழி பால் சாப்பிட்டாள்.**
   மலர்விழி பால் அருந்தினாள்.
6. **தென்றல் மெல்ல வீசின.**
   தென்றல் மெல்ல வீசியது.
7. **நளவெண்பாவை எழுதியவர் புகழேந்தி ஆகும்.**
   நளவெண்பாவை எழுதியவர் புகழேந்தி ஆவார்.
8. **ஓவியம் வரைந்தது கந்தன்.**
   ஓவியம் வரைந்தவன் கந்தன்.
9. **நிள்! கவநி! புரப்படு!**
   நில்! கவனி! புறப்படு!
10. **அரம் செய விறும்பு.**
    அறம் செய விரும்பு.

## மரபுப் பிழையை நீக்கி எழுதுதல்

### I. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

1. **மாந்தோட்டத்தில் குயில் பேசியது.**
   மாந்தோப்பில் குயில் **கூவியது.**
2. **கோழி கத்த, மயில் கூவியது.**
   கோழி **கொக்கரிக்க,** மயில் **அகவியது.**
3. **எருது கீச்சிட எலி எக்காளமிட்டது.**
   எருது **எக்காளமிட** எலி **கீச்சிட்டது.**
4. **கவிஞர் செய்யுள் எழுதினார்.**
   கவிஞர் செய்யுள் **இயற்றினார்.**
5. **பனை இலையால் கூரை வேய்ந்தான்.**
   **பனையோலையால்** கூரை வேய்ந்தான்.
6. **கரும்புக் காட்டில் யானைக் கூட்டம் நின்றது.**
   **கரும்புத்தோப்பில்** யானைக் கூட்டம் நின்றது.
7. **கிடாரி கன்று போட்டது.**
   கிடாரி கன்று **ஈன்றது.**
8. **கோழிக்குட்டி, பசுங்குட்டி, கீரிக்குட்டி.**
   கோழிக்**குஞ்சு**, பசுங்**கன்று**, கீரிப்**பிள்ளை.**
9. **சிங்கக் குட்டி அழகாக உள்ளது.**
   சிங்கக் **குருளை** அழகாக உள்ளது.

### II. கீழுள்ள மரபுத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க :

1. **வாழையடி வாழையாய் : (பரம்பரையாய்)**
   தமிழர்களிடம் விருந்தோம்பல் பண்பு, **வாழையடி வாழையாய்** வளர்ந்து வருகிறது.
2. **அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு : (பெண்களுக்கு கல்வி அவசியமில்லை)**
   **அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு** என்னும் மூடப்பழக்கம் இன்று மலையேறிவிட்டது.
3. **கயிறு திரித்தல் : (இல்லாததைச் சொல்கிறான்)** பிடிஏ–4
   வானத்திலிருந்து ஒளிப்பிழம்பாய்த் தட்டு வடிவில் ஒன்று இறங்கியதாக ஒருவன் கயிறு திரித்தான்.
4. **கண்துடைப்பு : (போலியாகச் செயல்படுதல்)**
   பெற்றோர் கண்டிப்பார்களே என்று **கண்துடைப்பாகப்** படிக்கின்ற மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற இயலாது.
5. **கை ஓங்கியது : (மேன்மைப்பட்டது)**
   பாகிஸ்தானோடு நடைபெற்ற கிரிக்கெட்டு போட்டியில் இந்திய அணியின் **கை ஓங்கிய** போது, இந்திய மக்களிடையே எழுந்த மகிழ்ச்சிக்கும் பேராரவாரத்திற்கும் அளவே இல்லை.

### III. உவமைத்தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.

1. **இலவு காத்த கிளி போல : இலவு காத்த கிளி போல** தண்ணீருக்காகக் குடங்களுடன் மக்கள் காத்து நின்றனர்.
2. **காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல :** தமிழர்கள் தமிழ்மொழியை மறந்து பிறமொழிகளைப் பேசுவதைக் கேட்கும் போது **காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல** இருக்கிறது.
3. **அடியற்ற மரம் போல :** தந்தை இறந்த துயரச் செய்தியைக் கேட்டதும் மகன் **அடியற்ற மரம் போல** வீழ்ந்தான்.
4. **மடைதிறந்த வெள்ளம் போல :** அறிஞர் அண்ணா அவர்கள் **மடை திறந்த வெள்ளம் போல** பேசும் ஆற்றலுடையவர்.
5. **கல்மேல் எழுத்துப்போல :** இராஜராஜ சோழனின் வீரதீரச் செயல்கள் **கல்மேல் எழுத்துப் போல** மனத்தில் அழுத்தமாகப் பதிந்தது.

## தொடரை மாற்றி அமைக்க

1. **பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளன. – செய்தி வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றுக.**
   பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளனவா?


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

2. **'அறம் செய்' – கட்டளை வாக்கியத்தைச் செய்திவாக்கியமாக மாற்றுக.**
அறம் செய்ய வேண்டும்.

3. **முயன்றால் முடியாததும் உண்டோ? – இவ்வினா வாக்கியத்தைச் செய்தி வாக்கியமாக மாற்றுக.**
முயன்றால் முடியாதது இல்லை.

4. **முயற்சி செய்ய வேண்டும் – கட்டளை வாக்கியமாக மாற்றுக.**
முயற்சி செய்.

5. **வள்ளுவரை அனைவரும் அறிவர் – வினா வாக்கியமாக மாற்றுக.**
வள்ளுவரை அனைவரும் அறிவரோ?

## இலக்கிய நயம் பாராட்டல்

**எதுகை** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.
**மோனை** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.
**முரண்தொடை** : முரண்பாடான கருத்துகள் வந்தால் அது முரண்தொடையாகும்.
**இயைபு நயம்** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு நயமாகும்.

1. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும். – **பாரதியார்**

**திரண்ட கருத்து :** பிற நாடுகளைச் சேர்ந்த சிறந்த அறிஞர்களின் படைப்பை தமிழ்மொழியில் மொழிபெயர்க்க வேண்டும். என்றும் அழியாத புகழுடைய நூல்கள் பலவற்றைத் தமிழில் புதிதாக இயற்ற வேண்டும். நமக்கு நாமே நம்முடைய பழைய புராணங்களைப் பேசிக் காலத்தை வீணே கழிப்பதில் எந்தப் பெருமையும் கிடையாது.திறமான நம்முடைய படைப்புகளை, படித்து அதற்கு வெளிநாட்டார் மரியாதை செய்ய வேண்டும்.

**எதுகை** : பிறநாட்டு, இறவாத, திறமான **மோனை** : இறவாத, இயற்றல், மறைவாக, மகிமை
**இயைபு** : வேண்டும், வேண்டும்.

2. பாலைவனம் சோலைவனமாக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்;
சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்;
தேசபக்தி செழுந்தோங்கி வளர வேண்டும்;
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;
வெற்றியின்மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்; – **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**திரண்ட கருத்து:** பாலைவனம், சோலைவனமாக மாறவேண்டும். அச்சோலை வனத்திலே பசுங்கிளிகள் கொஞ்சிப் பாடவேண்டும். நாம் செல்லும் சாலைகளில் எல்லாம் பலவகையான தொழிற்சாலைகள் பெருக வேண்டும். கற்றறிந்தோர் சபைகளிலே தம் வாதத்திறமையை எடுத்தியம்ப வேண்டும். சீலை உடைகளை தவிர்த்து கதர் உடைகளாக இருக்க வேண்டும். நாம் நாட்டின் வேலையில்லா திண்டாட்டம் நீங்க வேண்டும். நம் நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேறி எல்லையில்லாப் புகழை அடைய வேண்டும். அப்படிப்பட்ட புகழ் வெற்றி மேன்மேலும் குவிய வேண்டும் என தன் கனவை வளரும் சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

**மையக் கருத்து:** நம் நாடு எல்லா வளமும் பெற வேண்டும் மக்களுக்கு தேசபக்தி வளர வேண்டும் என்பதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**எதுகை** : பாலைவனம், சோலைவனமாக, சாலைகளிற், வேலையில்லா, சீலை உடை.
**மோனை** : பாலைவனம், பசுங்கிளிகள், சாலைகளில், சபைகளிலே, வேலையில்லா, வெற்றியின்
**இயைபு** : **வேண்டும் வேண்டும்** என்னும் இயைபுச் சொற்கள் வந்து ஓசையின்பம் பயக்கின்றன.
**சந்தச் சுவை** : இப்பாடலில் எதுகை, மோனை, இயைபு ஆகியவை பயின்று வந்துள்ளதால் இனிய சந்தம் நம் செவிகளுக்குத் தேனாக இப்பாடல் அமைந்துள்ளது.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

# கடிதம் எழுதுதல்

**1. தடகள விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.**

காலாண்டுத் தேர்வு 2024

சென்னை,
16-03-20XX

பாசமுள்ள நண்பன் மணிமாறனுக்கு,

இங்கு நான், என் பெற்றோருடன் நலமாக இருக்கிறேன். அங்கு நீயும், பெற்றோரும் நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நேற்று வெளி வந்த பத்திரிக்கைகள் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் உன் இமாலய வெற்றியை அறிந்து பெருமிதம் அடைந்தேன். இந்த ஆண்டு நடந்த மாநில அளவிலான தடகளப் போட்டியில் முதல் இடம் பெற்று உன் இலட்சியத்தை நீ தொட்டுவிட்டாய். வரும் ஆண்டு முதல் உன்னுடைய பயிற்சிக்காக ஆகும் செலவை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளதைக் குறித்து ஆனந்தமடைந்தேன்.

நீ இப்பொழுது பெற்றுள்ள வெற்றி மேலும் மேலும் பல சிகரங்களைத் தொட வேண்டும் என்பது என்னுடைய விருப்பம் மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களின் விருப்பமும் அதுதான். வெற்றி விழாவன்று நீ தங்கப்பதக்கம் வாங்கப் போவதைக் காண நான் என் பெற்றோருடன் நேரில் வந்து வாழ்த்துகிறேன்.

வாழ்க! வளர்க!

உன் அன்பு நண்பன்,
செ. முரளி
**(செ. முரளி)**

**உறைமேல் முகவரி**

| |
|---|
| **பெறுநர் :**<br>அ.மணிமாறன்,<br>எண். 10, தெற்கு வெளிவீதி,<br>மதுரை - 625 001. |

**2. காணாமல் போன மகிழுந்தினைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல் ஆணையருக்குப் புகார்க் கடிதம் ஒன்று எழுதுக.**

**அனுப்புநர் :** 30.06.20XX

செ. கோபாலன்,
30, தியாகராஜர் தெரு, சென்னை - 600 003.

**பெறுநர் :**

உயர்திரு ஆணையர் அவர்கள்,
காவல்துறை, சென்னை - 600 003.

**பொருள் :** காணாமல் போன மகிழுந்தினைக் கண்டுபிடித்துத் தருதல் தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம்.

என்னுடைய வீட்டின் முன் உள்ள வெற்றிடத்தில் எனது மகிழுந்தினை நேற்று இரவு நிறுத்தி வைத்திருந்தேன். இரவு பன்னிரண்டு மணிக்கு நான் உறங்குவதற்காகச் சென்றபோது கூட மகிழுந்து இருந்தது. ஆனால் காலையில் எழுந்து பார்த்தபோது மகிழுந்தினைக் காணவில்லை. எவரோ திருடிச் சென்றுள்ளனர். எனவே என்னுடைய மகிழுந்தினை கண்டுபிடித்து தருமாறு வேண்டுகிறேன்.

**மகிழுந்தின் விவரங்கள் :**

| | |
|---|---|
| பெயர் | : ஷிப்ட் |
| எண் | : TN -10 - 1905 |
| வண்ணம் | : நீலம் |
| வாங்கிய ஆண்டு | : 2015 |

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செ. கோபாலன்
**(செ. கோபாலன்)**

**உறைமேல் முகவரி**

| |
|---|
| பெறுநர்<br>உயர்திரு ஆணையர் அவர்கள்,<br>காவல்துறை,<br>சென்னை - 600 003. |


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**1. எண்-6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினி பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக.** செப்.–2020

**அனுப்புநர் :**

த. பூங்கொடி,
எண். 6, பாரதியார் தெரு, உதக மண்டலம், நீலகிரி மாவட்டம்.

**பெறுநர் :**

மேலாளர்,
வீனஸ் கணினி பயிற்சி நிறுவனம், உதக மண்டலம்.

ஐயா,

**பொருள் :** கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி விண்ணப்பம்.

வணக்கம். 10-9-20XX தேதியிட்ட 'உதகை டைம்ஸ்' நாளிதழில் வெளியான உங்கள் நிறுவன விளம்பரத்தில் கணினிப் பயிற்றுநர் தேவை என்ற வேலை வாய்ப்புத் தகவலைக் கண்டேன். அந்தப் பணிக்காக நான் விண்ணப்பிக்கிறேன். இத்துடன் 'தன் விவரப் பட்டியலை' இணைத்துள்ளேன். இந்த விண்ணப்பத்தை பரிசீலித்து, இப்பணியை எனக்கு வழங்கினால் நான் மிகுந்த நன்றியுடன் இருப்பேன்.

நன்றி.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
த. பூங்கொடி

**தன்விவரப்பட்டியல்**

| | |
|---|---|
| பெயர் | : த. பூங்கொடி |
| தந்தைப் பெயர் | : அ. தமிழரசு |
| தாயார் பெயர் | : த. பவானி |
| பிறந்த தேதி | : 12-02-2000 |
| முகவரி | : எண். 6, பாரதியார் தெரு, உதக மண்டலம், நீலகிரி மாவட்டம். |
| கல்வித் தகுதி | : இளங்கலை கணினி அறிவியல் பட்டம் |
| கல்லூரி | : அரசு கலைக் கல்லூரி, உதகை. |
| பட்டறிவு | : கல்லூரியில் படிக்கும்போது, பகுதி நேரத்தில், உதகை பி.சி.கணினி மையத்தில் ஓராண்டு பயிற்றுநராக பணி. |
| அலைபேசி | : 864XX XXXXX |
| மின்னஞ்சல் முகவரி | : poonkodi@gmail.com |
| அறிந்த மொழிகள் | : தமிழ், ஆங்கிலம் |

**உறுதி மொழி**

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் உண்மையே என உறுதியளிக்கிறேன். தங்கள் நிறுவனத்தில் கணினிப் பயிற்றுநர் பணியை கொடுத்தால், சிறப்பாக அப்பணியை செய்வேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

த. பூங்கொடி
கையொப்பம்

**2. உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவிற்கு, நிகழ்கலை வல்லுநர் ஒருவரை சிறப்பு விருந்தினராகப் பள்ளிக்கு அழைத்துக் கடிதம் எழுதுக.** பிடிஏ–1

**அனுப்புநர்:**

ம. செந்தமிழ்ச் செல்வி,
மேல்நிலை இரண்டாம் ஆண்டு, மாணவர் மன்றம்,
கம்பன் மேல்நிலைப் பள்ளி, அண்ணாநகர், சென்னை -40

**பெறுநர்:**

உயர்திரு. வீரமுத்து அவர்கள்,
கரகாட்ட கலைஞர்
15, மூன்றாவது குறுக்குத் தெரு, காமராஜர் நகர், மதுரை -09

பெருந்தகையீர்,

வணக்கம். ஒவ்வோர் ஆண்டும் எங்கள் பள்ளியில் விடுதலைநாள் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றோம். நிகழ்கலையின் பெருமைகளை உணர்ந்து, நிகழ்கலைக் கலைஞர்களைப் போற்றும் வண்ணம் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு வகையான நிகழ்கலையை நடத்துகின்றோம். இந்த ஆண்டு கரகாட்டத்தை நடத்தலாம் என்று முடிவு செய்துள்ளோம். தாங்கள் மிகச் சிறந்த கரகாட்டக் கலைஞர் என்பதையும் இக்கலை அழிவுறாமல் பாதுகாப்பதற்காக பல முயற்சிகளை எடுத்து வருவதையும் பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டோம்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

எனவே இந்த ஆண்டு எங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்கிறோம். விழாவில் நடைபெறும் கரகாட்டத்திற்காக மாணவர்கள் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போதுதான், இக்கலையை கற்பது எவ்வளவு அரிய செயல் என்பதை உணர்ந்து கொண்டோம்.

15.08.20XX அன்று எங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவில் பங்கு கொண்டு நிகழ்கலைகள் குறித்து உரையாற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். தாங்கள், எங்கள் அழைப்பினை மறுக்காது ஏற்று வருகை புரிந்திட வேண்டும் என்று எங்கள் பள்ளியின் சார்பாக அனைவரும் கேட்டுக் கொள்கிறோம்.

மிக்க நன்றி.

இங்ஙனம்,
தங்கள் அன்பார்ந்த
மாணவர்கள் சார்பில்
**ம.செந்தமிழ்ச் செல்வி**

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
உயர்திரு. வீரமுத்து அவர்கள்,
கரகாட்ட கலைஞர்,
15, மூன்றாவது குறுக்குத் தெரு, காமராஜர் தெரு, மதுரை -09

**3. தங்கைக்குத் திறன்பேசிப் பயன்பாட்டினால் ஏற்படும் நன்மை, தீமைகளைக் குறிப்பிட்டு அறிவுரைக் கடிதம் எழுதுக.**
பிடிஏ–2; அரை. தேர்வு 2019 & 2023; முதல் தி.தேர்வு 2022; கா.தேர்வு 2023; மார்ச் 2024

எண். 15, கம்பர் தெரு,
செங்கல்பட்டு,
13 / 12 / 20XX

அன்புள்ள தங்கைக்கு,

உன் அன்பு அண்ணன் எழுதும் கடிதம். நான் இங்கு நலமாக உள்ளேன். உன் நலத்தையும் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி அனைவருடைய நலனையும் அறிய அவா. நீ எவ்வாறு படிக்கிறாய்? உன்னுடைய கூடைப்பந்து பயிற்சியெல்லாம் எப்படி இருக்கிறது? அன்றாடம் பயிற்சிக்குச் செல்கிறாயா? படிப்பையும் விளையாட்டையும் இரு கண்களாக நினைத்து இரண்டிலும் கவனம் செலுத்து. நீ திறன்பேசியை அதிகமாகப் பயன்படுத்துவதாக அப்பா கூறினார். திறன்பேசியினால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. படிப்பில் உன் ஐயங்களைத் தீர்க்க இணையத்தைப் பயன்படுத்துவாய்.

அப்போது இலவச இணைப்பு போல் தேவையற்ற விளம்பரங்களும் காட்சிகளும் உன்னைக் கவரும். அவற்றை விலக்கி விடு. படிப்பில் மட்டும் கவனம் செலுத்து. புலனம், முகநூல் மூலம் உன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்காதே. அப்பா, அம்மா சொல்வதைக் கேட்டு நல்லப் பெண் என்ற பெயர் எடுக்க வேண்டும். அடுத்த மாதம் விடுமுறையில் வரும்போது நேரில் பேசலாம்.

இப்படிக்கு,
உன் அன்பு அண்ணன்
**வேலவன்**

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
கவிதா,
10, நேரு வீதி, வேலூர்.
(அஞ்சல் தலை)

**4. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.**
அ.மா.வி 2019; ஆகஸ்ட் 2022

25-09-20XX

**அனுப்புநர்**
சு.கபிலன்
எண்.30, 18, ஏ.எல். முதலி 2ஆவது தெரு,
நேருநகர், வேளச்சேரி, சென்னை - 42.

**பெறுநர்**
உயர்திரு. முதன்மையாசிரியர் அவர்கள்,
நாளிதழ், சென்னை.

**பொருள்:** தட்டச்சர் பணிவேண்டி விண்ணப்பித்தல்.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம், நான் கடந்த கல்வியாண்டில் நடந்த பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 99 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியில் மாநில அளவில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் முதுநிலை (Senior Grade) தட்டச்சர் தேர்வில் முதல் நிலையிலும் தேர்ச்சிப் பெற்றுள்ளேன். குடும்பச் சூழலின் காரணமாய்ப் பணிக்கு வரும் நிலையில் உள்ளேன். அருள் கூர்ந்து என் தகுதியினை அறிந்து தாங்கள் எனக்குப் பணியினை வழங்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இங்ஙனம்
உண்மையுள்ள
சு. கபிலன்


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

## தன்விவரப்பட்டியல்

பிடிஏ–5

| | |
|---|---|
| பெயர் | : சு.கபிலன் |
| தந்தைப் பெயர் | : ச. சுரேஷ் பாபு |
| தாயார் பெயர் | : சு. ஹேமலதா |
| பிறந்த தேதி | : 15-03-2004 |
| கல்வித் தகுதி | : பத்தாம் வகுப்பு தேர்ச்சி |
| தொழிற் தகுதிகள் | : தட்டச்சு – தமிழ், ஆங்கிலம் முதுநிலை முதல் நிலையில் தேர்ச்சி, சுருக்கெழுத்து முதுநிலை முதல் நிலையில் தேர்ச்சி |
| கணினி | : அடிப்படைக் கணினி அறிவியல் தேர்ச்சி |
| பட்டறிவு | : ஓர் ஆண்டு கலைமகள் தட்டச்சு பயிற்சி (பயிற்றுநர் பணி) |
| முகவரி | : எண்.30, 18, ஏ.எல். முதலி 2ஆவது தெரு, நேருநகர், வேளச்சேரி, சென்னை – 42. |
| அலைபேசி எண்கள் | : 9841xxxx74, 9003xxxx83, |
| மின்னஞ்சல் முகவரி | : kabilan@gmail.com |
| அறிந்த மொழிகள் | : தமிழ், ஆங்கிலம், இந்தி |
| எடை | : 50 கிலோ |
| உயரம் | : 5½அடி |

உறுதி மொழி

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் என் சுய உணர்வுடன் கூறிய உண்மைத் தகவல்களே ஆகும். உண்மைக்கு மாறான தகவல்கள் ஏதும் இடம் பெறவில்லையென உறுதியளிக்கிறேன்.

கையொப்பம்

சு.கபிலன்

**5. நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்துக் கடிதம் எழுதுக.**

பிடிஏ–3; செப்.–2020

சென்னை
08-09-20xx

அன்புள்ள நண்பன் மணிமாறனுக்கு,

இங்கு நான், எனது பெற்றோருடன் நலமாக இருக்கிறேன். அங்கு நீயும் உனது பெற்றோருடன் நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன். உலகப் பொதுமறை என்று அனைவராலும் போற்றப்படுகின்ற திருக்குறளை தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் படித்திருக்க வேண்டும் தினமும் ஓர் அதிகாரம் என்ற அளவில் நான் படித்து வருகிறேன். நீயும் அவ்வாறே படித்துப் பயன் பெற வேண்டும் என்பதற்காக இக்கடிதத்தை எழுதுகிறேன்.

அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை செம்மையுற நமக்குக் கூறும் திருக்குறள் குறிப்பிட்ட ஒரு நாட்டினருக்கோ, மொழியினருக்கோ மட்டும் உரித்தன்று. உலகம் முழுவதிற்கும் சொந்தமானது. உலகிலேயே அதிகளவில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்நூல் திருக்குறளாகும்.

இவரது நூலில் எந்தச் சாதியோ, மதமோ, இறைவனின் பெயரோ எந்த இடத்திலும் கிடையாது. இறைவனைக் குறிக்கும் பொதுச் சொற்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

சாதாரண மனிதன் முதல் மன்னன் வரை அனைவருக்கும் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் எந்தக் காலத்திற்கும், எந்நாட்டவர்க்கும் பொருந்தக்கூடிய நூல் இது. சாதாரணக் குடிமகனாக வாழ்ந்த திருவள்ளுவர் அரசன், துறவி, குடும்பத் தலைவன், அமைச்சன் போன்ற அனைவருக்கும் வாழ்வியல் நெறிகளைக் கூறியுள்ளார். அவர் கூறியதை மறுத்துக் கூறவோ, மாறுபட்ட இரண்டாவது கருத்தையோ யாராலும் கூற முடியாது.

திருக்குறளைப் படிக்கப் படிக்க ஒவ்வொரு கோணத்திலும் புதிய விளக்கங்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

– என்று வள்ளுவர் கூறுகிறார். அப்படி "புகழோடு தோன்றினால் என்ன கிடைக்கும்?" என்ற கேள்வி நம் மனதில் எழுந்தால் அதற்கும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" – என்று வள்ளுவர் பதில் கூறுகிறார்.

ஏழே சீர்களில் உலகநீதியைச் சொல்லும் திருக்குறளை நீ கண்டிப்பாகப் படிக்க வேண்டும். படிப்பதோடு மட்டுமல்ல; திருக்குறள் வழியில் நாம் பயணிக்க வேண்டும்.

திருக்குறளைப் படித்துவிட்டு, உன்னுடைய கருத்துகளை எனக்கு எழுதுவாயாக!

இப்படிக்கு
உன் அன்பு நண்பன்
**முத்தழகன்**

**உறைமேல் முகவரி:**

க.மணிமாறன்
19A, வடக்குமாட வீதி, காமராஜர் சாலை,
மதுரை -09



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**6. ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு, முக்கியச் சாலை விதிகளை விளக்கி, அவற்றைக் கடைபிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக.** பிடிஏ–5

சென்னை, 05-09-20xx

அன்புள்ள அண்ணா அவர்களுக்கு,

வணக்கம், தாங்கள் புதிதாக ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் ஒன்று எங்கள் பள்ளியில் கடந்த வாரம் நடந்தது. அக்கூட்டத்தில் வாகனம் ஓட்டுபவர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிகள் குறித்து கூறினார்கள். அவை தங்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதால் இக்கடிதத்தில் அவற்றை எழுதியுள்ளேன்.

(i) தலைக் கவசம் அணியாமல் இரு சக்கர மோட்டார் வாகனத்தை ஓட்டக்கூடாது. மிகுதியான ஆட்களையோ சரக்குகளையோ வண்டியில் ஏற்றிச் செல்லக்கூடாது. சாலையின் வகைகள், மைல் கற்களின் விவரங்கள் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும். போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்ப சாலையைப் பயன்படுத்த வேண்டும்.
(ii) நடைமேடை, நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும் சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக்கூடாது.
(iii) சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. தேவையான இடங்களில் சரியான சைகையைச் செய்ய வேண்டும்.
(iv) எதிரில் வரும், கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்கு வழிவிட வேண்டும். தேவை ஏற்படும்போது, வேகத்தைக் குறைத்து இதர வாகனங்களுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும்.
(v) பிற ஊர்தி ஓட்டிகளுக்கு விட்டுக் கொடுப்பது சிறந்தது.
(vi) இதர சாலைப் பயனாளிகளை நண்பர்களாக எண்ண வேண்டும்.
(vii) மருத்துவமனை, பள்ளிகள் அருகே செல்லும்போது வேகத்தைக் குறைக்க வேண்டும். மேலும் தேவையில்லாமல் ஒலிப்பான்களை ஒலிக்கக்கூடாது.

மேற்கண்ட விதிகளை கடைபிடித்தால் விபத்துகள் நடைபெறாமல் காத்துக் கொள்ள முடியும். இவ்விதிகளை உங்கள் நண்பர்களும் கடைபிடிக்க வலியுறுத்தினால் நலமாக இருக்கும். தங்கள் பதில் கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

என்றும் அன்புடன்
**கமலக்கண்ணன்**

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
முத்தமிழ்ச்செல்வன்
15, வடக்கு மாடவீதி, மதுரை –1

**7. 'பள்ளித் தூய்மை – செயல் திட்டம்' ஒன்றை உருவாக்கி மாணவர்களின் சார்பாக மாணவர் தலைவரான நீங்கள், உங்கள் பள்ளியின் தலைமையாசிரியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.** பிடிஏ–6; செப்.–2020; இரண்டாம் தி.தேர்வு 2022

**அனுப்புநர்**
நா. வெற்றிவேலன்
மாணவர் தலைவர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, அண்ணாநகர், சென்னை – 40.

**பெறுநர்**
தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, அண்ணாநகர், சென்னை – 40

பெருமதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** 'பள்ளித் தூய்மை செயல் திட்டம்' உருவாக்கம் தொடர்பாக.

வணக்கம். நம் பள்ளியைத் தூய்மையாக வைத்திருப்பது தொடர்பாக செயல்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். அத்திட்டத்தின் செயல்பாடுகளாவன,

(i) பள்ளி வளாகம் மற்றும் விளையாட்டு மைதானத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.
(ii) பள்ளி வளாகத்தில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும்.
(iii) பள்ளி குடிநீர் தொட்டியில் குளோரினேஷன் செய்ய வேண்டும்.
(iv) வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், நூலகம் ஆகியவற்றை அன்றாடம் சுத்தம் செய்ய வேண்டும்.
(v) பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்த்து வெள்ளையடிக்க வேண்டும்.
(vi) மாணவர்களிடையே சுத்தம், சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப் போட்டி போன்றவற்றை நடத்த வேண்டும்.

இத்திட்டங்களை மாணவர்களாகிய நாங்கள் ஒருங்கிணைந்து நிறைவேற்றுவதற்கு தாங்களும் ஆசிரியர்களும் அனுமதியளிக்க வேண்டும்.

நன்றி!

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள மாணவன்
**நா.வெற்றிவேலன்**

**8. கொரோனா பெருந்தொற்று ஊரடங்குக் காலத்தில் உங்கள் நேரத்தை எவ்வாறு பயனுறக் கழித்தீர்கள் என்பதை நண்பனுக்கு விவரித்துக் கடிதம் எழுதுக.** செப்.–2021 ; இரண்டாம் தி.தேர்வு 2022

அன்பு நண்பன் அகிலனுக்கு,

உன் அன்பு நண்பன் எழிலன் எழுதும் கடிதம். இங்கு நானும் என் குடும்பத்தினரும் நலமாக உள்ளோம். அங்கு நீயும் உன் குடும்பத்தாரும் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அகிலா! கொரோனா நம் வாழ்வை


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

மாற்றிப்போட்டுவிட்டது. இருப்பினும் ஊரடங்கு காலத்தில் நான் நேரத்தை வீணாக்காமல் பயனுள்ள வகையில் செலவழித்தேன்.

என் பெற்றோரின் அறிவுரைப்படி வீதிகளிலும் வீடியோ கேம்களில் நேரத்தை வீணாக்காமல், கடைக்கு செல்வது, வீட்டுத் தோட்டம் பராமரித்தல், சிலம்பம், நீச்சல் போன்ற பயனுள்ள விளையாட்டுகளை கற்றுக்கொண்டேன். பாரதியாரின் கவிதைகளை வாசித்து அக மகிழ்ந்தேன், தேசத்தலைவர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகங்கள் படித்து உள்ளம் பூரித்தேன். இவ்வாறாக கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காலத்தில் நான் பயனுள்ள வகையில் நேரத்தை செலவழித்தேன். நீயும் பயனுள்ள வகையில் நேரத்தை செலவழித்திருப்பாய் என நம்புகிறேன். பதில் கடிதம் எழுது!

இப்படிக்கு
உன் அன்பு தோழன்
**எழிலன்**

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
அகிலன்
15, வடக்கு மாடவீதி, மதுரை -1

**9. பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.** மே–2022

சென்னை - 40
6-5-20xx

அன்புள்ள தாத்தா, பாட்டி

நான் உங்கள் பெயரன் எழுதுவது. நலம் நலமறிய அவா. இன்றைய சூழலில் தங்களை நேரில் வந்து பார்க்க இயலவில்லை. ஊரடங்கு சமயத்தில் நீங்கள் எங்கும் வெளியில் செல்லாதீர்கள். வாரத்திற்கு ஒருமுறை வேண்டியவற்றை வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். வெளியில் செல்லும்போது முகக்கவசம் கட்டாயம் அணிந்து செல்லுங்கள். அடிக்கடி கிருமிநாசினி பயன்படுத்துங்கள்.

கபசுரக்குடிநீர் அருந்துங்கள். சத்தான உணவுகளை உண்ணுங்கள். புரதச்சத்து மிகுந்த உணவுகளை உண்ணுங்கள். பழங்கள் நிறைய சாப்பிடுங்கள். கொரனோ பெருந்தொற்று நம்மை அணுகாமல் பார்த்துக் கொள்வது நம் கையில்தான் உள்ளது. இங்கு எங்களுக்கு இணையவழியில்தான் பாடம் கற்பிக்கப்படுகிறது. எனக்குப் பள்ளி எப்போது திறப்பார்கள் என்று ஆவலாய் இருக்கிறது. நிலைமை சரியானதும் நாங்கள் அனைவரும் அங்கு வருகிறோம். உடனே பதில் கடிதம் எழுதுங்கள்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
அஅஅஅ

**உறைமேல் முகவரி**

திரு.சிவா
எண்.30, பிள்ளையார் கோவில் தெரு,
வெட்டுவானம், கண்ணகி நகர், வேலூர்.

**10. மருந்தகம் ஒன்றிலிருந்து உங்கள் தாத்தா வாங்கி வந்த மருந்தின் பயன்பாட்டுத் தேதி முடிவடைந்ததை அறிந்த நீங்கள், அந்த மருந்தகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத்துறை ஆய்வாளர் அவர்களுக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்றை எழுதுக.** ஏப்ரல் 2023

**அனுப்புநர்**

செல்வம் . ம
எண் 20, காந்தி சாலை, சென்னை.

**பெறுநர்**

உயர்திரு சுகாதார ஆய்வாளர்,
சுகாதார நலத்துறை அலுவலகம்,
சென்னை.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** குறிப்பிட்ட நாள் முடிவு பெற்ற மருந்து விற்பனை செய்த மருந்தகம் மீது நடவடிக்கை எடுக்க கோருதல்

வணக்கம். நான் கடந்த வாரம் எங்கள் பகுதியில் பிரபலமான மருந்தகம் ஒன்றில் என் தாத்தாவுக்காக இருமல் மருந்து வாங்கி விட்டு வீடு திரும்பினேன். வீட்டிற்கு சென்று பார்த்த போது அந்த இருமல் மருந்து பாட்டிலில் அதன் தரம் முடிவுற்ற நாள் முடிந்து 3 மாதங்கள் ஆகிவிட்டதை கவனித்தேன். எனவே தரம் முடிவுற்ற நாள்பட்ட மருந்தை விற்பனை செய்த அந்த மருந்தகம் மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செல்வம். ம

**இணைப்பு :** 1. விலை ரசீது – நகல்
2. இருமல் மருந்து


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

**இடம் :** சென்னை
**நாள் :** 6.04.20xx

உறைமேல் முகவரி

| |
|---|
| பெறுநர்<br>உயர்திரு சுகாதார ஆய்வாளர்,<br>சுகாதார நலத்துறை அலுவலகம்,<br>சென்னை. |

**11. உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் புதை சாக்கடையைத் தூர்வாரவும் வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.** ஜூன் 2023

**அனுப்புனர்**
கா. அன்பழகன்
10, முல்லை நகர்,
அம்பத்தூர், சென்னை - 600 053.

**பெறுநர்**
நகராட்சி ஆணையர்
நகராட்சி அலுவலகம், அம்பத்தூர்.

ஐயா,

**பொருள் :** மழைநீரை அகற்றவும் புதை சாக்கடையைத் தூர்வாரவும் வேண்டி.

வணக்கம். நான் மேற்கண்ட முகவரியில் பத்து வருடங்களாக வசித்து வருகிறேன். எங்கள் பகுதியில் மழைநீர் வெளியேற வழியில்லாமல் அதிகம் தேங்கியுள்ளது. மேலும் புதை சாக்கடையில் அவ்வப்போது கழிவுப் பொருட்கள் தேங்கி மழைநீர் செல்ல வழியின்றி அடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் தெருக்களில் மழைநீர் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது. தெருக்களில் வசிக்கும் மக்கள் அதிகளவில் துன்பப்படுகின்றனர். எனவே தேங்கிய மழைநீரை அகற்றவும் புதை சாக்கடையைத் தூர் வாரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
கா.அன்பழகன்

**உறைமேல் முகவரி**

| |
|---|
| பெறுநர்<br>நகராட்சி ஆணையர்<br>நகராட்சி அலுவலகம்,அம்பத்தூர். |

**12. உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுது அடைந்த சாலைகளைச் சீரமைத்தும், மின் கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.** கா.தேர்வு & ஜூலை 2024

20-11-20XX,

**அனுப்புனர்**
ந. தமிழ் இனியன்
தில்லை நகர், ஆவடி சென்னை - 54.

**பெறுநர்**
உயர்திரு மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி அலுவலகம், ஆவடி- 54.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** சாலை/மின்கம்பங்கள் சரிசெய்தல் சார்பாக.

வணக்கம். நாங்கள் வசிக்கும் தில்லை நகர் பகுதியானது அண்மையில் ஏற்பட்ட கடும் புயலில் மிகவும் பாதித்துள்ளது. நகர் முழுவதும் ஏராளமான மரங்கள் சாய்ந்து விட்டன. எங்கள் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் குண்டும் குழியுமாய், சேறும் சகதியுமாய் மிக மோசமான நிலையில் பழுதடைந்து உள்ளன. இதனால் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறுகின்றன. இதனால் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களும், மருத்துவமனைகளுக்கு செல்லும் நோயாளிகளும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே சாய்ந்து விட்ட மரங்களை அகற்றவும் பழுதுபட்ட சாலைகளைச் சீர்படுத்தியும், போதிய மின்கம்பங்களையும், மின் விளக்குகளைப் பொருத்தியும் மக்களின் இடையூறுகளை போக்கி அடிப்படைத் தேவையை நிறைவேற்றி தரும்படி இப்பகுதி மக்கள் சார்பாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
ந. தமிழ் இனியன்

**உறைமேல் முகவரி**

| |
|---|
| பெறுநர்<br>உயர்திரு மாநகராட்சி ஆணையர் அவர்கள்,<br>மாநகராட்சி அலுவலகம்,<br>ஆவடி-54. |


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## பொதுக் கட்டுரைகள்

**1. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.**

**குறிப்புகள் : முன்னுரை – தமிழர் பண்பாட்டில் விருந்து – தமிழர் உணவுமுறை – விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் மகுடம் – முடிவுரை.**

### தமிழரின் விருந்து போற்றும் நெறி

**முன்னுரை :** விருந்தினரை உளமார வரவேற்று விருந்தளிக்கும் தமிழரின் முறை குறித்து சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. விருந்தோம்பல் என்பது அவர்கள் பசியைத் தீர்ப்பது மட்டுமல்ல; அவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்ளும் முறையையும் உள்ளடக்கியதாகும். அத்தகைய தமிழரின் நெறி பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழர் பண்பாட்டில் விருந்து :**

'விருந்தோம்பல்' என்று ஓர் அதிகாரத்தையே திருவள்ளுவர் படைத்து விருந்தோம்பலின் முக்கியத்துவத்தைக் கூறியுள்ளார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு." என்ற குறளின் வாயிலாக இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளின் மூலம் எடுத்துரைக்கிறார்.

**தமிழர் உணவு முறை :**

ஔவையார் எழுதிய "வரகரசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்" என்று தொடங்கும் தனிப்பாடலில், புள்வேளூர் பூதன் என்பவர் தனக்கு அளித்த வரகரிசிச் சோறு, கத்தரிக்காய் வதக்கல், அளவாகப் புளித்த மோர் ஆகியவற்றுக்கு ஈடாக இந்த உலகையே தரலாம் என்று கூறியுள்ளார். தமிழர் பண்பாட்டில் வாழையிலைக்குத் தனித்த இடம் உள்ளது. தலைவாழை இலையில் விருந்தினர்க்கு உணவளிப்பது தமிழரின் மரபாகக் கருதப்படுகிறது. வாழையிலையில் உள்ள மருத்துவப் பயன்களை தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

உண்பவரின் இடப்பக்கம் வாழையிலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான, அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான, அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பி உண்ணும் உணவு வகைகளைப் பரிமாறுவர். அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் 'வாழையிலை விருந்து விழா'வைக் கொண்டாடி வருகிறது. தமிழரின் பாரம்பரிய உணவு வகைகளான முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய் கூட்டு, தினைப் பாயாசம், அப்பளம் எனச் சுவையாக அங்கு வாழும் தமிழர்கள் விருந்தளிக்கின்றனர்.

**விருந்தோம்பல் பண்பாட்டின் மகுடம் :**

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல், நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல், "வீட்டிற்குள் வருக" என்று வரவேற்றல், அவர் எதிரில் நின்று மனம் மகிழும்படியாகப் பேசுதல், அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல், அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில் வரை பின்தொடர்ந்து செல்லுதல், அவரிடம் மகிழ்ச்சியாக முகமன்கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் தமிழரின் விருந்தோம்பல் பண்பின் மணிமகுடங்களாகும்.

பண்டைத் தமிழர் விருந்தினர் விடைபெறும்போது அவர்கள் செல்லவிருக்கின்ற தெருவரை ஏழு அடிகள் நடந்து சென்று வழியனுப்பினர் என்று **பொருநராற்றுப்படை** கூறுகிறது. பரிசில் பெறச் செல்லும் கூத்தர்கள், நன்னன் ஆட்சி செய்யும் பகுதியிலுள்ள வீடுகளுக்குள் உரிமையுடன் உறவினர் போலவே சென்றதையும், அந்த வீட்டிலிருந்தோர் இனிய சொற்கள் பேசி, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாக அளித்தனர் என்று **மலைபடுகடாம்** கூறுகிறது.

**முடிவுரை :**

உலகிற்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்த இனம் தமிழினம். தமிழினத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் தலையாயது விருந்தோம்பல். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற வாக்கிற்கு இணங்க அற நெறியுடன் வாழ்ந்த பண்டைய தமிழரின் பண்பாட்டை இன்றைய தமிழர்களாகிய நாமும் பின்பற்ற வேண்டும்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**1. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக. முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப் பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.**

பிடிஏ–1; மே– 2022

**முன்னுரை :**

இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட எண்ணற்ற பாரத மைந்தர்களுள் வ.உ.சிதம்பரனார் மிக முக்கியமான ஆளுமை ஆவார். அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழகம் தந்த தவப்புதல்வர் :**

எட்டையபுரத்துக்கு அருகிலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் 1872ஆம் ஆண்டு மகனாகத் தோன்றினார். தன் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் திருச்சி சென்று சட்டம் பயின்று வழக்கறிஞரானார்.

**நாட்டுப்பற்று :**

நாட்டில் சுதந்திரப் போர் தீவிரமடைந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அவர் தன்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு நாட்டு விடுதலைக்காகப் பணியாற்ற, தன்னை விடுதலை இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். பாலகங்காதர திலகரின் வழியில் சென்ற வ.உ.சி அவர்கள் தமிழகத்தில் விடுதலைப் போரைத் தீவிரப்படுத்தினார். சுப்பிரமணிய சிவா, பாரதியார், வாஞ்சிநாதன் போன்றோர் வ.உ.சியின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



இருந்தனர். தன் பேச்சுக்களாலும் எழுத்துகளாலும் மக்கள் மனதில் விடுதலை உணர்வைத் தூண்டினார். சுதேசி இயக்கத்தை வளர்த்து அந்நியப் பொருள்கள் மற்றும் துணிகளை எரித்தார். உள்நாட்டுப் பொருள்களை வாங்குமாறு மக்களை ஊக்கப்படுத்தினார்.

ஆங்கிலேயரின் கடல் வாணிபத்தை அழிக்க வேண்டும் என்று எண்ணிய வ.உ.சி அவர்கள் கடும் முயற்சிகளைத் தாண்டி இரண்டு கப்பல்களை வாங்கி கடல் வாணிபத்தைத் தொடங்கினார். அவர் வெற்றியைப் பொறுக்காத ஆங்கிலேய அரசு அவர்மீது வீண் பழி சுமத்தி இரட்டை ஆயுள் தண்டனை வழங்கியது. சிறையில் கசையடி பெற்றார்; கல்லுடைத்தார்; செக்கிழுத்தார். நம்மை சுதந்திர இந்தியாவில் வாழவைப்பதற்கு அவர் எண்ணற்ற துன்பங்களை அடைந்தார்.

**மொழிப்பற்று :**

தாய்நாட்டை எந்த அளவு நேசித்தாரோ அந்த அளவு தாய்மொழியான தமிழையும் நேசித்தார். மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை ஆகிய நான்கு நூல்களை இயற்றியுள்ளார். இன்னிலை, சிவஞான போதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்), தொல்காப்பியம் (இளம்பூரணர் உரையுடன்) ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். விவேக பானு, இந்து நேசன், தி நேஷனல் ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். ஜேம்ஸ் ஆலன் என்பவர் எழுதியுள்ள நான்கு நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

**பொதுவாழ்வில் தூய்மை – எளிமை :**

பொது வாழ்வில் தூய்மையைக் கடைபிடித்தார். வழக்கறிஞராக அவர் இருந்தபோது ஏழை மக்கள் மீது கொண்ட அனுதாபத்தினால் பலமுறை பணம் வாங்காமல் வாதாடி வெற்றி பெற்றுள்ளார். பணத்திற்காக வாதாடாமல் ஏழைகளுக்காகவும் உண்மைக்காகவும் வாதாடினார். அந்நியத் துணிகளை உடுத்துவதற்கு அனுமதிக்கவில்லை.

**மக்கள் பணியே மகத்தான பணி :**

தொழிலாளர் நலனுக்காக உழைத்தார். கோரல் மில் தொழிலாளர்களுக்கு பிரச்சனை ஏற்பட்டபோது, உடனிருந்து உழைத்து அவர்களுக்காகப் பாடுபட்டார். தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். கல்வியறிவைப் பெற முடியாத மாணவர்களுக்கு உதவி செய்து அவர்கள் கல்வி கற்க உதவி செய்துள்ளார். மக்களுக்கு செய்யும் சேவைகள் மகேசனுக்கு செய்யும் சேவைகள் எனக் கருதினார்.

**முடிவுரை :**

நாட்டிற்காக, நாட்டு மக்களுக்காக உழைத்த வ.உ.சி அவர்கள் இந்நாடு விடுதலையடைந்த போது உயிருடன் இல்லை. 1936ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று உயிர் நீத்தார். தமிழகம் தந்த தவப்புதல்வனை எண்ணி பாரதத்தாய் கண்ணீர் வடித்தாள்.

2. **மனித நேயமிக்க ஆளுமை ஒருவருக்கு குறிப்புகளைப் பயன்படுத்தி நினைவிதழ் ஒன்று உருவாக்குக. முன்னுரை – என் இளமைப் பருவம் – விடுதலைப் போராட்டத்தில் நான் – பொது நலமே தன்னலம் – எளிமையே அறம் – நாட்டின் முன்னேற்றமே நோக்கம் – எளியோரின் அன்பே சொத்து – முடிவுரை.** செப்.–2020

**நினைவிதழ் – சுதந்திர போராட்டத் தியாகி சிதம்பரனார்**

**முன்னுரை :**

ஆங்கிலேயரின் அடக்குமுறையால் நமது இந்திய மக்கள் பொங்கி எழுந்தனர். போராடினர். அவர்களில் நானும் ஒருவன் என்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

**என் இளமைப் பருவம் :**

எட்டையப்புரத்துக்கு அருகில் ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் 1872–ஆம் ஆண்டு செப்டம்பர் 5–ஆம் நாள் நான் பிறந்தேன். என் தந்தையாரின் பெயர் உலகநாத பிள்ளை. தாயாரின் பெயர் பரமாயி அம்மையார். பள்ளிப் படிப்பை தூத்துக்குடியிலுள்ள புனித சேவியர் பள்ளியிலும், கால்டுவெல் பள்ளியிலும் படித்தேன். பின்னர் திருநெல்வேலியிலுள்ள இந்து கல்லூரியில் படித்தேன். அதன்பிறகு, திருச்சியில் சட்டக் கல்வி கற்று, வழக்கறிஞராகத் தொழிலைத் துவங்கினேன்.

**விடுதலைப் போராட்டத்தில் நான் :**

இக்கால கட்டத்தில் நம் நாட்டில் சுதந்திரப் போர் தீவிரமடைந்து கொண்டிருந்தது. நான் என்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு, நாட்டின் சுதந்திரத்திற்காக பங்காற்ற வேண்டும் என தீர்மானித்தேன். பாலகங்காதர திலகரின் விடுதலைப் போராட்ட வழிமுறைகள் என்னைக் கவர்ந்தன. சென்னைக்குச் செல்லும்போதெல்லாம் பாரதியாரைச் சந்தித்து சுதந்திரப் போராட்டம் குறித்து பேசுவேன்.

வாஞ்சிநாதன், சுப்பிரமணிய சிவா போன்றோரும் என் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தனர். ஆங்கிலேய அரசுக்கு எதிராக மக்களிடம் சொற்பொழிவுகள் ஆற்றுவதை எனது கடமையாகக் கொண்டேன். சுதந்திரப் போராட்டத்திற்கு மக்களைத் தூண்டிவிட்டதாக ஆங்கிலேய அரசு என்மீது வழக்கு போட்டு, 40 ஆண்டுகள் தண்டனை கொடுத்தது. கோவை சிறையில் நான் அடைக்கப்பட்டேன். லண்டனில், மேல் முறையீடு செய்ததில், தண்டனைக் காலம் 6 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

**பொது நலமே தன்னலம் :**

பொது வாழ்வில் நான் நேர்மை, தூய்மை, எளிமையைக் கடைபிடித்தேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. வழக்கறிஞராக நான் பணியாற்றிய காலகட்டத்தில், ஏழை, எளியோரிடம் பணம் வாங்காமல், அவர்களுக்காக நியாயத்துக்காக வாதாடி, வெற்றி பெற்றிருக்கிறேன். அவர்களின் வாழ்த்துகளும், நன்றியறிதலுமே போதும் என கூறியிருக்கிறேன். உண்மையை நிலைநாட்ட வாதாடும்போது, ஏழைகளிடம் அதற்காக பணம் பெற நினைப்பது கொடுமையல்லவா? மேலும், அயல்நாட்டுப் பொருள்களை, உணவுப் பொருள்களை நிராகரித்துவிட்டு, சொந்த நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தினேன், மற்றவர்களையும் பயன்படுத்தச் சொன்னேன்.

**எளிமையே அறம் :**

சீனாவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் கொண்டு வரப்படும் பட்டுத்துணிகளை வாங்கி ஆடையாக அணியாமல், நம் நாட்டில் விளையும் பருத்தி நூலால் நெய்யப்படும் ஆடைகளை அணிவது எளிமை மட்டுமல்ல, நமது உடல் நலத்திற்கும் நன்மை தருவதாகும்.

**நாட்டின் முன்னேற்றமே நோக்கம் :**

நம் நாட்டில் கனிம வளம், உட்பட பல வளங்கள் இருக்கும்போதும், நம் நாட்டின் முன்னேற்றத்தில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஈடுபடவில்லை.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

மாறாக, பாரபட்சமான சுரண்டல் பொருளாதாரக் கொள்கையைக் கடைபிடித்தனர். ஆங்கிலேயரின் விவசாய, வணிகக் கொள்கைகள் நம் நாட்டு பொருளாதாரத்தை நாசப் படுத்தின. நம் நாட்டின் வளங்கள் பல வகைகளிலும் கொள்ளை போயின. இத்தகைய செயல்களைத் தடுக்க பல விதங்களிலும் முயற்சிகள் செய்தேன்.

ஆங்கிலேயரின் கடல் வாணிபத்தை அழிக்க வேண்டும் என எண்ணி, இரண்டு கப்பல்களை வாங்கி நான் கடல் வாணிபத்தைத் தொடங்கினேன். ஆனால் இதனைப் பொறுக்காத ஆங்கிலேய அரசு என்மீது வீண்பழி சுமத்தி சிறைத் தண்டனை வழங்கியது.

**எளியோரின் அன்பே சொத்து :**

தூத்துக்குடியில் கோரல் நூற்பாலையில் தொழிலாளர்கள் தினசரி 12 மணிநேரம் உழைத்தாலும், அவர்களுக்கு கூலி மிகக் குறைவாகவே கொடுக்கப்பட்டது. அங்கு வேலை நிறுத்தம் நடைபெற்றது. அப்போது என் சொத்தில் பெரும்பகுதியை தொழிலாளர்களுக்குக் கொடுத்து உதவினேன். இறுதியில் வேலை நேரம் குறைக்கப்பட்டு, ஞாயிறு விடுமுறை தினமானது. கூலியும் உயர்த்தப்பட்டது. இதனால் மக்களின் அன்புக்குப் பாத்திரமானேன்.

**முடிவுரை :**

சிறையிலிருந்து நான் விடுதலையான பிறகு சென்னை, கோவை, கோவில்பட்டி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் வசித்தேன். என் வாழ்நாளில் இந்திய சுதந்திரம் பெறுவதை என்னால் காண முடியவில்லை என்பதில் எனக்கு வருத்தம். 1936 ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் நாள் மரணம் என்னைத் தழுவியது.

3. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.**

**குறிப்புகள் : முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.** செப்-2021, மே -2022; ஜூன் 2023 அரையாண்டுத் தேர்வு 2023

**முன்னுரை :**

ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்கள் மூலமாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் சாலைவிபத்துகள் பற்றிய செய்திகளை நாம் அறியமுடிகிறது. இக்கால கட்டத்தில் சாலை விபத்துகள் மிக அதிக அளவில் நடைபெறுகின்றன. இதனால் எண்ணற்ற உயிர்கள் பலியாகின்றன. உடலின் உறுப்புக்களை இழந்து தவிப்போர் எண்ணிக்கையும் அதிகமாகிவிட்டது. இதற்கெல்லாம் சாலைவிதிகளை நாம் மதிக்காமல் நடப்பதே காரணமாகும்.

**சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு :**
**"தலைக்கவசம் நமக்கு உயிர்க்கவசம்"**

இரு சக்கர வாகன ஓட்டிகள் தவறாமல் தலைக்கவசம் போட்டுக் கொண்டு வாகனங்களை ஓட்ட வேண்டும். போக்குவரத்துக் காவல்துறையினரின் கட்டளையை மீறி நாம் செல்லக்கூடாது. வாகனங்களில் அதிவேகம் இருக்கக் கூடாது. வாகனம் ஓட்டுபவர்களுக்கென கூறப்பட்டுள்ள சாலைவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். சாலையில் அந்தந்த வாகனங்களுக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டி ஓட்டக் கூடாது. சாலையில் பாதுகாப்புடன் வாகனங்களை இயக்கி உயிர்பலியை தவிர்ப்போம்.

**சாலை விதிகள் :**

சாலையில் விபத்துகள் நேரிடா வண்ணம் தடுப்பதற்காக, போக்குவரத்துக் காவல்துறையினர் பணிசெய்கின்றனர். மேலும் பல இடங்களில் வண்ண விளக்குகள் மூலமாக சாலை போக்குவரத்து நெறிப்படுத்தப்படுகிறது. போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்ப சாலையை பயன்படுத்த வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் :**

சிவப்பு வண்ண விளக்கு 'நில்' என்ற கட்டளையையும் மஞ்சள் வண்ண விளக்கு 'தயாராக இரு' என்ற கட்டளையையும், பச்சை வண்ண விளக்கு 'புறப்படு' என்ற கட்டளையையும் நமக்குத் தருகிறது. இடது பக்கம் செல்லவேண்டும் என்பது சாலை விதிகளில் முக்கியமானதாகும். பாதசாரிகள், நடப்பதற்கான நடைமேடையில் செல்ல வேண்டும். எதிர்த்திசையில் சாலைகளைக் கடக்கும்பொழுது, அதற்கென கோடு போட்டிருக்கும் இடத்தில்தான் கடக்க வேண்டும்.

**விபத்தினைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் :**

இரு சக்கர வாகனங்களில் இருவருக்கு மேல் பயணிக்கக்கூடாது. பேருந்துகளில் பயணம் செய்யும் போது படிக்கட்டுகளில் நிற்கக் கூடாது. வண்டி ஓட்டுபவர்கள் உடல்நிலை, மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது, கண்டிப்பாக வண்டி ஓட்டக்கூடாது. மதுவருந்திவிட்டு வண்டி ஓட்டுதல் சட்டப்படி குற்றமாகும். எந்தவொரு வண்டியையும் முந்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் செல்லக்கூடாது.

**முடிவுரை :**

'உயிர் விலைமதிப்பற்றது' மனித உயிர் மட்டுமல்ல; பறவைகள், விலங்குகள் என்று அனைத்து உயிர்களுமே விலை மதிப்பற்றவை. சாலை விபத்தின் போது அந்த ஜீவன்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே சாலை விதிகளை நாம் பின்பற்றி நடக்க வேண்டும்.

"சாலை விதிகளை மதிப்போம்
விலை மதிப்பில்லா உயிரைக் காப்போம்."

4. **"விசும்பின் துளியும் பசும்புல் தலையும்" என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று எழுதுக.**

**குறிப்புகள் : முன்னுரை - இயற்கையோடு இயைந்து வாழ்வோம் - வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் - முடிவுரை.** பிடிஏ-3

**(அல்லது)**

**விசும்பின் துளியும் பசும்புல் தலையும் - காற்று மாசு - பசுமையைக் காப்போம் - மரம் நமக்கு வரம் - மழைநீர் உயிர் நீர். - இக்குறிப்புகளைப் பயன்படுத்தி 'இயற்கையைக் காப்போம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.** பிடிஏ-6; ஜூலை-2024

**முன்னுரை :**

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்ப தரிது. - திருக்குறள் - 16

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அன்றி உலகில் ஓரறிவுடைய பசும்புல்லைக்கூட காண முடியாது. நீரில்லாமல் உலகமே இயங்காது. அதனால்தான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று மழையைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

**இயற்கையோடு இயைந்து வாழ்வோம் :**

இயற்கை என்பது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களால் ஆனது. இயற்கை இல்லையென்றால் உயிரினங்கள் இவ்வுலகத்தில் வாழ முடியாது. இதனை நன்கு உணர்ந்திருந்த பழங்காலத்து மக்கள் தங்களின் வாழ்வை இயற்கையோடு இணைத்தே வாழ்ந்தார்கள். அவர்களின் வாழ்வு இயற்கையோடு இரண்டறக் கலந்திருந்தது. இயற்கையை நேசித்தார்கள், பாதுகாத்தார்கள், அதனால் பருவமழை பொய்க்காமல் பொழிந்தது. காடுகள் மற்றும் மலைகள் சிறந்த அரண்களாக விளங்கின. இயற்கை முறையில் விவசாயம் செய்து தரமான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து நோயற்ற வாழ்வு வாழ்ந்தனர்.

இயற்கை வளங்களை மனிதன் தன் சுயநலங்களுக்காக அழிக்கிறான். காடுகளை அழித்து தொழிற்சாலைகளாகவும், பெரிய பெரிய குடியிருப்புகளாகவும் மாற்றியதாலும், விளைநிலங்களை விலைநிலங்களாக மாற்றியதாலும் மனிதன் பல இன்னல்களுக்கு ஆளாகிறான். இயற்கையை நாம் அழித்தால், பேரிடர் வடிவில் அது இந்த உலகை அழிக்கும். எனவே இயற்கையைப் போற்றி அதனுடன் இயைந்து வாழவேண்டும்.

**வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் :**

பருவமழை பொழிகின்றபோது, மழைநீரை வீணாக்காமல் அதனைச் சேமித்து வைக்க வேண்டும். மழைநீரில் 50 சதவீதம் வீணாகக் கடலில் கலப்பதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொருவர் வீட்டிலும் மழைநீர் சேகரிப்பிற்கான தொட்டியைக் கட்ட வேண்டும். இதனால் வீடுகளில் பெய்யும் மழைநீர் தெருவில், சாக்கடைகளில் ஓடி வீணாகாமல் அவரவர் வீட்டில் தேக்கிவைக்கப்படும். இதனால் நிலத்தடிநீர் மட்டம் உயருகிறது.

இதே போல் பொது சொத்துகளான குளம், குட்டை, ஏரி, கிணறு போன்ற நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்தினால், அதிகளவு மழைநீரை சேமிக்க முடியும். பொது இடங்களான பள்ளிகள், கோயில்கள், தொழிற்சாலைகள், வணிகவளாகங்கள் போன்றவற்றிலும் மழைநீர் சேகரிப்புத் திட்டங்களைக் கட்ட வேண்டும்.

**மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம்:**

மழை பொழிவதற்கு ஆதாரமான மரங்களை வெட்டாமல் பாதுகாக்க வேண்டும். மரம் இல்லையேல் மழை இல்லை; மழை இல்லையேல் இந்த உலகில் உயிர்கள் இல்லை; மரங்கள் நாம் வெளியிடும் கரியமில வாயுவை ($CO_2$) எடுத்துக் கொண்டு தூய்மையான உயிர்வளியை ($O_2$) நமக்குத் தருகின்றன.

நமக்கு தேவையான காய் கனிகளைத் தருவதுடன், மருந்துப் பொருள்களைத் தரும் விருட்சமாக இருக்கும் மரங்களை நாம் அதிகமாக வளர்க்க வேண்டும். 'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்' என்ற வாசகத்தை 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என மாற்ற வேண்டும். மனிதர்கள் மரம் வெட்டுவதை நிறுத்த வேண்டும்.

**முடிவுரை :**

காடுகளை அழித்து தொழில் நகரமாக மாற்றாமல், சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாமல், மழைநீரை சேகரித்து இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் நோயற்ற இன்பமான வாழ்வை நாம் வாழலாம்.

5. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதி தலைப்பு ஒன்று தருக.**

**குறிப்புகள் : முன்னுரை – தமிழன் அறிவியலின் முன்னோடி – விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் – விண்ணியல் அறிவில் நமது கடமை – முடிவுரை.**

பிடிஏ–4, செப்.–2020, ஜூலை & கா.தேர்வு 2024

## விண்ணியல் அறிவு

**முன்னுரை :**

உயிரினங்களில் மனிதரை வேறுபடுத்திக் காட்டுவது அவர்களின் சிந்தனையே ஆகும். சிந்தனைகள் மேம்படும்போது மனிதன் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை ஆராய்கிறான். அவற்றுள் ஒன்றுதான் விண்ணியல் குறித்த ஆய்வாகும்.

**தமிழன் அறிவியலின் முன்னோடி :**

தமிழர், பண்டைய காலத்தில் தங்கள் வாழ்வியலோடு அறிவியலையும் இணைத்துக் கொண்டவர்கள். சங்க இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன. பெருவெடிப்புக் கொள்கைப் பற்றிய இன்றைய அறிவியல் கூறும் கருத்துகளை சங்ககால இலக்கியங்களில் நமது முன்னோர்கள் முன்பே சொல்லிவிட்டனர்.

"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி."

எனத் தொடங்கும் பரிபாடலில் புலவர் கீரந்தையார் அண்டத்தோற்றம் குறித்து இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளில் ஒன்றுகூட மாறாமல் கூறியுள்ளது, வியப்பை அளிக்கும் செய்தியாகும்.

அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924-இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்பதைக் கண்டறிந்தார். ஆனால் 1300 ஆண்டுகளுக்கு முன்பே மாணிக்கவாசகர் தான் இயற்றிய திருவாசகத்தில் திரு அண்டப் பகுதியில் நூறு கோடிக்கும் மேலான பால்வீதிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

**விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் :**

விண்வெளிக்கு பயணம் செய்த முதல் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா. விண்வெளி ஆராய்ச்சியில் சிறந்தவர் நல்ல திறமையுடைய பெண் ஆராய்ச்சியாளர் இவர். இந்தியாவே போற்றும் வகையில் விண்வெளியில் மிகச் சிறந்த சாதனை செய்தவர் இவர் எனலாம். 1995-ஆம் ஆண்டு நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த கல்பனா சாவ்லா, கொலம்பியா விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் – 87இல் பயணம் செய்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார். முதல் இந்திய கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் – 87-இல் விண்வெளி பயணம் மேற்கொண்டார். இந்த விண்வெளி பயணத்தில் சுமார் 372 மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனைப் புரிந்து வெற்றிகரமாகப் பூமி திரும்பினார்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**விண்ணியல் அறிவில் நமது கடமை :**

அனைத்துக் கோள்களையும் இன்றைய அறிவியல் ஆராய்ந்து வருகிறது. மனிதன் வாழத் தகுதியான கோள் எது என்பதையும் ஆராய்ந்து வருகிறது. விண்ணியல் குறித்து ஆராய விரும்பும் மாணவர்களுக்குத் தேவையான ஊக்கத்தை நமது அரசாங்கம் அளிக்கின்றது. விண்ணியல் ஆய்வில் நாம் கண்டறிந்த உண்மைகளை உலக அரங்கில் எடுத்துரைக்க வேண்டும். நமது முக்கியக் கடமை எதுவென்றால், நம் நாட்டில் படித்துவிட்டு சேவைகளை வெளிநாட்டுக்குக் கொடுக்கக்கூடாது. நம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

**முடிவுரை :** "வானை அளப்போம். கடல்மீனை அளப்போம்" என்ற பாரதியின் கனவை நனவாக்கி விட்டோம். இந்திய விண்வெளி ஆய்வில் புதிய சரித்திரங்கள் பலவற்றைப் படைப்போம்!

6. **முன்னுரை *– உழவே முதன்மைத் தொழில் – தமிழ்ச் சமூகத்தின் மகுடம் – உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் – உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – முடிவுரை. இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி பொருத்தமான தலைப்பிடுக.**

காலாண்டு & அரையாண்டுத் தேர்வு 2023

**முன்னுரை :** "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதியார் உழவுத்தொழிலை மேன்மை படுத்தியுள்ளார். உழவன் சேற்றில் கை வைக்கவில்லையென்றால் நாம் சோற்றில் கை வைக்க முடியாது என்பது நம் அனைவருக்கும் தெரியும். அத்தகு உயர்வுடைய உழவுத்தொழில் பற்றியும் உழவர்கள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**உழவே முதன்மைத் தொழில் :**

நம் நாட்டில் இரு கண்களாக திகழ்பவை உழவும், நெசவுமே! 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற கூற்றிற்கிணங்க உணவினை விளைவிக்கும் உழவுத்தொழிலே உலகில் உள்ள அனைத்து தொழிலிலும் சிறந்த தொழில். இதனையே வள்ளுவர்

'சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை' என்று குறிப்பிடுகிறார்.

மனிதன் மலைகளில் தொடங்கிய வாழ்வைக் காடுகளில் தொடர்ந்தான். அடுத்த படி நிலை வளர்ச்சியே மருதம். காடுகளைச் சமன்படுத்தி ஆடுமாடுகளை வளர்த்தான். உழவுத் தொழிலைக் கண்டறிந்தான். வேட்டையாடி வாழ்க்கையைத் தொடங்கியவன், மனித சமூகமாக வளர்ந்து நாகரிகம் பெற்றதற்குக் காரணம் உழவுத்தொழிலே.

**தமிழ் சமூகத்தின் மகுடம் :**

'வேள்' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த 'வேளாண்மை' என்ற சொல்லின் பொருள் கொடை, ஈகை ஆகும். எந்தவொரு தொழிலைப் பற்றியும் பேசாத திருவள்ளுவர் 'உழவு' என்ற ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். பண்டைய தமிழர் எந்த மண்ணில் எந்தப் பயிர் செய்ய முடியும் என்று அறிந்து வைத்திருந்தனர். ஐவகைத் திணைகளுள் மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடங்களைக் குறிக்கிறது. புலவர்களின் பாடல்களில் இந்த நிலப்பகுதி உழவுத் தொழிலுடன் கூடியதாக இருந்தது. கம்பர் 'மேழி பிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கும் கை' என்று கூறியுள்ளார். "ஏர்பிடித்து உழவு செய்கின்ற கைகள் வேற்படையைக் கையில் பிடித்துள்ள மன்னர்களும் எதிர்பார்க்கின்ற கைகள்" என்று கம்பர் புகழ்ந்துள்ளார்.

உழுதல், விதைத்தல், தொழு உரமிடுதல், நீர்பாய்ச்சுதல், களையெடுத்தல், காத்தல் முதலியன நம் தமிழர் மேற்கொண்ட இயற்கை வேளாண் கூறுகளாகும்.

**உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் :**

அனைவரும் உண்ணுவதற்காக உணவைத் தந்து, தாமும் உண்டு வாழ்கின்றவரே உரிமையுடன் வாழ்பவர். மற்றவர் எல்லாரும் அடுத்தவரைத் தொழுது அவர்பின் செல்வர்கள் ஆவர். உழவருடைய கை உழாமல் மடங்கிவிட்டால் "யாவரும் விரும்புகின்ற எல்லாப் பற்றையும் விட்டுவிட்டோம்" என்று கூறும் துறவியரும் அவ்வறத்தில் நிலைத்து நிற்க முடியாது. எனவேதான் ஔவையார் எந்த மன்னரை வாழ்த்தினாலும் 'மன்னர் வாழ்க!' என்று கூறாமல் "உன் நாட்டில் வரப்புகள் உயர்க" என்று வாழ்த்துவார். எனவே உழவுத் தொழிலுக்கு நாம் வந்தனை செய்வோம்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!
–வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்!"
– பாரதியார்

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" :**

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியார் உழவை முதலில் நிறுத்தி சிறப்பித்துள்ளார். தெய்வப்புலவரோ 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்று உழவரை முன்னிறுத்திப் பாடியுள்ளார். காந்தியடிகள் கிராமங்களின் சிறப்பைப் போற்றியுள்ளார். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற பழமொழி உழவர்களை மையப்படுத்தி ஏற்பட்டது. சங்கத் தமிழர் காலத்தில் உழவுத்தொழில் உயர்வாக இருந்த காரணத்தினால் பண்டைய இலக்கியங்களில் உழவு உயர்நிலையில் வைத்து பாடப்பட்டுள்ளது.

**முடிவுரை :** "உழுவர் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்ற வள்ளுவரின் கருத்தால் உழவுத்தொழிலின் சிறப்பு சொல்லாமலே விளங்கும். விவசாயம் அழிவுப்பாதையை நோக்கிச் செல்லாமல் இருக்கப் பாடுபடுவோம். விவசாயம் மனிதனின் உயிர்மூச்சாகத் திகழ்வதால் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்.

7. **உங்களைக் கவர்ந்த எவரேனும் ஓர் அறிஞர் அல்லது அரசியல் தலைவர், தம் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைத் தாமே சொல்வதைப்போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.**

பிடிஎ–4 ; மார்ச் 2024

**முன்னுரை :** **அப்துல்கலாம்**

1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் நாள் இராமேஸ்வரத்தில் ஜைனுல்லா மரைக்காயர் – ஆஷிமா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தேன். என் வாழ்க்கை வரலாற்றில் நடந்த நிகழ்வுகளை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகிறேன்.

**இளமைக்காலம் :**

என்னுடைய பள்ளிப் படிப்பை இராமேஸ்வரத்தில் உள்ள அரசுப் பள்ளியில் தமிழ்வழிக் கல்வி மூலம் தொடங்கினேன். அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் சிறுவயது முதலே ஆர்வம் கொண்டிருந்தேன். பத்திரிகை விற்பனை செய்த என்னுடைய உறவினருக்கு உதவி செய்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தை என் படிப்புக்காக செலவு செய்தேன்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



பள்ளிப் பருவத்தில் கல்விச் சுற்றுலா சென்றிருந்தபோது பறவைகள் எவ்வாறு பறக்கின்றன என்பதை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். இதுவே பின்னாளில் நான் விமானத்தை வடிவமைக்க தூண்டுகோலாக இருந்தது.

**கல்லூரிப் படிப்பு :**

1954-இல் இயற்பியல் பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றேன். 1955-இல் சென்னையிலுள்ள எம்.ஐ.டி.யில் 'விண்வெளி பொறியியல்' படிப்பைத் தொடங்கினேன்.

**விமான வடிவமைப்பு :**

எம்.ஐ.டியில் படித்து முடித்த பின் உள்நாட்டுத் தொழில்நுட்ப அறிஞர்களின் உதவியுடன் உள்நாட்டில் கிடைத்த பொருள்களைக் கொண்டு 'நந்தி' என்ற விமானத்தை வடிவமைத்து இயக்கியும் காட்டினேன்.

**பணி :**

1983-இல் இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும், பாதுகாப்பு அமைச்சக அறிவியல் ஆலோசகராகவும் பொறுப்பேற்றேன்.

**சாதனைகள் :**

இந்தியாவில் முதன்முறையாக 1974-இல் **'சிரிக்கும் புத்தர்'** என்ற திட்டத்தில் அணுவெடிப்புச் சோதனை நிகழ்ந்தது. அத்திட்டத்தில் பங்கேற்ற 60 விண்வெளி பொறியியல் அறிஞர்களுள் நானும் ஒருவனாக இருந்தது எனக்குப் பெருமையளிக்கிறது. 1980-இல் இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் எஸ்.எல்.வி.3 என்ற ஏவுகணையைப் பயன்படுத்தி ரோகிணி-I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தினேன்.

1998 ஆம் ஆண்டு 'ஆப்ரேஷன் சக்தி' என்ற திட்டத்தின் மூலம் பொக்ரான் அணுவெடிப்புச் சோதனை யில் முக்கியப் பங்காற்றினேன். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்ற வேண்டும் என்ற என்னுடைய கனவு நனவானது. 2002 முதல் 2007 வரை இந்தியக் குடியரசுத் தலைவராகவும் இருந்துள்ளேன்.

**விருதுகள் :**

இந்திய அரசின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது எனக்கு வழங்கப்பட்டது. 23 பல்கலைக்கழகங்கள் 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளன. ஆர்யபட்டா விருது, நேரு விருது, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் வழங்கிய 'டாக்டர் ஆஃப் ஃபிலாசபி', விஸ்வபாரதி பல்கலைக்கழகம் வழங்கிய 'தேசிகோத்தமா' ஆகிய பட்டங்கள் எனக்கு வழங்கப்பட்டன. இவ்விருதுகள் யாவையும் எனக்கு மட்டும் உரித்தானவை அல்ல; என்னுடன் சேர்ந்து உழைத்த அனைவருக்கும் உரித்தானவை.

**முடிவுரை :**

அறிவியல் மீது எவ்வளவு பற்று கொண்டிருந்தேனோ அந்த அளவு தாய்மொழி மீதும் பற்றுக் கொண்டிருந்தேன். எனக்கு மிகவும் பிடித்த நூல் திருக்குறளாகும். ஏவுகணைகளை விண்ணில் ஏவிய நான் பலமுறை மாணவர்களின் கேள்விக் கணைகளை எதிர்கொண்டு பதில் அளித்துள்ளேன். இளைஞர்களுக்கு நான் கூற விரும்புவது, "கனவு, கனவு, கனவு; இதனை சிந்தனை வடிவமாக்குங்கள், பின் செயலாற்ற முனைப்படுங்கள்" என்பதாகும்.

**8. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதி தலைப்பு ஒன்று தருக.**

**குறிப்புகள் : முன்னுரை - மொழிபெயர்ப்பு நூல்கள் - எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - மொழிபெயர்ப்பு கல்வி - முடிவுரை.** பிடிஏ-5

**மொழிபெயர்ப்புக் கலை**

**முன்னுரை :**

மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை நீடிக்கவிடாமல், ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு ஆகும். எங்கோ தொலைதூரத்தில் வாழும் மனிதர்கள் தங்கள் மொழியில் எழுதியவற்றை நமக்குத் தெரிந்த மொழியில் மொழிமாற்றம் செய்வதே மொழிபெயர்ப்பு ஆகும்.

**மொழிபெயர்ப்பு நூல்கள் :**

'மொழிபெயர்த்தல்' என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார். "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்ற சின்னமனூர்ச் செப்பேட்டில் உள்ள குறிப்பு சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதை புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கிய இராமாயண, மகாபாரத செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், இராவணகாவியம், வில்லிபாரதம் போன்ற காப்பியங்கள் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டன.

திருக்குறள் 107 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. புறநானூற்றை ஜி.யு. போப் மற்றும் ஜார்ஜ் எல். ஹார்ட் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். தேம்பாவணி என்ற நூல் ஆங்கிலத்தில் ஆகிர்தமரி என்பவர் எழுதிய 'தேவமாதாவின் வரலாறு' என்ற நூலைத் தழுவி வீரமாமுனிவரால் எழுதப்பட்டதாகும். இரட்சணிய யாத்திரிகம் என்ற நூல் ஆங்கில நூலாசிரியர் ஜான்பனியன் என்பவர் எழுதிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்ற நூலைத் தழுவி ஹெச். ஏ. கிருட்டிணனாரால் எழுதப்பட்டதாகும்.

மனோன்மணீயம் என்ற நூல் லிட்டன் பிரபு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலைத் தழுவி பெ. சுந்தரனார் அவர்களால் எழுதப்பட்டதாகும். இரவீந்தரநாத் தாகூர் வங்காள மொழியில் எழுதிய **கீதாஞ்சலியை** அவரே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பின்புதான் அவருக்கு **நோபல் பரிசு** கிடைத்தது.

1942இல் ஹஜிராபாக் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற இந்தி நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இதுவரை பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

**எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் :**

உலகிலுள்ள மொழிகள் அனைத்திலும் உள்ள இலக்கியங்கள் கலைகள் யாவற்றையும் தமிழ்மொழிக்கு கொண்டு வரவேண்டும் என்று பாரதியார் விரும்பினார்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்."

என்று பாரதியார் கூறுகிறார்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

உலகின் அனைத்து திசைகளுக்கும் சென்று அங்குள்ள கலைச் செல்வங்களை இங்கு கொண்டு வரவேண்டும் என்பதோடு "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்றும் கூறுகிறார்.

**மொழிபெயர்ப்புக் கல்வி :**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவை நாம் பெற முடியும். மனிதவளம், வேலைவாய்ப்புத் தளம் போன்றவற்றை விரிவாக்க முடியும். இந்திய நாடு விடுதலை பெற்ற பின்பு இங்கு அமைக்கப்பட்டுள்ள பல நாட்டுத் தூதரகங்கள் தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை கற்றுக் கொடுப்பதன் மூலம் அவரவர் மொழிகளை இங்கு அறிமுகப்படுத்துகின்றன. சில தனியார் நிறுவனங்களும் பிறமொழிகளைக் கற்றுத் தருகின்றன. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை :**

சாகித்திய அகாதெமி நிறுவனமும் தேசிய புத்தக நிறுவனமும் பல மொழிகளிலிருந்து நல்ல படைப்புகளை இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளன. கருத்துப் பரிமாற்றம், தகவல் பகிர்வு, அறநூல் அறிதல், இலக்கியம், தத்துவம் ஆகியவை மொழிபெயர்ப்பு வழியாகவே சர்வதேசத் தன்மை பெறுகின்றன. மொழிபெயர்ப்பு இல்லாவிடில், கம்பனும் ஷேக்ஸ்பியரும் பெரும் புகழோடு இருந்திருக்க முடியாது.

9. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று படைக்க.**

**குறிப்புகள் – முன்னுரை – மனித வாழ்வு அறம் சார்ந்தது – இலக்கியம் காட்டும் அறம் – அறத்தான் வருவதே இன்பம் – அறவாழ்வே பண்பாட்டின் உச்சம் – அறம் என்பதே மனிதம் – முடிவுரை.** பிடிஎ–2,6

**முன்னுரை :**

பண்டைத் தமிழர் இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாக வாழ்ந்தனர். ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானது வேறு எதுவும் இல்லை. அறம் மக்களுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் நல்கும்.

**மனித வாழ்வு அறம் சார்ந்தது :**

மனித வாழ்வானது அறத்தை சார்ந்தே அமைந்துள்ளது. தர்மங்களைச் செய்வது போல நன்மை தரக்கூடியது எதுவுமில்லை. தர்மங்களைச் செய்யாமல் விடுவதால் ஏற்படக்கூடிய தீமையைப் போல எதுவுமில்லை. இப்பிறப்பில் அறம் செய்தால் அடுத்த பிறவியில் நன்மை கிடைக்கும் என்ற நோக்கத்தோடு அறம் செய்யக்கூடாது. போர் செய்வதில்கூட அறநெறியைப் பின்பற்றியவர்கள் நம் தமிழர்கள். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோரை எதிர்த்து போர் செய்யக்கூடாது என்று குறிப்பிடுகிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வனைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று சங்கப்பாடல் குறிப்பிடுகிறது.

அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தாலும், ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும், நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன. அறம் செய்த வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்" 'பசிப்பிணி மருத்துவன்' என்றெல்லாம் போற்றப்பட்டனர். பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் நீக்கிவிட்டு செய்கின்ற அனைத்துக் காரியங்களுமே அறங்களே ஆகும் என்று வள்ளுவர் அறத்திற்கு இலக்கணம் கூறியுள்ளார். பிறர் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கி தம் துன்பமாகக் கருதி உதவி செய்தல் சிறந்த அறமாகும் என்று நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

**இலக்கியம் காட்டும் அறம் :**

சங்க இலக்கியங்களில் அரசியல் அறம், போர் அறம், கொடை அறம், வணிகத்தில் அறம் போன்றவற்றை மேற்கொண்டு வாழ்ந்தமை குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளன. மன்னர்களுடைய அறத்தின் குறியீடுகளாக செங்கோலும் வெண்கொற்றக் குடையும் போற்றப்பட்டன. நீர்நிலைப் பெருக்கி, நிலவளம் கொண்டு உணவுப் பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமைகளாகக் கூறப்பட்டுள்ளன. குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார். அரசன் அறநெறியில் ஆட்சி புரிவதற்கு உதவிய அமைச்சர்களை 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று மாங்குடி மருதனார் போற்றுகிறார். அறம் கூறும் அவையங்கள் இருந்தமை குறித்து 'மதுரைக்காஞ்சி' குறிப்பிட்டுள்ளது.

**அறத்தான் வருவதே இன்பம் :**

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல"

என்று வள்ளுவர் கூறியுள்ளார். அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். மற்ற வகையில் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை; புகழும் அற்றவை.

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் என்ற நான்கிற்கும் ஒரு சிறிதும் இடம் தராமல் வாழ்ந்து வருவதே அறமாகும். இல்லாதவர்க்கு கொடுத்து வாழ்வது அறங்களுள் சிறந்த அறமாகும். அரியன என்று தயங்காது கொடுத்தல், ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாது கொடுத்தல், நாள்தோறும் கொடுத்தல் ஆகியவை கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன.

**அறவாழ்வே பண்பாட்டின் உச்சம் :**

இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கின்றி அறம் செய்ய வேண்டும். பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி அறம் செய்ய வேண்டும். சான்றோர்களால் செல்வம் என்று குறிப்பிடப்படுவது, தம்மை அடைக்கலமாகத் தேடி வந்தவரின் துன்பத்தைத் தீர்க்க உதவுவதே ஆகும்.

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. மெய் பேசும் நா, மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது. நிலம் புடை பெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது என்பது நம் பண்பாட்டின் முக்கியக் கூறாகும். உலகமே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்யாதிருப்பதே நம் பண்பாட்டின் உயர்ந்த அறமாகும்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**அறம் என்பதே மனிதம் :**

சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். சமயக் கலப்பில்லாத மானிட அறம் சங்க காலத்தில் நிலவியது. சமூக கடலின் ஒரு துளியாக விளங்கும் மனிதன் அனைவருடனும் அனைத்து உயிரினங்களுடனும் தன்னை இணைத்துக் கொண்டு பொது விதியான அறத்தை ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, தான் இருக்க வேண்டிய நிலை எதுவென்பதை மனிதன் உணர்கிறான். இனிய சொற்களைப் பேசி, நடுவுநிலைமை தவறாமல் அடக்கம், ஒழுக்கம், அருள் ஆகிய பண்புகளைப் பின்பற்றி, கைம்மாறு கருதாமல் உதவி செய்து வாழ்வதே மனிதம் ஆகும்.

**முடிவுரை :**

தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது. முதல் தரமான அறத்தை அறிந்து செயல்பட்டால் மனிதகுலம் மேன்மையடையும்.

10. **முன்னுரை – திண்ணைப் பள்ளிக்கூடம் – அரசுப் பள்ளிகள் – மேல்நிலைக் கல்வி – கல்லூரி பல்கலைக் கழகங்கள் – அறிவியல் தொழிற்நுட்பப் பயன்பாடு – கல்வி இணை செயல்பாடுகள் – இலவச படிப்புதவிப் பொருட்கள், நிதி உதவிகள், மாணவர் மேம்பாடு – முடிவுரை.** இரண்டாம் தி.தேர்வு 2022

**கல்வி நிலையங்களின் படிநிலைகள்**

**முன்னுரை :**

கல்வியே ஒரு மனிதனை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை. கல்வி கற்றவன் போற்றப்படுகிறான்; கற்காதவன் தூற்றப்படுகிறான். அத்தகு கல்வி குருகுலக்கல்வி, திண்ணைப் பள்ளிக்கூடம், அரசுப் பள்ளிக்கூடங்கள் பலதிறப்பட்ட பள்ளிகள் வாயிலாக அளிக்கப்பட்டுள்ளதை மெய்ப்பிக்கும் கட்டுரையைக் காண்போம்.

**திண்ணைப் பள்ளிகள் :**

மாணவனைத் தண்டிப்பதன் மூலம் தான் நல்ல கல்வியைக் கொடுக்க முடியும் என்பது அக்காலக் கல்விமுறையின் உறுதியான நம்பிக்கை ஆகும். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று வள்ளுவர் கூறுகிறார். ஆம்! அக்காலத் திண்ணைப் பள்ளிகளில் தமிழும் கணக்கும் மட்டுமே கற்பிக்கப்பட்டன. நீதி நூல்கள் மூலம் ஒழுக்கத்தைக் கற்பித்தனர். கணக்குப் பாடத்திற்கான வாய்பாடுகளையும் மனனம் செய்யும் முறையிலேயே கற்பித்தனர். ஆசிரியரின் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தே கல்வி கற்றனர்.

**அரசுப் பள்ளிகள் :**

ஏழை, எளியவர், செல்வந்தர் என்ற வேறுபாடுகள் இன்றி கற்கும் விதமாகவே அரசுப்பள்ளிகள் உருவாக்கப் பட்டன. இங்கு தொடக்கப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி எனப் பல்வேறு விதமான பள்ளிகள் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களுக்கு கட்டாய இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது.

**கல்லூரி, பல்கலைக்கழகங்கள் :**

மேல்நிலை வகுப்புகளில் மாணவர்கள் உயர்கல்வி எப்பாடத்தில் படிக்க விரும்புகின்றனரோ அப்பாடத்தின் அடிப்படை பாடங்கள் போதிக்கப்படுகின்றன. கல்லூரிகளில் பொறியியல், மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், கலை மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளில் கற்பிக்கப்படுகிறது. கல்லூரிகள் அரசுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிப் பல்கலைக்கழகங்களின் கீழ் செயல்படுகின்றன.

**அறிவியல் தொழில்நுட்பப் பயன்பாடு :**

அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் இந்தியா முக்கியமானதொரு அறிவு சக்தியாக உருவாகும் என்பதில் ஐயமில்லை. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் நுண்ணுயிரியல், பெருங்கடல் ஆய்வு, விண்வெளி ஆய்வு, அணு மின்னியல் ஆய்வு, மின்னணுவியல் ஆய்வு, சுற்றுப்புறம் மற்றும் வனவியல் பற்றிய ஆய்வு, மருத்துவ ஆராய்ச்சி எனப் பல வகையான துறைகள் செயல்படுத்தப்படுகிறது. இவை மட்டுமின்றி நீர்ப்பாசனம் மற்றும் மின்சக்தி போன்ற துறைகளும் செவ்வனே செயலாற்றுகிறது.

**கல்வி இணை செயல்பாடுகள் :**

பள்ளியில் மாணவர்கள் கற்றல் திறன் பெறுவதற்காகவும் சமூகச் சிக்கல்களை எதிர் கொள்வதற்காகவும், நல்லொழுக்கம் பெறுவதற்காகவும் கல்வி இணை செயல்பாடுகள் பயன்படுகின்றன. ஒழுக்கத்தைப் போதிக்க நீதிக்கதைகள் கூறுதல், நோய்கள் பற்றிய விழிப்புணர்வு, சுகாதாரக் கல்வி அளித்தல், சுற்றுப்புறத் தூய்மை பற்றி கற்றுத்தருதல். இயல், இசை, நாடகம் பற்றி மாணவர்கள் அறியச் செய்தல் பொம்மை செய்தல், கூடை பின்னுதல் போன்ற கைவினைக் கலைகளைக் கற்றுத் தருதல் போன்றவற்றால் மாணவர்கள் தன்னைப்பற்றியும் சமூகத்தைப் பற்றியும் அறியும் வாய்ப்பை பெறுகின்றனர்.

**மாணவர் மேம்பாடு :**

அரசாங்கம் மாணவர்களின் கல்விநிலையை மேம்படுத்த பலவிதமான இலவசப் பொருட்களையும் ஊக்கத்தொகையும் அளித்து வருகிறது. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குச் சீருடை, காலணி மற்றும் புத்தகங்கள் வழங்குகிறது. இடைநிலை,உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கும் விலையில்லாப் புத்தகங்கள், இலவச மிதிவண்டி, இலவச மடிக்கணினி போன்றவற்றையும் வழங்குகிறது. இவற்றை மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டு மேம்பட்டவர்களாகத் திகழ வேண்டும்.

**முடிவுரை :**

கல்லாதவன் மனது 'இருளின் உறைவிடம்', கற்பதற்கான காலம் 'இளமைப்பருவம்' என்பதை அனைவரும் உணர வேண்டும். வசதியற்றவர்களுக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்து அவர்களையும் கற்கச் செய்வோம். கல்வியில் சிறந்த நாடாக உருவாக்குவோம்.

11. **முன்னுரை – செய்திகள் அறிதல் – பயன்பாடு – செய்திகள் பெறும் வகைகள் – செய்தித்தாள்கள் – வார மாத இதழ்கள் – வானொலிப் பயன்பாடு குழு விவாதங்கள் – வாழ்வியல் மாற்றங்கள் – வாசிப்பை நேசிப்போம் – இல்லம் தோறும் நூலகம் – முடிவுரை.** இரண்டாம் தி.தேர்வு 2022

**முன்னுரை :**

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' அது போல 'அறிவில்லா உயிருக்கு வாழ்க்கை பாழ்' நம் வாழ்க்கையைச் சோலைவனமாக மாற்றக்கூடியது நாம் பெறும் அறிவுதான். அத்தகைய அறிவினைச் செய்தித்தாள்களைப் படித்தும், வானொலி, தொலைக்காட்சி மூலமாகவும், பள்ளிப் பாடங்களைக் கற்றும் அனுபவத்தின் மூலமாகவும் பெறுகிறோம்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

## சுராவின் மாதிரி வினாத்தாள் - 1

10ஆம் வகுப்பு

**புதிய பாடநூலின்படி (குறைக்கப்பட்ட இயல்) தயாரிக்கப்பட்டது**

# தமிழ்

**நேரம் : 15நிமிடம் + 3.00 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு : (i)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**(ii)** கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [15 × 1 = 15]

1. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?
அ) பாவாணர் ஆ) கால்டுவெல்
இ) இரா. இளங்குமரனார் ஈ) திரு.வி.க

2. பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?
அ) வானத்தையும் பாட்டையும்
ஆ) வான்வெளியில், பேரொலியில்
இ) வானத்தில், பூமியையும்
ஈ) வானத்தையும் பேரொலியையும்

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -
அ) எந் + தமிழ் + நா
ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா
ஈ) எந்தம் + தமிழ் + நா

4. <u>'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்'</u> நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -
அ) இலையும் சருகும்
ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும்
ஈ) சருகும் சண்டும்

5. காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது -
அ) சுட்டி ஆ) கிண்கிணி
இ) குழை ஈ) சூழி

6. குளிர்பதனப் பெட்டியிலிருந்து வெளிவரும் நச்சுக்காற்று ..................
அ) குளோரா புளோரோ கார்பன்
ஆ) கந்தக டை ஆக்ஸைடு
இ) நைட்ரஜன் டை ஆக்ஸைடு
ஈ) கார்பன் டை ஆக்ஸைடு

7. செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி 3 - இந்தியாவிற்குத் தேவையான மழை அளவில் எழுபது விழுக்காடு மழையைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.
அ) செய்தி 1 மட்டும் சரி
ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி
ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

8. படர்க்கைப் பெயரைக் குறிப்பது எது?
அ) யாம் ஆ) நீவிர்
இ) அவர் ஈ) நாம்

9. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ..................
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

10. 'காலம் கரந்த பெயரெச்சம்' என்பது -
அ) வினைத்தொகை
ஆ) உம்மைத்தொகை
இ) பண்புத்தொகை
ஈ) அன்மொழித்தொகை

11. போரில் வெற்றி பெற்ற மன்னன் சூடிக்கொள்ளும் பூவைத் தேர்க.
அ) கரந்தைப் பூ ஆ) வாகைப் பூ
இ) தும்பைப் பூ ஈ) நொச்சிப் பூ

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்

12. இப்பாடலடிகள் இடம்பெற்ற நூல் ............. .
அ) விவேகசிந்தாமணி
ஆ) நீதிவெண்பா
இ) காசிக்காண்டம்
ஈ) சுந்தரகாண்டம்



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.**

[3 × 8 = 24]

43. (அ) நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக

(அல்லது)

(ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

44. (அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப் பகுதி கொண்டு விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

45. (அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

(அல்லது)

(ஆ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

☆ ☆ ☆

www.Padasalai.Net

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

## சுராவின் பயிற்சி மாதிரி வினாத்தாள் - 2

10ஆம் வகுப்பு

புதிய பாடநூலின்படி (குறைக்கப்பட்ட இயல்) தயாரிக்கப்பட்டது

# தமிழ்

நேரம் : 15நிமிடம் + 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு : (i)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**(ii)** கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [15 × 1 = 15]

1. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ........... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்........
   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
   இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்
2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது -
   அ) குலைப்பெயர் வகை ஆ) மணிப்பெயர் வகை
   இ) கிளைப்பெயர் வகை ஈ) இலைப்பெயர் வகை
   ஈ) தெலுங்கு, ஆங்கில
3. மருத நிலப்பகுதிக்கு அழகு சேர்ப்பன :
   அ) புல்வெளிகள் ஆ) விலங்கினங்கள்
   இ) நீர் நிலைகள் ஈ) மரம் செடிகள்
4. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ..................
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
5. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டுவிழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது - இத்தொடருக்கான வினா எது?
   அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?
   ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?
   இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?
   ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?
6. புறத்திணை ..................... வகைப்படும்.
   அ) ஏழு ஆ) ஐந்து இ) பன்னிரண்டு ஈ) ஆறு
7. அறிவிற் சிறந்த புலவருக்காகத் தூது சென்றவன்................
   அ) மன்னன் ஆ) இறைவன் இ) புலவன் ஈ) சிறுவன்
8. 'மெய்முறை' என்பதன் இலக்கணக் குறிப்பு -
   அ) உவமைத் தொகை ஆ) உரிச்சொல்
   இ) வேற்றுமைதொகை ஈ) வினைத்தொகை
9. 'கானனுக்கும் கபிலனுக்கும்' என்பதன் இலக்கணக் குறிப்பு -
   அ) உவமைத் தொகை ஆ) எண்ணும்மை
   இ) வேற்றுமைதொகை ஈ) வினைத்தொகை
10. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் .................
    அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
    இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
11. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ...........
    அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## பகுதி - III (மதிப்பெண்கள் : 18) - பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** [2 × 3 = 6]

29. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

30. விருந்தோம்பல் பற்றிக் கம்பரும் செயங்கொண்டாரும் குறிப்பிடுபவை எவை?

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு

ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது: ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.

**வினாக்கள் :**

அ) பேசும்போதே மொழிபெயர்ப்பது என்னவென்று சொல்லப்படுகிறது?

ஆ) ஐ.நா. அவையில் மொழிபெயர்ப்பாளர் எங்கு இருப்பார்?

இ) மொழிபெயர்ப்பாளர் எவ்வாறு மொழிபெயர்த்துப் பேசுவார்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** [2 × 3 = 6]

32. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34. அடிபிறழாமல் எழுதுக.

'வெய்யோன்' எனத் தொடங்கும் கம்பராமாயண மனப்பாடப் பகுதியை எழுதுக.

(அல்லது)

'நவமணி' எனத் தொடங்கும் தேம்பாவணி மனப்பாடப் பகுதியை எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** [2 × 3 = 6]

35. தன்மைப் பெயர்களை அட்டவணைப்படுத்துக.

36. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல்; கண்ணென்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. சொற்பொருள் பின் வருநிலையணியைச் சான்று தந்து விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** [5 × 5 = 25]

38. (அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
(அல்லது)

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. (அ) கொரோனா பெருந்தொற்று ஊரடங்குக் காலத்தில் உங்கள் நேரத்தை எவ்வாறு பயனுறக் கழித்தீர்கள் என்பதை நண்பனுக்கு விவரித்துக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) மாற்றுச் சான்றிதழ் கோரித் தலைமை ஆசிரியருக்குக் கடிதம்.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கதையாக்குக.

மனித வாழ்வில் ஒவ்வொருவரும் நாளும் நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்; புதுப்புதுச் செய்திகள் கிட்டும்! கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக...இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.

42. (அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகள் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவைபோன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தனைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** [3 × 8 = 24]

43. (அ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

(அல்லது)

(ஆ) போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

44. (அ) "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) எம்.எஸ்.சுப்புலட்சுமி, பால சரஸ்வதி, ராஜம் கிருஷ்ணன், கிருஷ்ணம்மாள் ஜெகநாதன், சின்னப்பிள்ளை ஆகியோர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக.

45. (அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

(அல்லது)

(ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com